# ஞானச்சுடர்






பங்குனி 2016

219 ஆவது மலர்



வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை



# குறள் வழி

**நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர்**
**பயனில சொல்லாமை நன்று.**

**பொருள் :** அறிவுடையோர் சிறப்பில்லாத சொற்களைச் சொன்னாலும் பயனில்லாத சொற்களைச் சொல்லாதிருத்தல் நல்லது.

(197)

**அரும்பய னாயு மறிவினார் சொல்லார்**
**பெரும்பய னில்லாத சொல்.**

**பொருள் :** அறிதற்கரிய பயன்களை ஆராயவல்ல அறிவுடையார் மிக்க பயனில்லாத சொற்களைச் சொல்லார்.

(198)

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

## முத்தி நல்குமே

### ஓதுக அதுநாம் ஓம்தத் சத்ஓம்




கற்பனை கடந்த வற்புதன் கமலப்
பொற்றுணை மலரடி போற்றி யுலகில்
நிற்பதும் நடப்பது மாய வுயிரெலாம்
சிக்கன வாழ்வுறச் சிந்தைசெய் வோமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 59

காரா ராணவக் காட்டைத் திருத்திப்
பாரார் விண்ணோர் பரவுஞ் சிவமெனும்
பேரார் வித்தை யிட்டுப்பே ரின்பமாம்
சீரார் தெவிட்டாக் கனியருந் துவமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 60

கிஞ்சுக வாயுமை கேள்வனை யமரர்
சஞ்சலந் தீர்த்த சற்குரு நாதனை
நெஞ்சக மலரிடை நினைந்து நாடொறும்
வஞ்சனை கோபம் பொறாமைமாய்ப் போமே
ஓதுக வதுநாம் ஓம்தத் சத்ஓம் 61

# ஞானச்சுடர்



வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ

# ஞானச்சுடர்

வெளியீடு - 2 சுடர் - 219

2016 பங்குனி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| சிதம்பர இரகசியம் | ஆர்.வீ. கந்தசாமி | 01 -03 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 04 -07 |
| மகா சிவராத்திரி | பாலன் சுதாகரன் | 08 -12 |
| தமிழ்ப் பண்பும்... | திருமதி ந. பரமேஸ்வரி | 13 -15 |
| ஸ்ரீ ரமண நினைவலைகள் | தொகுப்பு | 16 -18 |
| காலனும் ஏமாந்தான் | செல்வி பா. வேலுப்பிள்ளை | 19 -21 |
| திருவருட்பயன் | ஆ. ஆனந்தராசன் | 22 -24 |
| ஆருக்கு ஐயா அக்கறை | முருகவே பரமநாதன் | 25 -28 |
| பகவத்கீதையின் உலகம்... | பூ. சோதிநாதன் | 29 -31 |
| முக்காலத்தையும்... | கே.எஸ். சிவஞானராஜா | 32 -35 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 36 -37 |
| எறிபத்த நாயனார் | அ. சுப்பிரமணியம் | 38 -40 |
| விதுரநீதி | இரா. செல்வவடிவேல் | 41 -44 |
| படங்கள் தரும் பதிவுகள் | சந்நிதியான் ஆச்சிரமம் | 45 -48 |
| இலட்சிய வாழ்வு | பொ. கந்தையா | 49 -51 |
| ஈழநாட்டில் இந்துமத... | த. துரைராஜா | 52 -54 |
| வம்சங்களும் வரலாறுகளும் | இராம. ஜெயபாலன் | -55 |
| சித்தர்களின் ஞானம் | சிவ. மகாலிங்கம் | 56 -60 |
| கண்டோம் கதிர்காமம் | அன்னைதாசன் | 61 -62 |


வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

# ஞானச்சுடர்
# மாசிமாத வெளியீடு

**வெளியீட்டுரை:-**

சந்நிதிவேற் பெருமான் அருளினூடாக 218ஆவது மாதாந்த வெளியீடாக வெளிவந்து கொண்டு இருக்கும் மாசிமாத சுடருக்குரிய வெளியீட்டுரையினை இளைப்பாறிய ஆசிரியை திருமதி புனிதவதி சண்முகலிங்கம் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தம் உரையின்கண்ணே தற்கால நிலையில் நமது சமூக மட்டத்தில் இடம்பெற்று வருகின்ற பலவிதமான செயற்பாடுகளுக்கு எமது வாழ்வுக்கு அடிநாதமாக விளங்கும் அன்புசார் நடவடிக்கையும் அதன்மூலம் வெளிப்படும் ஆன்மீக சிந்தனையும் அருகிக்கொண்டே போவது ஒரு காரணம் என்று கூறியதோடு இத்தகைய செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு அனைத்துச் சமய நிறுவனங்கள் ஒன்றிணைய வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாக உள்ளது. இதனை நடைமுறைப்படுத்த நாம் அனைவரும் ஒன்றுபட வேண்டும் எனும் கோரிக்கையினை முன்வைத்தார்.

ஞானச்சுடர் வெளிவந்த காலம் முதல் இம்மலர் வெளியீட்டில் பங்குபற்றுவதோடு சந்நிதி வேலவனையும் வந்து வழிபடுவதற்கும் இவ்வெளியீடு பேருதவியாக அமைகிறது என்று கூறி தனது வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்.

**மதிப்பீட்டுரை:-**


மாசிமாத ஞானச்சுடர் மலருக்குரிய மதிப்பீட்டுரையினை யாழ் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் அவர்கள் மேற்கொண்டார்கள்.

அவர் தனது மதிப்பீட்டுரையில் ஆச்சிரமம் ஆற்றும் பல அறப்பணிகளின் தன்மை பற்றிய தனது கருத்துக்களை முன் வைத்ததோடு கடந்த வருடம் மலையக மண்சரிவின்மூலம் மலையகத்தில் இடம்பெற்ற அனர்த்தங்களின் விளைவாக ஆச்சிரமம் ஆற்றும் சமூக சமயப் பணிகளை மலையகம் எங்கும் பரந்துபட்ட செயற்பாடாக நடைமுறைப்படுத்தி வருவது போற்றத்தக்க விடயம்.

இத்தகைய செயற்பாடுகளோடு நின்றுவிடாது மாதம் ஒரு மலர் வெளியீட்டினை ஒழுங்குபடுத்தி அம்மலர் வெளியீடும் ஆன்மீகம் சம்பந்தமாகவும் 218ஆவது வெளியீடாகவும் அமைவது என்பது சாதாரண விடயமன்று. இவற்றுக்கெல்லாம் மூலகாரணமாக விளங்கும் சந்நிதி வேற்பெருமானை நாமும் பிரார்த்தித்து இங்கே இடம்பெறும் அனைத்துச் செயற்பாடுகளும் மென்மேலும் பிரகாசிக்க வேண்டும் என்று கூறியதோடு மலரில் இடம்பெற்ற ஆக்கங்களின் தன்மைபற்றி சபையில் உள்ள அனைவருக்கும் கூறியதுடன் தனது மதிப்பீட்டுரையினை இனிதே நிறைவு செய்தார்.

# சுடர் தரும் தகவல்

ஆற்றங்கரை வேலவனின் அருளைப்பெற்று அவனுடன் இரண்டறக் கலந்து பேரின்பம் பெற்ற அருளாளர் வரிசையில் வைத்து மதிப்பிடக் கூடிய நடமாடும் தெய்வமாக வாழ்ந்து வழி காட்டியவர்தான் முருகேசு சுவாமிகள். இவர் மக்களை பக்தி மார்க்கத்தில் ஈடுபடுத்தி தர்ம வாழ்க்கையில் வழிப்படுத்தி ஆற்றிய தொண்டினை அவரின் காலத்தில் வாழ்ந்த பலரும் - இன்றும் கூட வியந்து பாராட்டி வாழ்த்தி நிற்பதைக் காதாரக் கேட்கிறோம்.



முருகேசு சுவாமிகளின் பெருமுயற்சியினால் 05.05.1995இல் ஆரம்பிக்கப்பட்ட சந்நிதியான் ஆச்சிரமம் எந்தக் குறைவுமின்றி நிறைவாக வளர்ச்சி பெற்று வருவது குறிப்பிட வேண்டியதாகும். சைவ சமயத்திற்கும், தமிழுக்கும் பெருமை சேர்த்த 63 நாயன்மார்களை நினைவுகூரும் "அறுபத்துமுவர் பூசையை" முதன் முதலாக சந்நிதியான் ஆச்சிரமத்தில் தோற்றுவித்த பெருமையும் முருகேசு சுவாமிகளுக்கே உரியதாகும். அத்துடன் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் பணிகள் அத்தனைக்கும் உந்து சக்தியாகத் திகழ்ந்தவர் அவர்.

செல்வச்சந்நிதி ஆலயத்தின் புனரமைப்புப் பணிகள், சிறப்பான - நேர்த்தியான பூசை முறைகளை நெறிப்படுத்தியவரும் அவரே. 23.05.1920இல் அவதரித்த முருகேசு சுவாமிகள் 16.03.1997இல் இறைவன் திருப்பாதங்களைச் சென்றடைந்தார்.

13.04.2016 புதனன்று முருகேசு சுவாமிகளின் குருபூசை தினம் சந்நிதியான் ஆச்சிரமத்தில் பக்திபூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது. சுவாமிகளால் ஆரம்பிக்கப்பட்ட கும்பாபிஷேக தின நிகழ்வு செல்வச்சந்நிதி ஆலயத்தில் 08.04.2016 வெள்ளியன்று நடைபெறவுள்ளது.

# தொண்டைமானாறு செல்வச்சந்நிதி எழுந்தருளும் திருமுருகனின் பிள்ளைத்தமிழ்

## 1. காப்புப் பருவம்

(தொடர்...

சமய குரவர் சந்தான குரவர்

திருஞான சம்பந்தர்
திருநாவுக் கரசருடன்
திருநம்பி யாருரரைத்
திருவா சகஞ் செய்த
திருவாத வூரரையும்
திருவளர்சண் டேசுரரையும்
ஒருநல்ல மெய்கண்டார்
அருணந்தி மறை ஞானர்
ஒருமா பதி சிவத்தார்
உற்ற சிவ முனிவரர்கள்
அடியார்கள் திருவடியை
ஒருமையாய் வாழ்த்து வேனே
மரு வாரும் யாழ்ப்பாண
மாதொண்டை மானாற்றில்
மாசெல்வச் சந்நிதியில் வாழ்
மாப்பிள்ளை வேற்பிள்ளை
மயில்வா கனப் பிள்ளை
மகிழ்தருங் குறிஞ்சிப் பிள்ளை
குருவா யிருந்து பல
அடியவர்க் குபதேசஞ்
செய்திடும் குமாரப் பிள்ளை
குறித் தடியர் வினை தீர்ந்து
கும்பிட வைத்திடு மந்தக்
குழந்தையைக் காக்க வென்றே.

*-அமரர்: முதுபெரும்புலவர் வை.க. சிற்றம்பலம் அவர்கள்-*

# பங்குனிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**R. கிருஸ்ணசிவம்**
(அவுஸ்திரேலியா)

**இ. சங்கரலிங்கம்**
(அம்மன் பல்பொருள் வாணிபம், ஊரெழு கிழக்கு)

**இராமசாமி திருச்செல்வம்**
(தலைவர், பர்வபத்தினி அம்பாள் தேவஸ்தானம்)

**அ. வரதராசா**
(வரியப்புலம் வீதி, சுண்ணாகம்)

**வே. நடராசா**
(தும்பளை மேற்கு)

**சி. கிருஷ்ணபிள்ளை J.P.**
(ஆவரங்கால்)

**பொதுமுகாமையாளர்**
(வலி. கிழக்கு வடபகுதி ப.நோ.கூ. சங்கம், அச்சுவேலி)

**பொதுமுகாமையாளர்**
(பனை, தென்னை வள அபிவிருத்தி கூ. சங்கம், அச்சுவேலி)

**சி. குமாரலிங்கம்**
(இளைப்பாறிய வங்கியாளர், யாழ்ப்பாணம்)

**செ.க. செல்வநாயகம்**
(செல்வா ஸ்ரோர்ஸ், ஆவரங்கால்)

**சோமசுந்தரம் செல்வக்குமார்**
(சண்சில்க் றைக்கிளின் சென்ரர், G.P.S. றோட், கல்வியங்காடு)

**கி. இராஜதுரை அதிபர்**
(சிதம்பராக்கல்லூரி, வல்வெட்டித்துறை)

**ஜீ. ஜெயப்பிரகாஸ்**
(ஆறுமுகம் சிற்பாலயம், திருநெல்வேலி)

**யோ. சிவஉமாகரன்**
(உயர் பட்டபடிப்புப்பீடம், யாழ் பல்கலைக்கழகம்)

சி. கணபதிப்பிள்ளை (தலைவர்)
(பிரதேச உறுப்பினர், கரவெட்டி)

கு. செல்வரெத்தினம்
(நிக்ஷன் பல்பொருள் வாணிபம், அச்சுவேலி)

வ. துரைராசா
(ஒஸ்காவீதி, உரும்பராய் தெற்கு)

S. விமலராசா
(தேவாலயவீதி, சங்கானை)

M.B. முருகதாஸ் (கல்யாணி)
(வல்வெட்டித்துறை)

சி. வல்லிபுரம்
(தும்பளை, பருத்தித்துறை)

சபா இரத்தினசிங்கம் J.P.
(சபா றேடர்ஸ், அச்சுவேலி)

V. பரமானந்தம்
(கொள்வனவு உத்தியோகத்தர், பருத்தித்துறை ப.நோ.கூ. சங்கம்)

K. கேதீஸ்வரநாதன்
(புன்னாலைக்கட்டுவன் தெற்கு)

சு. மகேஸ்வரன்
(மாரியம்மன் மோட்டோர்ஸ், கோப்பாய்)

தம்பிப்பிள்ளை குணரட்ணம்
(சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி)

S. திருவாஞ்சீஸ்வரன்
(V.S.K. மானிப்பாய்)

த. விவேகானந்தராசா
(டச்றோட், சித்தங்கேணி)

இ. புஸ்பநாதன்
(S.R.P. ஸ்ரோர்ஸ், சங்கானை)

அ. கோணேஸ்கரன்
(தில்லையம்பதி, கோண்டாவில்)

இ. சந்திரசேகரன்
(மாசியப்புலம் வீதி, ஏழாலை)

**சி. அழகேசன்**

(வட்டுவினி அம்மன் கோவிலடி, இணுவில்)

**க. தர்மநாயகம்**

(மஞ்சத்தடி, இணுவில்)

**பொ. ஞானப்பிரகாசம்**

(கரணவாய் தெற்கு)

**உரிமையாளர்**

(கண்ணாடி களஞ்சியம், நெல்லியடி)

**இ. வீரசிங்கக்குருக்கள்**

(கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு)

**அதிபர்**

(கம்பர்மலை அ.த.க. பாடசாலை)

**அதிபர்**

(உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி)

**திருமதி சி. தருமலிங்கம்**

(இமையாணன், உடுப்பிட்டி)

**ஆனந்தராசா சீதா**

(ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை)

**கி. அருள்நாதர்**

(பாலாவி தெரு, பொலிகண்டி)

**சறோஜினிதேவி மாணிக்கராசா**

(வறாத்துப்பளை, பருத்தித்துறை)

**கந்தையா காசிராசா**

(குப்பிளான் தெற்கு)

**மார்க்கண்டு முத்துப்பிள்ளை**

(அத்தியடி, யாழ்ப்பாணம்)

**திருமதி V. கௌரி**

(கோயில் வீதி, நல்லூர்)

**லலிதா சண்முகலிங்கம்**

(திருமகள் வீதி, அரியாலை)

**சி. விவேகானந்தம்**

(பருத்தித்துறை)

**K. பிரதீபன்**
(யாழ்ப்பாணம்)
**ஐ. காளிங்கநடனம்**
(கொக்குவில்)
**பா. சிவதர்ஷினி**
(கலையகம், அல்வாய்)
**க. ஜெயபாலகணேசன்**
(சிறுப்பிட்டி தெற்கு)
**Dr. அ. செந்தில்குமரன்**
(பல் வைத்திய நிபுணர், ஆதார வைத்தியசாலை, மந்திகை)
**இ. பாஸ்கரன்**
(நல்லூர், யாழ்ப்பாணம்)
**த. சிவானந்தன்**
(சண்டிலிப்பாய் வடக்கு)
**சி. பத்மகுமார்**
(இணுவில் தெற்கு)
**அதிபர்**
(இமையாணன் அ.த.க. பாடசாலை)
**பா. சுதாகரன்**
(கற்பகப் பிள்ளையார் ஸ்ரோர்ஸ், உரும்பராய்)
**வ. கெங்கநாதன்**
(நீர்வேலி)
**P. நடராசா**
(கல்லடி ஒழுங்கை, சாவகச்சேரி)
**சி. சிவகுமார்**
(ஆவரங்கால்)
**S. முரளிதரன்**
(அச்சுவேலி)
**V. கருணாகரன்**
(சங்கானை)
**வி. யோகேஸ்வரி**
(ஐயனார் வீதி, பருத்தித்துறை)
**சண்முகம் தனலட்சுமி**
(கரணவாய்)
**வ. இரத்தினசிங்கம்**
(கம்பர்மலை)

# சிதம்பர இரகசியம்

– திரு ஆர்.வீ. கந்தசாமி அவர்கள் –

நம் முன்னோர்கள் ஏதும் ஒரு விளங்காத, புரியாத விடயத்தைக் கூறும்போது இது என்ன? சிதம்பர இரகசியமாக இருக்கிறதே எனக் கூறுவர். அதற்கான காரணங்கள் இக் கட்டுரையை வாசித்து ஓர் அளவு அறிந்து கொள்ளலாம்.

| | |
|---|---|
| வைணவர்களுக்கு | ஸ்ரீரங்கம் |
| சீக்கியர்களுக்கு | பொற்கோவில் |
| கிறிஸ்தவர்களுக்கு | ஜெருசலம் |
| முஸ்லீம்களுக்கு | மெக்கா, மதினா |
| இந்துக்களுக்கு | காசி |

இவைகள் எவ்வளவு சிறப்பான தலங்களாகக் கருதப்படுகின்றதோ அதேபோல சைவசமயத்தவர்கட்கு கோவில் என்றால் சிதம்பர நடராஜர் கோவில் சிறப்பானதும் பெருமைக் குரியதுமாகும்.

இந்தக் கோவில் சுமார் 40 ஏக்கர் விஸ்தீரணம் உள்ள நிலப்பரப்பில் அமைந்துள்ளது. பஞ்சபூத சிவத்தலங்களில் சிதம்பரம் ஆகாயம் என்னும் சிறப்பிற்குரியது. அதன் நான்கு பக்கக் கோபுரங்களும் சிறப்பிற்குரியதான காரணம், கிழக்குக் கோபுரம் விக்கிரமசோழ மன்னனால் கட்டப்பட்டது. இக்கோபுரத்தின் பெரும் சிறப்பு பரதநாட்டியக் கலையின் 108 முத்திரைகளைச் சிலைகளாகச் செதுக்கி அவற்றைக் கோபுரத்தின்மீது பதித்துள்ளனர்.

மேற்குக் கோபுரம் சடையவர்ம சுந்தரபாண்டிய மன்னனால் கட்டப்பட்டது. தெற்குக் கோபுரம் பல்லவ மன்னனால் கட்டப்பட்டது. வடக்குக் கோபுரம் விஜய நகர மன்னன் கிருஷ்ணதேவராயரால் கட்டப்பட்டது. தென்மேற்கு மூலையில் நின்று பார்த்தால் மட்டுமே நான்கு கோபுரங்களும் ஒருமித்துத் தெரியும்.

சிதம்பர நடராஜப் பெருமானின் கோவில் கோபுரங்கள் சோழ, பாண்டிய, பல்லவ மற்றும் விஜய நகர மன்னர்களால் கட்டப்பட்டது என்று சரித்திரக் குறிப்புக்கள் நமக்குத் தெரிவிக்கின்றன.

அத்தோடு, சிதம்பரம் கோவிலின் கிழக்குக் கோபுர வாயில் வழியாக மாணிக்கவாசகரும், தெற்குக் கோபுர வாசல் வழியாகச் சம்பந்தரும், மேற்குக் கோபுர வாசல் வழியாக அப்பரும், வடக்குக் கோபுர வாசல் வழியாகச் சுந்தரரும் நடராசப் பெருமானை வழிபட எழுந்தருளியிருக் கின்றனர்.

சிதம்பர கோயிலின் கனகசபை மண்டபம் (பொற்சபை) பதினெட்டுத் தூண்களைக் கொண்டது. இந்து சமயத்தின் ஆதாரமாக இருக்கும் வியாசர் எழுதிய 18 புராணங்கள் இந்தக் கனகசபை மண்டபத்தூண்களாக நிற்கின்றனவென என்று நாம் நினைக்கின்றோம், வியக்கின்றோம். பொன்னம்பலம் என்று போற்றப்படும் நடராசப் பெருமான் சந்நிதியின் மேற் கூரை முழுவதும் தங்கத்தினால் வேயப்பட்டது.

ஆடல் அரசனின் சந்நிதியின் மேல் கூரை 64 சட்டங்கள் (மரங்கள்) கொண்டது. ஆயகலைகள் 64 அல்லவா? கலைகள் அனைத்தும் கலை வேந்தனுக்குக் கூரையாக அமைந்துள்ளதோ என்று நாம் நினைக்கின்றோம். வியக்கின்றோம், அதிசயிக்கின்றோம்.

நடராசப் பெருமானின் சந்நிதியில் உள்ள கூரை ஓடுகள் தங்கத்தினால் செய்யப் பட்டவை. அந்தத் தங்க ஓடுகள் அனைத் திலும் "சிவாயநம" என்று பொறிக்கப்பட்டுள் ளது என "தில்லை உலா"வில் விவரிக்கப்பட்டுள்ளது. சிவபெருமானின் திருத்தலக் கூரையில் உள்ள "சிவாயநம" எனப் பொறிக்கப் பட்ட தங்க ஓடுகளின் மொத்த எண்ணிக்கை 21600 ஓடுகளாகும்.

நாள் ஒன்றிற்கு ஒரு மனிதன் சுவாசிக்கும்போது அவன் விடும் மூச்சின் எண்ணிக்கை 21600 என்று மருத்துவக் குறிப்புக்கள் கூறுகின்றன.

இதில் இருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டியது என்ன? என்பதை உணர்ந்து கொள்ளலாம். மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் நாம் சுவாசிக்கும்போது "சிவாயநம" "சிவாயநம" என்றுதான் சுவாசிக்க வேண்டும் என்கின்ற அற்புதமான தத்துவத்தை நடராஜப் பெருமானின் சந்நிதியின்மேல் கூரையில் பொருத்தப்பட்ட தங்க ஓடுகள் நமக்குத் தெளிவாகப் பாடம் சொல்லிக்கொடுக்கின்றன.

21600 தங்க ஓடுகளையும் 64 மரங்களையும் (இணைக்க) பொருத்த அடிக்கப் பட்ட ஆணிகளின் எண்ணிக்கை 72000 ஆகும். மனித உடலில் உள்ள நாடி நரம்புகள் 72000 என்று மருத்துவ மேதைகள் தெரிவிக்கின்றனர்.

பொன்னம்பலத்தின் கூரையின் தங்க ஓடுகள் மனிதனின் மூச்சையும், தங்க ஓடுகளை இணைத்த ஆணிகளின் எண்ணிக்கை மனிதனின் நாடி நரம்புகளையும் ஒத்து இருக்கும் அதிசயத்தையும் நம் முன்னோர்களின் அறிவாற்றலையும் நடராசப் பெருமானின் பெரும் திருவிளையாடலையும் மனிதர்களாகிய நாம் எண்ணி எண்ணி வியக்கின்றோம்.

மனித உடலே ஆலயம் என்னும் கருப்பொருளை தத்துவத்தை எமது வருங்கால சந்ததியினர் அறிய நமது மூதாதையரின் ஞானஒளி எவ்வளவு பிரகாசமானது? இவ்வளவு அறிவாற்றல் உள்ளவரின் வழிவழி வந்தவர்கள் என்பதை நாம் எண்ணும்போது பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

பொன்னம்பலத்தின் கூரைமீது இருக்கும் 9 கலசங்கள் 9 நவக்கிரகங்களை நினைவு படுத்துகின்றன. பரமேஸ்வரன் உலகைப் பரிபாலனம் செய்வதற்கு 9 கிரகங்களைக் கூறுவார்கள். அந்த 9 நவக்கிரகங்களை எண்ணித் தான் 9 கலசங்களை அமைத்தார்களோ என எண்ணத் தோன்றுகின்றது.

மனித உடலுக்கு 9 வாசல்கள் இருக்கின்றன. அந்த 9 ஓட்டைகள் கொண்ட உடல் என்னும் கூட்டில் இந்த உயிர் வாழுகின்றதே இந்த அதிசயத்தை நினைத்து 9 கலசங்களை அமைத்தார்களோ? ஆகாயத்தின் கீழ் எல்லாம் இருக்கின்றன. எல்லை இல்லாதது ஆகாயம். முடிவில்லாதது ஆடல் அரசின் நடனம். பத்துத் தங்கத் தூண்களின் மேல் பரமன் இருக்கின்றார். சிவபுராணங்கள் பத்தும் இங்கே தங்கத் தூண்களாக நின்று நடராசனின் நடனத்தைக் காண்கின்றன. பொன்னம் பலவாணனின் பல அம்சங்களைக் கண்டு நாம் வியக்கின்றோம்.

ஆகாயம் எல்லை இல்லாதது ஆடல் அரசனின் நடனம் முடிவில்லாதது. உலகின் இயக்கங்கள் அனைத்தும் நடராசனின் நாட்டியத்தின் ஐக்கியமே என்ற இரகசியம்தான் சிதம்பர இரகசியம் என எண்ணவேண்டி இருக்கின்றது. எல்லாம் அவன் திருவிளையாடல் என நம்புவோமாக.

*மனிதனுக்கு முக்கியமான கடமை தன் கையால் உழைத்துச் சாப்பிடல்.*

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே. -திருஞான சம்பந்தர்-

முற்றிய பேரன்பால் உள்ளுருகிக் கண்ணீர் பெருக்கெடுத்தோட ஓதுகின்றவர்களுக்கு முத்தி நலம் கொடுப்பதும், நான்கு வேதங்களின் சாரமாய் அமைவதும் ஆடல் அரனாகிய சிவ பிரானது மந்திரமாய் இருப்பதுவும் ஆகிய நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்தை ஓதி நாமும் உய்வோமாக.

**கந்தனே! கடம்பனே! வா!!**

அழகு மிகும் சந்நிதியில்,
ஆற்றங் கரைதன்னில்,
ஆலயங் கொண்ட முருகா! - நின்
கழல் போற்றித் துதிக்கின்றோம்.
கருணை கொண்டே, எம்மைக்
காத்தருள வருக! குமரா!
தொன்மை மிகும் பதியில்,
தொழும் அடியார் குறைதீர்க்க,
தோகை மயில்மீதேறிவா! - எம்
அல்லல்களைக் களைந்து
ஆறுதலைத் தந்திடவே,
ஆறுமுகா நீயோடி வா!
தேவர் குறை தீர்த்திட்ட
தெய்வமே எங்கள் குறை
தீர்த்திடத் திடங்கொண்டு வா! - எம்
பாவங்கள் தமைப் போக்கி
பன்னிரு கைகளால்
பரிவோடு அணைத்திடவா!
கல்லோடையில் இருந்து,
கருதிடும் தொண்டர்க்கு?
காட்சிதரும் கதிர்வேலவா! - தினம்
எல்லையில்லா அன்பால்
ஏற்றியே போற்றிடும்,
எம்மீதிரங்கியே வா!!
அன்னப் பசிநீக்கி,
அன்பர்கள் பிணிபோக்கி,
ஆண்டருள ஓடியேவா! - நினை
கன்னற் றமிழாலே
கனிவோடு நாம்பாடக்
கந்தனே! கடம்பனே வா!!

- கி. குலசேகரன் -

இறை நாமமே உனக்கு உற்ற துணை.

# திருச்சதகம்

(தொடர்ச்சி...

## பக்திவைராக்கிய விசித்திரம்

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

13. பவனெம் பிரான்பனி மாமதிக் கண்ணிவிண் ணோர் பெருமான்
சிவனெம்பிரா னென்னை யாண்டுகொண்டானென் சிறுமைகண்டும்
அவனெம் பிரானென்ன நானடி யேனென்ன விப்பரிசே
புவனெம் பிரான்றெரி யும்பரி சாவ தியம்புகவே.

**ப.ரை:**

பவன்- உலகத் தோற்றத்திற்கு நிமித்த காரணமாயுள்ளவனும், எம்பிரான்- எம்பெருமானும், பனி மா மதி கண்ணி- குளிர்ச்சியும் பெருமையும் பொருந்திய பிறைத்திங்களை முடிமலையாகவுடையவனும் விண்ணோர் பெருமான்- தேவர் தலைவனும், சிவன்- செம்பொருளாயுள்ளவனுமாகிய, எம் பிரான்- எங்கள் தலைவன், என் சிறுமை கண்டும்- பெரியோனாகிய தான் ஏற்றுக்கொள்ளக்கூடாத எனது இழிவரலை அறிந்திருந்தும் என்னை ஆண்டுகொண்டான்- என்னை அடிமையாக ஏற்றுக்கொண்டான்; அவன் எம்பிரான் என்ன- அத்தகைய பெரியோன் எங்கள் ஆண்டானாகவும், யான் அடியேன் என்ன- சிறியேன் அவனுக்கு அடியேனாகவுமுள்ள இப்பரிசே- இந்த ஆண்டான் அடிமைத் தொடர்பாகிய இயல்பே, புவன் எம்பிரான் தெரியும் பரிசு ஆவது இயம்புக- சிதாகாயத்திலுள்ளவனும் எங்கள் தலைவனுமாகிய இறைவனை அறிந்து கொள்ளும் தன்மை எனக் கூறுக.

பவனும் எம்பிரானும் மதிக்கண்ணியனும் விண்ணோர் பெருமானும் சிவனுமாகிய எம்பிரான் என் சிறுமை கண்டும் என்னை ஆண்டுகொண்டான். அத்தகைய பெரியோன் எங்கள் ஆண்டானாகவும் சிறியேன் அவனுக்கு அடியேனாகவும் உள்ள இந்த ஆண்டான் அடிமைத் தொடர்பாகிய இயல்பே புவனும் எம்பிரானுமாகிய இறைவனை அறிந்து கொள்ளும் தன்மையாகும் எனக் கூறுக என்பதாம்.

பவன் என்பது இறைவனது அட்டமூர்த்தீசுவரர்களது திருநாமங்களுள் ஒன்று. உலகத் தோற்றத்திற்குக் காரணமாயுள்ளவன் என்பது பொருள். இறைவன் அட்ட மூர்த்தீசுவர நாமங்களாவன: பவன், சர்வன், ஈசானன், பசுபதி, உருத்திரன், உக்கிரன், பீமம், மகாதேவன் என்பனவாம்.

பனிமாமதிக் கண்ணி- குளிர்ச்சியும் பெருமையும் பொருந்திய பிறைத் திங்களைக் கண்ணியாகவுடையவன். "பனிமாமதிச் சென்னியான்" தே.(ஞான 303:9) எனவும் "பசும்பணிக் கோடு மிலைந்தரன்" (திருக்கோவை 149) எனவும் வருவன காண்க. மா என்பது இறைவனால் அணியப்பட்ட பெருமையையுணர்த்த வந்தது. மதி என்றது ஒரு கலையாகிய திங்களை

புத்திசாலியாக இருப்பதற்கு எந்தக் காரியத்தையும் கூர்ந்து நோக்க வேண்டும்.

இதனை, "ஒற்றை வெண்பிறையானை" (தே. நாவு 233:5) எனவும், "தாரென்ன வோங்குஞ் சடைமுடிமேற் றனித் திங்கள் வைத்த, காரென்ன வாருங் கறைமிடற் றம்பலவன்" (56) என்னும் திருக்கோவையார் உரையில், "தனித்திங்கள்" என்பதற்கு "ஒரு கலையாகிய திங்கள்" எனப் பேராசிரியர் பொருளுரைத்தமையானுமறிக. மதிக்கண்ணி- மதியாகிய கண்ணி எனினுமாம். "செழுநீர் மதிக்கண்ணிச் சிற்றம்பலவன்" (கோவை 123) என்பதன் உரையில் மதிக்கண்ணி- மதியாகிய கண்ணி என அதன் உரையாசிரியர் உரைத்தமையுங் காண்க. கண்ணி- முடிமாலை பிறைமதி முடிமாலைபோல அமைந்திருத்தலின் மதிக் கண்ணி என்றார். கண்ணி- கண்ணிமையுடையவன் என்னும் பொருளைத் தரும் இகரவிகுதி புணர்ந்து கெட்டது அன்றிக் கண்ணிப் பெருமான் என இயைப்பினுமமையும்.

விண்ணோர் பெருமான் - தேவர் தலைவன். "விண்ணோர் பெருமானை வீரட்டானை" (நாவு 236:2) எனத் தேவாரத்து வருதலுங் காண்க. சிவன்- செம்பொருளாயுள்ளவன்; "செம்பொருட்டுணிவே" (பிடித் 1) என அடிகள் அருளியமையுங் காண்க.

சிறுமை- சிறிய தன்மை. இழிவு. "வெறுப்பனவே செய்யுமென் சிறுமையை" (அடைக் கலப் 1) என வருதலுங் காண்க. என் சிறுமை கண்டும் ஆட்கொண்டது இறைவன் தன் பேரருளினாலாகும்.

"கடையவ னேனைக் கருணையினாற் கலந் தாண்டுகொண்ட விடையவனே"
(நீத் 1)

"வன்னெஞ்சக் கள்வன் மனவலிய னென்னாதே
கன்னெஞ் சுருக்கிக் கருணையினா லாண்டுகொண்ட"
(கோத் 11)

"ஆணோ அலியோ அரிவையோ வென்றிருவர்
காணாக் கடவுள் கருணையினால் ஆட்கொண்டருளி"
(பொன்னூசல் 5)

"கருத்திருத்தி யூன்புக்குக் கருணையினா லாண்டு கொண்ட"
(கண்ட 3)

என அடிகள் அருளியமையுங் காண்க.

அவன் என்பது பண்டறி சுட்டாய்ப் பேரருள் குறித்து நின்றது நான் அடியேன் என்ன என வருதலாற் பிரான் என்றது ஈண்டு ஆண்டான் என்னும் பொருளில் வந்தது. "என்னைத் தான் என்று அறிதலும் தன்னை நானும் பிரான் என்றறிந்தனன்" என்னும் தேவாரத்தும் (நாவு, பொது, குறுந்) இப்பொருட்டாதல் காண்க. நான் என்பது சிறியேன் என்பதைக் குறிப்பிற் புலப்படுத்தி நின்றது.

அவன் எம்பிரான் என்ன நானடியே னென்ன என்பதில் என்ன என்பது ஆக என்னும் பொருளில் வந்தது. "தாரென்ன வோங்குஞ் சடைமுடிமேல்" (திருக்கோவை 56) என்புழிப்போல. அவற்றை ஆற்றலால் வருவிக்கப்பட்ட "உள்ள" என்னும் பெயரெச்சக் குறிப்பொடு முடிக்க.

புவன் என்பதில் புவ என்பது வானத்தைக் குறிப்பதாயினும் ஈண்டு சிதாகாயத்தை உணர்த்தியது. எனவே புவன் என்பதற்குச் சிதாகாயத்திலுள்ளவன் என்பது பொருளாகும். எம்பிரானை என இரண்டாவது விரிக்க. இப்பரிசே எம்பிரானைத் தெரியும் பரிசாவது இயம்புக.

*ஆலோசனை பெற விருப்பம் இல்லாதவர்க்கு நாம் ஒரு உதவியும் செய்துவிட முடியாது.*

இயம்புகவே என்றது இறைவன் இயல்பையும் உயிரின் இயல்பையும் அறிய விரும்புவார் அவனை ஆண்டானாகவும் உயிரை அடிமையாகவும் அறிய வேண்டுமெனக் கூறுக என்றவாறு.

இதன்கண் இறைவனுக்கும் உயிருக்குமுள்ள ஆண்டான் அடிமைத்திறமாகிய தொடர்பின் உண்மை பெறப்படுதலின் மெய்யுணர்தல் என்னும் முற்பத்து நுதலிய பொருள் புலப்படுமாறு காண்க.

14. புகவே தகேனுனக் கன்பருள் யானென்பொல் லாமணியே
தகவே யெனையுனக் காட்கொண்ட தன்மையெப் புன்மையரை
மிகவே யுயர்த்திவிண் ணோரைப் பணித்தியண் ணாவமுதே
நகமே தகுமெம் பிரானென்னை நீ செய்த நாடகமே.

**ப.ரை:**

என் பொல்லா மணியே- எனது துளையிடாத மாணிக்கமே. யான் உனக்கு அன்பருள் புகவே தகேன்- யான் உன்னுடைய அன்பர் கூட்டத்தில் புகுதற்கே தகுதியில்லாதவன்; எனை உனக்கு ஆட்கொண்ட தன்மை தகவே- அங்ஙனமாகவும் தகுதியில்லாத என்னை உனக்கு ஆளாகக் கொண்ட தன்மை நின் பெருமைக்குத் தகுதியாகுமோ? எப் புன்மையரை மிகவே உயர்த்தி- எத்தகைய இழிந்தோரையும் மிக உயர்வடையச் செய்து, விண்ணோரைப் பணித்தி- உயர்ந்தவர்களாகிய தேவர்களைத் தாழ்வடையச் செய்கின்றாய்; அண்ணா- தந்தையே, அமுதே- அமுதம் போன்றவனே, எம்பிரான்- எங்கள் தலைவனே. நீ செய்த நாடகம் நகவே தகும்- நீ இவ்வாறு இயல்பிற்கு மாறாக என்னை ஆட்கொண்டு அருள் செய்த திருக்கூத்து சிறிது நகையாடுதற்கே தக்கதாகும்.

என் பொல்லா மணியே, யான் உன் அன்பர் கூட்டத்திற் புகுதற்கே தகுதியற்றவன்; அங்ஙனமாகவும் தகுதியில்லாத என்னை உனக்கு ஆளாகக் கொண்ட தன்மை நின்பெருமைக் குத் தகுதியாகுமோ? எத்தகைய இழிந்தோரையும் மிக உயர்வடையச் செய்து உயர்ந்தோராகிய தேவர்களைத் தாழ்வடையச் செய்கின்றாய். அண்ணா அமுதே எம்பிரான்! நீ இவ்வாறு இயல்பிற்கு மாறாக என்னை ஆட்கொண்டு அருள்செய்த திருக்கூத்து சிறிது நகையாடுதற்கே தக்கதாகும் என்பதாம்.

பொல்லா- துளையிடாத. "முலைவட்டப் பூணுமுத்து முள்கலிற் கிழிந்து பொல்லா" (சீவக 2184) என்புழிப் பொல்லா என்பதற்குத் துளையிடாத என நச்சினார்க்கினியர் பொருளுரைத்தமையுங் காண்க. பொள்ளாமணி என்பது வடநூலார் மதம் பற்றிப் பொல்லாமணி என மரீஇயிற்று. மணி என்பது நவமணிகளுக்கும் பொதுப்பெயராயினும் ஈண்டு மாணிக்கத்தை உணர்த்திற்று. "தோளாமணியே" (கோவை 47) என்பதற்குத் துளைக்கப்படாத மாணிக்கமே எனப் பேராசிரியர் பொருளுரைத்தமையுங் காண்க. இறைவன் துளையிடாத மாணிக்கம் போலும் இயல்பாகவே ஒளியையுடைய சிவந்த திருமேனியாதலின் "பொல்லாமணியே" என்றார்.

"என்னை யாண்ட பொல்லா மணியேயோ" ஆசைப் 1.
"என்பொல்லா மணியைப் புணர்ந்தே" புணர்ச் 1.

உங்களை நீங்கள் மதித்துக்கொள்வது ஆணவம்; பிறர் உங்களை மதிப்பது பெருமை.

“புனையப்பெறுவ தென்று கொல்லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே” புணர்ச் 47.

“அம்பலத் தாடுகின்ற என்பொல்லா மணியை” அச்சப் 3.

என இத்திருவாசகத்தும்,

“என்பொலா மணிக்குங் சொல்வ லென்றிறை கோயில் புக்கான்” (20:2) என நம்பி திருவிளையாடற் புராணத்தும்,

“என்பொலா மணி மனமிரங்கிற் றென்பவே” (முனிவர் 6) எனப் பிரபுலிங்கலீலையினும் வருவன காண்க. இறைவன் மாணிக்கம் போலும் ஒளியையுடைய சிவந்த மேனியனாதல், “வைப்புமா டென்றும் மாணிக்கத்தொளி யென்றும் மனத்திடை யுருகாதே” (அதிசயப் 1) என அடிகள் பிறிதோரிடத்து அருளியமையானும் அறியப்படும்.

உனக்கு அன்பர்- உன்னிடத்தன்பர் எனினுமாம். புகவே தகேன் என்பது அடியார் திருக்கூட்டத்தில் புகுதற்கே தகுதியில்லாதேன் அவருன் ஒருவனாய் இருப்பது யாங்ஙனம் என்பதை உணர்த்தியது. புகவே என்பதில் ஏகாரம் தேற்றப் பொருட்டு அன்பர் கூட்டத்திற் புகுதற்கே தகுதியில்லாத என்னை உனக்கு ஆளாகக் கொண்ட தன்மை நின் பெருமைக்குத் தகுதியாமோ என்பார். “புகவே தகேன்; தகவே யெனை யுனக்காட்கொண்ட தன்மை” என்றார். இதனால் தகுதியில்லாதோரையும் தகுதி வருவித்து ஆட்கொள்ளும் இறைவனது பேரருட்டிறம் புலப்படுத்தவாறு. தகவே என்பதில் ஏகாரம் வினாப் பொருளில் வந்து எதிர்மறைப் பொருளை உணர்த்தியது.

எப்புன்மையரை என்பதில் இழிவு சிறப்பும்மை விகாரத்தால் தொக்காது. மிகவே உயர்த்தி- மிகவும் உயரச் செய்து, புன்மையரை மிகவே உயர்த்தி விண்ணோரைப் பணித்தி என்றது விண்ணோரிலும் புன்மையரை மிகச் செய்தல் பற்றியதாகும். “மிக்க விருப்புறுவோரை விண்ணோரின் மிகுத்து நண்ணார் கழியத் திருப்புறு சூலத்தினோன்” எனத் திருக்கோவையாரில் (315) அடிகள் அருளியமையுங் காண்க. மிகவே என்பதில் ஏகாரம் அசை.

விண்ணோரைப் பணித்தி என்றதனால் உயர்தோரான விண்ணோர் அதிகார மலத்துட் பட்டுச் செருக்குறுங்காலத்து அச்செருக்கினை நீக்குமாறு அவர்களைத் தாழ்வடையச் செய்யும் மறக்கருணையை விளக்கியவாறு. அண்ணா அமுதே என்பதற்கு அடைதற்கரிய அமுதம் போன்றவனே எனவும் உரைக்கலாம். எம்பிரான், அண்மை விளி. “என் எம்பிரான் வம்பனேன் வினைக் கிறுதியில்லையே” (சதகம் 93) என்புழிப்போல.

என்னை நீ செய்த நாடகம் என்றது ஒரு சிறிதும் தகுதியில்லாத சிறியேனை நீ ஆட்கொண்டு அருள்செய்த திருக்கூத்து என்றவாறு நகவே தகும் என்றது அத்திருக்கூத்துப் பேரானந்தமாகிய சிரிப்பைத் தருவதை வெளியிட்டவாறாகும்.

இதன்கண் இறைவன் இயல்பும் அவன் ஆட்கொண்டருளும் இயல்பும் செருக்குற்றோரை ஒறுக்கும் இயல்புமாகிய மெய்ம்மை பெறப்படுதலின் மெய்யுணர்தல் என்னும் முதற்பத்து நுதலிய பொருள் புலப்படுமாறு காண்க.

(தொடரும்...

*ஓய்வு ஓர் அழகான உடை. ஆனால் இடைவிடாமல் அணியத்தக்கதன்று.*

# மகா சிவராத்திரி

– திரு பாலன் சுதாகரன் அவர்கள் –

"சிவராத்திரி" என்றால் சிவன் இராத்திரி எனப்படும். சிவபெருமானுக்குரிய இராத்திரி எனப் பொருள்படும். சிவம் என்றால் வடமொழியில் இன்பம் எனப் பொருள்படும். இராத்திரி, இரவு. எனவே இன்ப இரவு எனவும் பொருள்படும். சிவம் என்னும் சொல்லுக்குப் "பெருஞ்சுகம்" என்பது பொருள் எனக் கிறிஸ்தவ நூலாகிய தேம்பாவணியிலும் கூறப்படுகின்றது. மங்களம், தன்மை எனவும் பொருள் கூறப்படும்.



எப்போதுமே சிவனை வழிபடும் நாளாகவும், சிறப்பாகச் சிவராத்திரி என இந்நாள் கருதப்படக் காரணமென்ன? என்பது கேள்வி? ஆம்! சிவபெருமானுக்குரிய பல சிறப்பான விசேஷ அம்சங்கள் அமைந்து விளங்கும் நாளானபடியால் இப்பெயராயிற்று. இந்த நாளில் விரதமனுட்டித்துச் சிவபதமடைந்தவர்களின் மேன்மையினால் இந்நாள் சிவராத்திரி எனப்படும். சிவபெருமானுக்கு அத்தியந்த பிரியமுள்ள இராத்திரி சிவராத்திரி. இதனால் மகா சிவராத்திரி எனவும் கூறப்படும். எனவே இப்புண்ணியமான புனித தினத்தின் ஆதி வரலாறு. சிறப்பு இக்கால நிலைமை. இவ்விரத நாளின் பயன் என்பன பற்றித் தெரிந்தவரையில் ஒரு சிறிது கூறுகின்றேன்.

ஆதிவரலாறு பற்றிக் கூறும்போது, முதலாவதாக இவ்விரதமுண்டானது பற்றிப் பல கதைகள் வழங்குகின்றன. ஒரு கதை பாருங்கள். ஒரு கற்பாந்தர காலத்தில் அதாவது உலக முடிவு நாளில் பிரமதேவன் இறக்கச் சர்வான்மாக்களும் பிரளயத்தினாலே இறந்து போயின. அந்த இராப்பொழுதில் உமாதேவியார் சிவனைப் பூசித்து, அப்பெருமான் அருளைப் பெற்றனரென்றும், அந்த இராப்பொழுதில் விரதமிருப்பவர்கள் யாவராயினும் அவர்கள் மோட்சமடைய வேண்டுமென உமாதேவியார் வரம் பெற்றாரெனவும், அந்த இரவே நாம் சிவராத்திரி எனக் கொண்டாடிவரும் இரவு ஆகும் என்பது இன்னும் ஒரு கதை.

கற்பாந்தரம் என்றால் கற்பமுடிவு என்பது பொருள். அதாவது உலகமுடிவு காலமென முன்னர் குறிப்பிட்டேன். இதனை ஊழிக்காலம். உலக முடிவு காலம். உகாந்த காலம் எனவும் உரைப்பர். இப்படிப்பட்ட ஒரு காலத்தில் விடாமழை பொழிந்தது. உலகம் அதனால் பிரளய வெள்ளத்தில் ஆழ்ந்தது. அத்தருணம் விட்டுணு மூர்த்தி பன்றி வடிவங்கொண்டு, பிரள

வெள்ளத்தில் ஆழ்ந்த உலகை கொம்பினால் உயரத் தூக்கிப் படைத்தற் கடவுளாகிய பிரம்ம தேவரை உத்தியங்கமலத்தில் தோற்றுவித்துச் சிருட்டித் தொழிலைச் செய்யும்படி கூறிப் பாற்கடலிற் சென்று பள்ளி கொண்டார்.

இங்ஙனமாக, பிரமதேவர் உலகைப் படைத்தார். பின்னர் தம்மாற் படைக்கப்பட்ட புவனங்களையும் சராசரங்களையும் பார்க்க விரும்பிய பிரமதேவர் அன்ன வாகனத்தில் அமர்ந்து யாவற்றையும் பார்வையிட்டு அதனால் செருக்குற்றுப் பாற்கடலையடைந்தார். அங்கே விஷ்ணுமூர்த்தி யோக நித்திரை புரிவதைக் கண்டு கிட்டச் சென்று, "இங்கே நித்திரை புரியும் நீ யார்?" எனக் கேட்கச் "சராசரங்களைச் சிருஷ்டித்தால் பரம்பொருளாகிய பிரமதேவரே, யாம்" என்றார். அத்தருணம் அப்படியில்லை. "காத்தற் தொழிலைச் செய்யும் யாமே பரம்பொருள்" என்றார் விஷ்ணுமூர்த்தி. இது காரணமாக இவர்கள் இருவருக்குமிடையில் எழும்பியது போர். நூறு வருடகாலம் இந்தப் போர் நடந்தது. உலகம் அழியுமாறு யுத்தம் நடந்தது. இங்ஙனம் இவர்கள் புரியும் கோர யுத்தத்தைப் பரம்பொருளாகிய சிவன் திருவுளங்கொண்டு, இவர்கள் இறந்தொழிவார்களேயெனக் கருணை கூர்ந்து, ஒரு மாசி மாதத்து அபரபக்கத்தில் சதுர்த்தசி கூடிய அர்த்தராத்திரியில் விட்டு விட்டொளி வரும் பெரியதோர் அக்கினிப் பிழம்பாக இருவருக்கும் மத்தியில் தோன்றியருளினார். இச்சோதியைக் கண்டு விட்டுணுவும் பிரமாவும் வியப்படைந்தனர். "இதன் அடியையும் முடியையும் காண்பவர்களே பரம்பொருளாவார்" ரென ஒரு அசரீரி கேட்டது. அதனைக் கேட்ட விஷ்ணு, பிரமா இருவரும் முறையே பன்றியும் அன்னமுமாகி அடிமுடி காணச் சென்றனர். பாதாளமும் ஆகாயமும் புகுந்தும் பறந்தும் முடிவு காணாது இளைப்படைந்து இருவரும் செருக்கடங்கி நின்றனர். சோதி மலையாகிய சிவபெருமான் சிவலிங்கமாய்த் தோன்றக் கண்டு அதனை இருவரும் போற்றி வழிபட்டனர். அச்சோதிப் பிழம்பு சிவலிங்க ரூபமாகி அயன் மாலுக்குக் காட்சியளித்த இரவே சிவராத்திரியாகும் என்பதாகும்.

இன்னும் தேவி, விளையாட்டாகச் சிவமூர்த்தியின் திரிநேந்திரங்களையும் ஒரு முறை மூட உலகங்கள் இருண்டன. அப்போது 11 உருத்திரர்களும் திருவிடைமருதூரையடைந்து சிவபெருமானை வணங்கினர். அக்காலமே சிவராத்திரியாகும் எனவும் கூறப்படும்.

இனி, இத்தினத்தின் சிறப்பைப் பார்ப்போம். இன்றைய தினம் மகா சிவராத்திரி. இன்னும் மாத சிவராத்திரி, யோக சிவராத்திரி, பக்க சிவராத்திரி, நித்திய சிவராத்திரி என வேறு தினங்களும் உள்ளன. மாசி மாதச் சிவராத்திரிநாள் மிக மகிமை நிறைந்த விரத நாள். இவ்விரதத்தை அனுட்டிப்பவர்கள் திரயோதசி தினத்தில் ஒரு பொழுதுண்டு, சதுர்த்தசியில் உபவாசமிருந்து துயில் நீக்கி, நான்கு யாமங்களிலும் சிவபிரானை வழிபட்டு, அடுத்தநாள் அடியார்களுக்கும் பிராமணர்களுக்கும் அன்னதானம் செய்து பாரணம் பண்ணுதல் வேண்டும். இந்த நாளின் மகிமை பற்றித் திருநந்திதேவர் எடுத்துபதேசிக்கச் சூரியன் முருகப்பெருமான், மன்மதன், இயமன், இந்திரன், சந்திரன், அக்கினி, குபேரன் முதலானோர்கூட அனுட்டித்து வரங்கள் பெற்றுள்ளார்கள் எனக் கூறப்படுகின்றது. விஸ்ணு இவ்விரதத்தை அனுட்டித்து சக்கராயுதம் பெற்று இலக்குமியையும் பெற்றார். பிரமா சரஸ்வதியைப் பெறும் பாக்கியமடைந்தார். இராசசேகர பாண்டியன் இத்தினத்திலே

*மிருகங்களைப்போல் நடந்துகொள்ளும் எவனும் சுதந்திர மனிதனாக இருக்க முடியாது.*

வெள்ளியம்பலத்திலே சிவபெருமானுக்கு நான்கு யாமமும் விசேட பூசை செய்வித்து வெள்ளியம்பலத்தானைக் கால் மாறியாடச் செய்து பரமானந்தக் கடலிற் படிந்து பேரின்பமடைந்தானெனத் திருவிளையாடற் புராணங் கூறுகின்றது. இங்ஙனமாக இன்னும் பலர் இவ்விரதத்தை அனுட்டித்து வரங்கள் பெற்ற கதைகளும், சிவனடி சேர்ந்த செய்திகளும் உள்ளன. சிவமகாபுராணம், ஸ்கந்த மகாபுராணம், பிரமோத்தர காண்டம் முதலான புராணங்களிலும் வாதுளம் முதலிய ஆகமங்கள் உபாகமங்களிலும் இதன் சிறப்புக்கள் கூறப்பட்டிருக்கின்றன.

இவ்விரதத்தின் இக்கால நிலையை நினைக்கும்போது வேதனையாகவே இருக்கின்றது. குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசும் நிலையாக மாறிவிட்டது. விரதங்கள் வந்தனை வழிபாடுகளில் நம்பிக்கை குறைந்துவிட்டது. இல்லையென்றுகூடச் சொல்லலாம். விரதம் என்று சொல்லி ஏதோ நடக்கிறது. அது போலச் சிவராத்திரி விழிப்பும் நடக்கிறது. பாட்டுப்பெட்டிகள் வைத்துப் பாடியும், பொது இடங்கள், வீதிகள், மடங்கள் முதலான இடங்களில் சீட்டுக்களாடியும், விடியும்வரை விழிக்கிறார்கள். சினிமாக் கொட்டகைகளிலுங்கூட "விஷேசமாக இன்று நாலைந்து காட்சிகள் காண்பிக்கப்படும்" என்று விஷேச விளம்பரங்கள் போட்டுக் காட்சிகள் நடைபெறுகின்றன. இப்படியாக எப்படியோ இந்த நாளைக் கண் விழித்துக் கழித்துவிட்டால் போதும் என்பது இக்காலத்துக் கருத்து.

இவர்களைப் பார்த்து ஏனையா! இப்படிச் செய்கிறீர்கள் என்று கேட்டால், என்ன சொல்கிறார்கள். "இன்று சிவராத்திரி தூங்கக் கூடாது" எல்லாரும் விழிக்கிறார்கள்; நல்ல பலன் கிடைக்கலாம்; நாங்களும் விழித்தால் நல்ல பயன் கிடைக்கும்" என்கிறார்கள். சிவ ராத்திரிக்கு விழிக்க வேண்டுமா? எதற்காக விழிக்க வேண்டும்? சிவராத்திரி என்றால் என்ன? அன்று என்ன செய்ய வேண்டும்? எனக் கேட்டால் "அதைப் பற்றி எங்களுக்குத் தெரியாது. இன்று நல்ல நாள் என்று சொல்கிறார்கள். என்ன பாவங்கள் புரிந்தாலும் இன்று விழித்திருந்தால் நல்லதாம்; மோட்சம் கிடைக்குமாம்; ஆதலால் விழிக்கிறோம்" என்கிறார்கள் சிலர் இதற்கு ஒரு புராணக்கதை சொல்வர்.

காட்டிலே வேடனொருவன் வேட்டையாடச் சென்றான். அங்கேயொரு வேங்கையைக் கண்டான். கண்டவன் பயந்து ஓடினான். வேங்கையும் அவனைத் தொடர்ந்து துரத்தியது. அவன் ஒரு வில்வ மரத்தில் ஏறிக் கொண்டான். மரத்தினடியில் வேங்கையும் வந்து நின்றது. போகவில்லை. இருள் வந்து விட்டது. தூங்கினால் கீழே விழுந்து விடுவான். விழுந்தால் வேங்கை விழுங்கிவிடும். எனவே தூக்கம் வராதிருக்க அம்மரத்தின் இலைகளை ஒவ்வொன்றாகப் பறித்துக் கீழே போட்டுக்கொண்டிருந்தான். மரத்தினடியில் சிவலிங்கம் ஒன்றிருந்தது. அதன்மீது அந்த இலைகள் விழுந்தன. அன்றிரவு சிவராத்திரி நாள். அவன் பறித்துப்போட்ட இலைகள் சிவனுக்குச் செய்த அர்ச்சனை போலாயிற்று. அவனுக்குச் சிவலோகங் கிடைத்தது". ஆதலால் நாமும் எப்படியோ, கூத்தாடியோ சினிமா பார்த்தோ, சீட்டாடியோ இன்று கண் விழித்து விட்டால் சரி; ஏதோ ஒரு பலன் இல்லாமலா போகும் என்கிறார்கள்.

இவர்கள் இதன் உட்கருத்தையறியாது நித்திரை விழிப்பு ஒன்றையே நோக்காகக் கொண்டு, எப்படியும் அதனை நிறைவேற்றுதலே இந்த விரதத்தின் பயன் என எண்ணு

கின்றனர். உண்மைகளை உணராது நடக் கின்றனர். உலகத்திலேயுள்ள உயிர்கள் இறைவனை மறந்து, இறை வழிபாட்டைத் துறந்து பாவ புண்ணியங்களை பகுத்தறி யாது, அருள் குறைந்து மருள் நிறைந்து செருக்குக் கொண்டு நிலைகெட்டுத் தட்ட ழிந்து, தடுமாறித் தீச்செயல்களைச் செய்யத் தொடங்கும். அப்போது பஞ்சமா பாதகங்களும் தன்னையறியாமற் தொழிற்படும். மாரி வழங் குன்றும். சுருங்கச் சொன்னால் தருமம் மங்கி அதர்மம் பொங்கும். அப்போது இறைவனை மறந்து எதனையும் செய்யலாம் என்று ஒரு எண்ணம் மக்கள் இதயத்தில் உண்டாகும். இதனைத்தான் உலகத்தின் அழிவுகாலம் என்பர். உகாந்தகாலம், உலக முடிவு காலம் என முன்னர் குறிப்பிட்டதும் இதுவேதான். இன்றைய உலகத்தை உற்று நோக்குங்கால் உலக அழிவுகாலம் அண்மித்துவிட்டதெனக் கூறுதல் மிகையாகாது.

தீச்செயல்கள் நிறைந்த நாட்களில் இறைவன் உலகத்தை அழித்து உயிர்களை ஒடுக்கிக் கொள்ளத் திருவுளங் கொள்வான். உலகத்து உயிர்களைக் கொண்டே இறை வன் இதனைச் செய்விக்கின்றான் எப்படி என்று கேட்பீர்கள். அணுகுண்டு, சலவாயுக் குண்டு, விஷப்புகைகளை மக்கள்தானே கண்டு பிடித்தார்கள். இவற்றைக் கண்டுபிடித்துச் சண்டை பிடிக்க உயிர்கள் அழியும். இன்னும் பூகம்பம் முதலிய இயற்கையேதுக்களும் உயிர்களை அழிக்கும். எனவே உலகம் அழியும். உலகம் முழுவதும் பேரிருள் சூழ்ந்து கௌவும். அப்பேரிருளில் உலகு மறையும். அனைத்தும் சுடுகாடு மயமாகும். அங்கே அந்தச் சுடுகாட்டிலே ஒப்பற்ற ஒளிமயமாகிய முடிவிற்கு முடிவாய் ஆதிக்காதியாய் நிற்கும் இறைவன் ஊழிக் கூத்தாடுவான். இவ்வாறு உலகளந்ததைச் செய்து திருநடம் புரியும் இறைவனை, அறம் வளர்க்குஞ் செல்வியாகிய அன்னை உமாதேவி, உயிர்களிடத்திலே இறைவனுக்கும் இரக்கமுண்டாகும்படி பூசித்து வணங்க, இறைவன் அதனை ஏற்று, ஆன்மாக்களிடத்து முகிழ்ந்த பெருங் கருணை யினாலே மறுபடியும் உலகத்தைப் படைத் துத் தந்து அருள் செய்கின்றான்.

இங்ஙனமாக அழிந்துபோன பரம்பரை யைத் திரும்பவும் அமைத்துத் தந்தவர் பரம் பொருள். அந்தப் பரம்பொருளை, அருட்சக்தி யாகிய உமாதேவியார் பூசித்தமைபோல ஆன்மாக்களும் பூசிக்கவிரும்பின. அதன்படி மாசிமாதத்து அமாவாசை நாளை இறைவன் உலகையழித்த இருள் நாளாகக் கருதி உமாதேவி பூசித்தமைபோல மக்களாகிய நாமும் பூசித்து அருள் பெறுவதே சிவராத்திரி யின் நோக்கமாகும். இதனால் என்ன விளங்கு கின்றது? பிரளய காலத்தில் உமாதேவியார் தனித்து நின்று சிவபரஞ் சுடரொளியில் ஒடுங் குங் காலமே சிவராத்திரி எனப்படும் என்பது சகல ஜீவான்மாக்களும் இறைவனிடத்து இரண்டறக் கலந்து நிற்கும் சாயுச்சிய நிலை யின் உண்மையைத் தான் இப்புண்ணிய நாள் உணர்த்துகின்றது.

ஆகவே பெறுதற்கரிய, அருமையான மனிதப் பிறவியையடைந்த நாம் சிவ விரதங் களையும் அவற்றின் உண்மைக் கருத்துக் களையும் உணர்ந்து அனுட்டித்து அவற்றின் பயனை அடைதல் வேண்டும். ஸ்ரீலஸ்ரீ ஆறு முகநாவலர் ஐயா அவர்களின் சைவ வினா விடையில் விரதவியல் என்றொரு பகுதி உண்டு. சிவவிரதங்களின் சிறப்பியல்புகளைச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்திருக்கின் றார்கள் அவர்கள். அதில் இன்றைய சமய நிலையில் எத்தனை வீடுகளில் சைவ வினா

*உடலால் மற்றவர்கட்கு கைங்கரியம் செய்வது பெரிய புண்ணியம்.*

விடை இருக்குமோ அறியேன். நம்மவர்களுக் கும் சமயவழிபாட்டில் இன்று நம்பிக்கையும் இல்லை, நேரமுமில்லை வழிபடுவதற்கு கோயில். தேவாரம், திருவாசகம் என்றால் வெட்கம் அவற்றைப் படிப்பது கௌரவக் குறைவு என்று கூடக் கருதப்படுகின்றது. என்னடா கடவுள்? போடா! அதெல்லாம் அந் தக் காலம் "நொன்சென்ஸ்" என்று ஆங்கிலத் தில் கூடப் பேசிவிடுகிறார்கள். ஆம்! சிந் தனைக்கெட்டாத சிந்திக்க முடியாத விஷயங் களை இங்ஙனம் கூறி இகழ்பவர்களின் அறியாமைக்கு இரங்குவதன்றி வேறென்ன செய்ய முடியும்.

பெரியோர்களே! மகத்துவம் நிறைந்த இவ்விரதத்தை முறைப்படி அனுட்டிப்பவர்கள் முத்தியடைவார்கள். அவர்களுடைய இருபத் தொரு சந்ததியில் உள்ளவர்கள்கூட நன்மை அடைவார்களெனச் சொல்லப்படுகின்றது. இவ் விரதத்தை 24 வருடங்கள் அன்றி 12 வருடங் களாவது தொடர்ந்து அனுட்டித்தல் வேண்டும். இவ்விரதத்தை அனுட்டிப்போர் மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் அமைந்த சிவ ஸ்தலங் களிலே சென்று நான்கு சாமங்களிலும் வணங்கி அபிஷேகம் அர்ச்சனை புரிந்து மறுநாள் தீர்த்தமாடி இயன்றவரை அன்ன தானம் செய்தல் வேண்டும். நான்கு சாமப் பூசைகள் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக் கரணங்கள் நான்கையும் சிவன் திருவடியிற் சமர்ப்பித்தலைக் குறிக்கின்றன.

சிவலிங்காராதனை அநாதியாகவுள் ளது. மிகவும் புராதனமானது. சிலகால முன்னர் கண்டுபிடித்த மொகஞ்சதாரோ ஒரு நாகரிகமான புராதன நகரம் 5000 வருடங் களுக்கு முன்னிருந்த நாகரிகத்தை எடுத்துக் காட்டுகின்றதெனக் கருதுகின்றனர் அறிஞர்கள். அந்நகரத்தின் பல பாகங்களில் பலவித அளவில் பலவித லிங்கங்கள் இருந்ததாகக் கூறப்படுகின்றது. சிவலிங்காராதனை எவ் வளவு பழைமையும் மகிமையும் நிறைந்த தென்பதை இதன்மூலம் அறியலாம்.

முக்தியடைய விரும்புவோர் இவ் விரதம் ஒன்றினையே முறையாக அநுட்டித் தல் போதுமானது. எல்லோருக்கும் தர்ம சாதனமானது. பாலர் முதல் விருத்தர்வரை யாவருக்கும் தகுதியானது. இரவு முழுவதும் விழித்திருக்க இயலாதவர்கள் லிங்கோற்பவ காலமாகிய அர்த்தயாமம் முடியும் வரை யாதல் விழித்திருக்க வேண்டும். இப்புண்ணி யம் கோடி பாவங்களையும் நசிப்பிக்கும். சகல சம்பத்தும் பெருகும். எனவே இந்தப் புண்ணிய நன்னாளை நன்முறையில் அநுட்டித்து நற் பயனடைந்து நல்வாழ்வு வாழ அவனரு ளாலே அவன்தாள் வணங்கி அமைகின்றேன்.

### வாழை இலையில் சாப்பிடுவதால் ஏற்படும் நன்மைகள்

உணவு உண்பவர்கள் வாழை இலையை இடக்கைப் பக்கமாக நுனி வருவதுபோலவும், வலக்கைப் பக்கமாக அகன்ற அடி இலை வருவது போலவும் உண்பது முறையாகும். வாழை இலையில் தனலெட்சுமி வாசம் செய்வதாகப் புராணங்கள் கூறுகின்றன. வறுமை, கஷ்டங்கள் நீங்கவேண்டுமானால் வாழை இலையிலேயே சாப்பிடவேண்டும். இப்பழக்கம் கொண்டவர்கள் லெட்சுமி கடாட்சம் பெறுவர் என்பது திண்ணம். அத்துடன் வாழை இலையில் சாப்பிடுவதால் முகம் பளபளப்பாகி அழகும் வசீகரமும் உண்டாகும். தலைமுடி கறுப்பாகவே இருக்கும். சீக்கிரத்தில் நரைக்காது. கண்ட திசைகளுக்கு எதிராகவும் உண்ணுதல் கூடாது. உண்ணும்போது வடக்கு நோக்கி இருத்தல் நீண்ட ஆயுளும், தெற்கு நோக்கி இருத்தல் புகழும், மேற்கு நோக்கி இருப்பின் செல்வமும் பெருகும். ஒரு மூலையைப் பார்த்தவாறு உண்ணுதல் கூடாது. மேற்கண்ட முறையில் உணவை உண்ணுதல் நன்மையைத் தரும்.

*தியானம் செய்வதால் மனம் உறுதியடைகின்றது.*

# தமிழ்ப் பண்பும் பெண்ணின் பெருமையும்

- திருமதி பரமேஸ்வரி நடராஜா அவர்கள் -

தமிழ் இனிமையானது- இதை உணர்த்துவது திருவாசகம் என்னும் தேன். தமிழ் உயிர் மூச்சு- இதை உணர்த்துவது ஓங்கார தத்துவம். தமிழ் எளிமையானது- ஏனெனில் தமிழ்ப் பண்பு எளிமையான வாழ்க்கை நெறி. தமிழ் புரிந்துகொள்ள இலகுவானது- ஏனெனில் அது வாழ்வோடு பின்னிப் பிணைந்தது. இதை உணர்ந்தவர் வாழ்வு பூரணமானது- ஆனந்தமானது- அற்புதமானது.

திருவாசகத்தைப் பொருளுணர்ந்து படிக்கும்போது அது உள்ளத்தைத் தொட்டு உயிரோடு உறவாடி ஆன்ம சக்தியையும் நல்லறிவையும் தூண்டுகிறது. உள்ளத்தில் தெளிவு ஏற்படுகின்றது. மனம் லேசாகின்றது. பேரானந்த உணர்வு பெருகுகின்றது. இதுவே மனிதனுக்குக் கிடைக்கும் நிம்மதி. பணத்தாலோ புறப் பொருட்களாலோ மனிதனுக்கு நிம்மதி ஒருபோதும் கிடைப்பதில்லை.

பணத்தைச் சேர்த்து லட்சாதிபதியாக வேண்டும் என்று ஆசை. லட்சாதிபதியானால் கோடீஸ்வரனாக வேண்டும். உலகில் முதல் பணக்காரனாக வேண்டுமென்று ஆசை; இது வெறியாகி மனிதனை ஆட்டிப்படைத்துத் துன்பத்துக்குள்ளாக்குகின்றது. இதேபோல் ஒவ்வொரு பொருட்களும் புதிதாக வரவர எல்லாவற்றையும் வாங்கிச் சேர்க்க ஆசை. அதன்பின் அவற்றை வைப்பதற்கு வீடு போதவில்லையே என்ற கவலை. இப்படியே பணம் பொருள் சொத்து இவற்றால் ஆசை பெருகப் பெருக அமைதி நம்மை விட்டுப் போய்விடுகின்றது. மனம் பேதலிக்கின்றது. இதனால் அவஸ்தை உண்டாகின்றது. இதுவே பல நோய்களுக்கும் மூலகாரணியாகின்றது. மனிதனின் இயல்புநிலை ஆனந்தம். அதை இழந்துவிட்டதால் மீண்டும் அதைத் தேடுகின்றோம். அந்த இயல்புநிலை திரும்பக் கிடைக்கும் வரை தேடுதல் தொடர்கின்றது. தேவார திருவாசகங்களைப் பொருளுணர்ந்து நாம் ஓதும்போது உள்ளே உறங்கிக் கிடக்கும் அந்த ஆனந்த உணர்வைத் தட்டி எழுப்பி எம்மை இயல்புநிலைக்குக் கொண்டுவருகின்றது. இந்த இயல்புநிலையே பேரானந்தம். இதுவே திருப்தியையும் அமைதியையும் தரும் பேரானந்த நிலையாகும்.

நாம் அதிகாலையில் திருப்பள்ளி எழுச்சி பாடுகின்றோம். எதற்காக? நம்முள் உறங்கிக் கிடக்கும் இறையுணர்வை, இறை சக்தியை விழித்தெழச் செய்வதற்காக. இதனால் அன்றைய நாள் நல்ல நாளாக அமையவும் நற்செயல்களைச் செய்யவும் ஆற்றல் உண்டாகின்றது. வாழ்வில் நிம்மதி உண்டாகின்றது.

அடுத்து ஓங்காரம் - நம் உயிர்மூச்சு இது. பிராணசக்தியாக இருக்கின்றது. இது ஆயுட் பலத்தைத் தருகின்றது. இந்தப் பிரம்ம முகூர்த்தத்தில் ஓதி வந்தால் எண்ணங்களின் வேகம் குறைகின்றது. எண்ணங்களின் நெருக்கடி நிலைகுறையும்போது சிந்தையில் தெளிவு உண்டாகின்றது. இதனால் செய்யும் செயல் சீர்பெறுகின்றது. திட்டமிட்ட காரியத்தை ஒழுங்காக நிதானமாகச் செய்யும் ஆற்றல் உண்டாகின்றது.

இத்தகைய இயல்பு வாழ்வை, அமைதியான வாழ்வை நாம் பெற்றுக்கொள்ள அதிக உழைப்போ பணமோ அவசியமில்லை. காற்று, வெளிச்சம் வரக்கூடியதான வீடு. வீட்டைச் சுற்றி நல்ல மரங்கள் இருந்தால் நாம் ஆரோக்கியமாக இருக்கலாம். இந்த உடல்

*செல்வர்களின் ஆடம்பர வாழ்க்கையைக் கண்டு மற்றவர்கள் ஏமாந்து போகக்கூடாது.*

ஆரோக்கியத்தைப் பெற தேவார, திருவாசக, இதிகாச, புராணங்கள், நற்சிந்தனைகள் போன்ற பெரும் சொத்தாகிய நூல்கள் வீட்டில் இருக்க வேண்டும். காலை மாலை சிறிது நேரம் ஒதுக்கி இவற்றைப் படிக்கவேண்டும். இதுவே நம் பிறவியின், வாழ்வின் பயனை உணரச் செய்து வாழ்வில் நிரந்தர சமா தானத்தை எமக்குத் தருகின்றது. இத்தகைய ஆரோக்கிய வாழ்வைத் தருவது தூய செம் மொழியாகிய தமிழறிவு. இத்தகைய இனிய தமிழுக்கு உரிமை கிடைக்கவில்லையே - அந்தஸ்து கிடைக்கவில்லையே என ஆதங்கப் படுகின்றோம்.

நாம் தமிழர்களாகத் தமிழ்ப்பண்பு கொண்டவர்களாக தெய்வத்தமிழைப் படித்து அதன்படி வாழ்பவர்களாக இருக்க எந்தத் தடையும் இல்லை. நம் உரிமையை அந் தஸ்தை நாமே காப்பாற்றிக்கொள்ள வேண் டும். நாமே தமிழைத் தமிழ்ப் பண்பைப் பேணவேண்டும். அப்போதுதான் தமிழுக்கும் தமிழர்களுக்கும் உயர் அந்தஸ்து தானாகக் கிடைக்கும். இந்த அந்தஸ்தை வேறு யாரும் தரப்போவதில்லை. உறக்கம் விட்டு விழித் தெழுவோம். எம் இயல்பு வாழ்வைப் பெற்றுச் சுதந்திரமாக வாழ்வோம். இறைவன் துணை இருப்பான்.

தமிழ்த் தாயின் ஆபரணங்களாக விளங்குவது ஐம்பெருங் காப்பியங்களாகும். சிலப்பதிகாரம் சிலம்பாகவும் மணிமேகலை இடையில் அணியும் மேகலையாகவும் வளை யாபதி வளையல்களாகவும் சீவகசிந்தாமணி இதய கவசமாக அணியப்படும் பதக்கமாக வும் குண்டலகேசி காதுகளில் அணியப்படும் குண்டலங்களாகவும் வர்ணிக்கப்படுகின்றது. இந்த ஐம்பெரும் காப்பியங்களும் பெண்ணின் பெருமையை உணர்த்துவதோடு பெண்கள் எப்படி வாழவேண்டும் என்ற வாழ்வியல் நெறியையும் கற்பிக்கின்றது.

இடர்கள் இன்னல்கள் ஏற்படும்போது கற்புக்குப் பங்கம் வராமலும் குடும்ப மானம் குடும்ப அமைதிக்குப் பங்கம் ஏற்படாமலும் தர்மநெறி பிசகாமலும் திட மனத்துடனும் உறுதியுடனும் போராடி இன்னல்களைத் தீர்த்தார்கள் என்பதையெல்லாம் விளக்கிக் காட்டுகின்றது. உதாரணமாக; கண்ணகி தவறான நீதி வழங்கித் தன் கணவனைக் கொன்ற நீதி தவறிய மன்னனையும் அவனது இராசதானியாகிய மதுரை மாநகரையும் தன் கற்பெனும் தீயால் சுட்டெரித்துக் கணவ னுடன் சங்கமமானாள். மாதவியோ விதி வசத்தால் குலமகளாகிய கண்ணகியின் கண வனைக் கவர்ந்தாள். மாதவியின் மகளாகிய மணிமேகலையோ கணிகையர் குலத்தில் பிறந்தபோதும் தன் தாய்க்கும் தனக்கும் ஏற்பட்ட களங்கத்தைப் போக்கத் துறவி யாகித் தெய்வீக நிலையை அடைந்தாள். இதேபோல் ஒவ்வொரு காவியமும் பெண் களின் பெருமையை விளக்குகின்றன.

திருவள்ளுவரின் மனைவியாகிய வாசுகி தன் கணவன் மந்திரி பதவியைத் துறந்து வீட்டைவிட்டு வாழ்ந்த ஊரைவிட்டு வெளியேறியபோது அத்தனை சுகங்களையும் துச்சமெனத் துறந்து வீடு பொருள் பண்டம் ஏதுமின்றிக் கணவனே தஞ்சமெனக் கணவன் பின் சென்றாள். என்றும் அழியாத தமிழ்த் தாயின் சொத்தான திருக்குறளுக்கு இலக்கண மாக வாழ்ந்தாள்.

தமிழ் அன்னையாம் ஔவையார் இளம் வயதிலேயே முதுமைக் கோலத்தை இறைவனிடம் வரமாகப் பெற்று நம் குழந் தைச் செல்வங்கள் நன்னெறியில் வாழவேண் டும் என்பதற்காக ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வெற்றிவேற்கை, நல்வழி போன்ற அறநெறி புகட்டும் நீதி நூல்களை இயற்றிய தோடு பல பக்திப் பாடல்களையும் எமக்குத் தந்துள்ளார். இல்லறத்தில் ஈடுபடாமலேயே

*பிறருக்கு உதவியாக வாழும் வாழ்க்கையே மேம்பட்ட வாழ்க்கை.*

இல்லறமல்லது நல்லறமன்று என்று இல்லறத் தாரின் கடமைகளைப் பற்றி பாடல்களில் கூறியுள்ளார்.

சத்தியவான் சாவித்திரியோ இறந்த தன் கணவனான சத்தியவானின் உயிரை மீட்க எமலோகம் சென்று தன் பக்தியாலும், புத்தி சாதுரியத்தாலும் எமதர்மனிடம் வாதாடி வரம்பெற்றுக் கணவனை உயிர்ப்பித்ததோடு குழந்தைப் பாக்கியமும் பெற்று நல்வாழ்வு வாழ்ந்தாள்.

இதேபோன்று சீதை, திரௌபதி, தமயந்தி போன்ற காவிய நாயகிகள் எத் தகைய இடர்கள் துன்பங்கள் சோதனைகள் வந்தபோதும் பதிபக்தியால் தங்கள் தங்கள் கணவர்களுக்கு வந்த இடர்களையெல்லாம் போக்கி அவர்களுக்குச் சக்தியளித்துப் போஷித்து நல்வாழ்வு வாழ்ந்து நமக்கெல் லாம் நற்கதி தரும் நல்லறிவைத் தம் வாழ்க்கைமூலம் புகட்டினார்கள்.

இவைதான் இந்துக்களின் பாரம்பரிய நாகரீகமான தமிழ்ப் பண்பாடுகள், இத்தகைய இனிய இன்ப வாழ்வை நாம் இழந்து விடா மல் இருக்க இந்துவாக வாழ்வோம். தமிழ்க் கலாச்சாரத்தைப் பேணுவோம். வாழ்வில் நித்திய சுகம் பெறுவோம்.

தேனினும் இனியது செந்தமிழ்ச் சுவை. வானம் போல விரிந்தது இந்து கலாச் சாரம். நன்றே செய்வோம் - அதை இன்றே செய்வோம் என்ற உறுதியோடும் நம்பிக்கை யோடும் எங்கள் வாழ்க்கையை வளம் பெறச் செய்வோம்.

## முருகன் தோன்றும் அழகே அழகு

முருகன் தோன்றும் அழகே அழகு
முக்கண் சிவனின் மைந்தன் தானே
உருவில் சிவந்த மேனி உடையான்
உண்ணா முலையாள் உவக்கும் படையான்
திருக்கரம் பன்னி ரண்டு உடனே
தேவி வள்ளி வலது புறமே
இருக்கும் அவளின் கையில் தாமரை
இனிதே வீற்றி ருப்பான் முருகனே.
இடது பக்கம் தெய்வ யானையாம்
இவளின் கரத்தில் நீலோற் பலமாம்
அடியில் மயிலும் மார்பில் சாய்ந்த
அற்புத வேலும் உடையவன் முருகன்
அடியவர் வாழ்வு என்றும் மலர்ந்திட
அழகனை உபாசனை செய்யும் பக்தர்
முடிவில் முத்தி இன்பமே தருவான்
முத்தமிழ் வடிவாம் முருகன் அவனே.


-வ. யோகானந்தசிவம்-

நடுநிலையுடன் செலவு செய்வது நல்வாழ்வின் ஒரு பகுதியாகும்.

# ஸ்ரீ ரமண நினைவலைகள்

(தொடர்ச்சி...

## 22. வெற்றி வேந்தன் ரமணன்



கோஹன் அவர்கள் கூரிய அறிவு படைத்த, அரிய சாதகராவார். அவர் அடிக்கடி என்னிடம் சொல்வார். கணேசா! ஆச்ரமத்தின் சேவையில் நேரத்தைச் செலவிடுவது சரிதான். ஆனால், சாதனையின்றி ஆன்மீக முன்னேற்றமில்லை என்பதை நினைவில் வைத்துக்கொள். நிலையான சாதனையின் அவசியத்தை பகவான் திரும்பத் திரும்ப வற்புறுத்தியிருக்கிறது. அதனால் சாதனை மையமாகவும், தொண்டு துணைச் செயலாகவும் இருக்கட்டும்.

கோஹன் தன் கடைசி நாட்களை ஆச்ரமத்தினுள் கழித்தார். ஒவ்வொரு மாலையும் நான் அவரை சந்தித்து, நம் குருவையும், அவரது போதனைகளையும் குறித்து அவர் பேசுவதைக் கேட்பேன். உடலிலும் உள்ளத்திலும் அவர் பலமிழந்து கொண்டே வந்தார். ஒரு தடவை அவர் கீழே விழுந்தபின் டாக்டர்கள் அவரைப் பரிசோதித்து, அவர் காலில் எலும்பு முறிவோ, வேறு குறைவோ இல்லையென்று சொல்லிய பிறகும் தான் முடமாகி விட்டதாக கற்பனை செய்து கொண்டார்.

இரண்டு மாத காலம் வெளியூர் போய்விட்டு ஆச்ரமத்திற்கு நான் திரும்பி வந்த சமயம் அவர் மிக மோசமாகி சக்கர நாற்காலியைச் சரணடைந்து இருந்தார். அவர் பேச்சு தொடர்வற்று தெளிவின்றி, முன்னுக்குப்பின் முரணாக இருந்தது. "கணேசா! நான் முடமாகி விட்டேன். ஆனாலும் நிர்வாகத்தினர் என்னை ஏழாவது மாடியில் ஒரு அறைக்குத் திடீரென மாற்றி விட்டார்கள். அங்கு தண்ணீர் வசதியே இல்லை. நான் என்ன செய்வேன்" எனக்கென்று தனியாக அறை தந்திருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் பார், இரவில் என்னைச் சுற்றி சுமார் பன்னிரெண்டு பேர்கள் உறங்குகிறார்கள். ஒரு கண்ணன் (பணியாள்) தான் இருக்கிறானென்று நினைக்காதே. ஒரே மாதிரியான ஒன்பது பேர்கள் இருக்கிறார்கள்."

அவரது பரிதாபகரமான நிலையைப் பார்த்து நான் அழுதுவிட்டேன். அவரிடம் கேட்டேன். "மிஸ்டர் கோஹன், நான் சந்தித்த சாதகர்களிலேயே நீங்கள்தான் மிகுந்த அறிவாளி. ஏன் இப்படிச் சம்பந்தமில்லாமல் பேசிக்கொண்டிருக்கிறீர்கள்?" அவர் தன்னைச் சிறிது நேரத்தில் சுதாகரித்துக்கொண்டு என் முகத்தை நேராகப் பார்த்துச் சொன்னார். உடலுக்கு வயதாகும்போது அதன்மீது உள்ள கட்டுப்பாடு தளர்ந்து விடுகிறது. மனதின் மீதும் அப்படித்தான். ஆனால் நீ உடலுமல்ல உள்ளமுமல்ல. அதனால் தேகமோ, மனமோ எப்படி நடந்துகொள்கிறது என்பதற்கு ஒரு முக்கியத்துவமும் தராதே அவைகள் 'நான்' அல்ல" என்றார். இவர் இப்படிச் சொன்னதும் நான் ஆச்சரியத்தால் பிரமித்துப் போனேன். ஏனெனில், அவர் ஒரு

*தன்னைத் தானே கட்டுப்படுத்திக் கொள்வதைவிட மிகப்பெரிய வெற்றி வேறு இல்லை.*

நொடிக்கு முன்புதான் உளரலாக ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார். பின்னர் நான் கேட்டேன். "நீங்கள் மனமுமில்லை, உடலுமில்லை என்றால், என்னிடம் பேசிக் கொண்டிருப்பது யார்? நீங்கள் யார்? இப்பொழுது எந்த நிலையிலிருக்கிறீர்கள்?"

"உடல் மனம் இவற்றின்மூலம் நடப்பதைப் பார்த்துக் கொண்டு சாக்ஷிபூதமாக விளங்கும் நிஷ்களங்க ஆன்மா நான். நான், என் தலைவன் குரு ரமணனின் கருணா பூர்ணமான ஆனந்தம் பொங்கும் சந்நிதியில் அவற்றை அனுபவித்தவாறு இருக்கிறேன். நான் சுத்த ஆனந்தமயன்". இந்த வார்த்தைகளைச் சொல்லும்போது அவர் வித்தியாசமான கோஹனாக இருந்தார். அனேக வருடங்களாக நாம் அறிந்த அதே பழைய அறிவும், அமைதியும் நிறைந்த கோஹனாக சிறிது நேரத்தில், அவர் மறுபடியும் உளறலாக ஏதேதோ பேச ஆரம்பித்துவிட்டார்.

* * * *

மாரீஸ் பிரிட்மன் கடைசியாக நோய்வாய்ப்பட்டிருந்த சமயம் பம்பாயில், தன் நெருங்கிய சினேகிதியும், தன்னை விட வயதாகி, தானும் நோயுற்றிருந்தவருமான ஒரு பெண்மணியைத் தவிர யாருடைய கவனிப்புமின்றி இருந்தார். தன்னுடைய அடியவர் உதவிக்கு யாருமின்றித் தவிப்பதை பகவான் எப்படிப் பார்த்துக் கொண்டிருக்கும்?

ஒரு நர்ஸ் ஒரு கனவு கண்டாள். அதில் கௌபீனதாரியான ஒரு வயோதிகர் தோன்றி, மாரிஸ் பிரிட்மனிடம் போய் அவருடைய கடைசி காலத்தில் அவரைப் பார்த்துக் கொள்ளும்படி கேட்டுக்கொண்டார். விஷயம் தெரிந்து கொள்ளும் எண்ணத்தில், அவர் மாரிஸிடம் போய் தான் நர்ஸ் என்ற முறையில் தன் உதவியைத் தர முன்வந்தாள். ஆனால் மாரிஸ் அதை நிராகரித்து விட்டார். ஏமாற்றத்துடன் அவள் திரும்பி, வீட்டை விட்டு வெளியேறுவதற்காக முன் வாசலை அடைந்தபொழுது, அந்தக் கதவுக்கு மேல், சுவற்றில் தொங்கவிடப்பட்டிருந்த ஒரு படத்தில், தான் கனவில் கண்ட அந்த முதியவரின் முகத்தைப் பார்த்தாள். அது பகவான் ரமணரின் படம்! அவள் திரும்பி அறைக்கு ஓடிவந்து மாரிஸிடம் அவருடைய குரு (படத்தில் கண்டவர்தான்) தன் கனவில் தன்னிடம் அவரைக் கவனித்துக் கொள்ளும்படி உத்தரவிட்டதைத் தெரிவித்ததுடன் மாரிஸ் சந்தோஷமாக அவள் சேவையை ஏற்றுக்கொண்டார். அவரது வாழ்வின் கடைசி நொடிவரை மாரிஸ் அமைதியுடன், சாந்தமாக இருந்தார்.

* * * *

கோஹன் இருளில் நடுவில் ஒளியைக் கண்டதுபோல், சாட்விக் சாவின் எதிரே வாழ்வை அறிந்தார். வேலூரிலிருக்கும் ஸி.எம்.ஸி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்தார். சிறு சப்தம் கூட செய்யமுடியாத அளவுக்கு அவருடைய நாக்கு தடித்து வீங்கி, வாய் முழு வதையும் அடைத்துக்கொண்டிருந்தது. டாக்டர்கள் கேள்விக்கு அவரால் பதில் சொல்ல முடியவில்லை. முடிவு அருகில் நெருங்கிக் கொண்டிருந்தது. ஆச்ரமத்திலிருந்து சில அடியார்கள் அவரைப் பார்த்து ஆறுதல் சொல்ல வேலூர் போனார்கள். அதிசயமாக சாட்விக் அவர்களிடம் பேச ஆரம்பித்தது, இன்று ஈஸ்டர் என்றார். ஈஸ்டருக்கு இன்னும் சில தினங்கள் போகவேண்டும் என்று அவர்கள் தெரிவித்ததற்கு, அவர் "ஆமாம், எனக்குத் தெரியும். ஆனால் இன்றுதான் ஈஸ்டர்" என்று தன் வழக்கமான பிசிறற்ற வெண்கலக் குரலில் அழுத்தந் திருத்தமாகப் பதிலளித்தார்.

*ஒருவனிடம் தூக்கமும் துக்கமும் குறையும்போது அவன் மேதை ஆகின்றான்.*

ஆமாம்! அந்த ரமண பக்தருக்கு அன்றுதான் புனர்வாழ்வு தினம். உளத்தொளிரும் ஆன்மாவைத் தவிர அந்தச் சொற்களை அப்படி யார் பேசியிருக்க முடியும்?

* * * *

ஆர்தர் ஆஸ்போர்ன் பெங்களூரில் இருந்தபோது அவரது தேகவாழ்வு முடிவை நெருங்கிக் கொண்டிருந்தது. அவருக்குப் பேச்சே இல்லை. கடைசியாகத் தன் அன்புக் கணவருக்கு விடையளிக்கும் வகையில் திருமதி லூஸியா ஆஸ்போர்ன் அவரது அசைவற்றுக் கிடக்கும் உடலை வலம் வந்து கொண்டிருந்தாள். திடீரென, அவளது கணவரின் குரலில் "தேங்க் யூ" (உனக்கு நன்றி) என்று அழுத்தமாகச் சொல்வதைக் கேட்டாள். அவரது 'அகத்'தைத் தவிர வேறு யார் அப்போது பேசியிருக்க முடியும்?

உடலும், உயிரும், உளமும் உணர்வும் யாவையும் கடந்த ஆன்மாவில் கரைந்திருப்பதே நமது உண்மை நிலை; இது சாவை ஜயங்கொண்ட வெற்றி வேந்தன், நம் சத்குரு நாதன் ரமணேசனின் உறுதிமொழி.

ஓம் ஸ்ரீ ரமணார்ப்பணமஸ்து

(முற்றும்)

**தீச்சுவா லையாய் வந்து**
**தீயரைச் சுட்டுத் தீர்ப்பாய்**

பேச்சின்றி மூச்சும் இன்றி
பேதலித் துரிமை விட்டு
கூச்சத்தோ டிங்கு வாழும்
கேவலமான நம்மை
தீச்சுடும் படைகளோடு
தீயகா முகரும் சேர்ந்து
பூச்சூடு பாவையர் தம்
பொன்னுடல் சிதைக்கலானார்
அரிய நம் அறங்க ளெங்கே
கூச்சலே இடுவோம் எங்கும்
கலாசாரம் காப்போ மென்றே
பேச்சிலே விட்டால் நம்மை
பண்பாடு காப்போர் நாமே
தீச்சுவா லையாய் வந்து
தீயரைச் சுட்டுத் தீர்த்து
ஆச்சிர மத்தில் வந்து
அமைதியாய் அமர்வாய் கந்தா!

-தி. பாலசுப்பிரமணியம்-

உழைப்பு சுறுசுறுப்பானது. அது வசதிகளையும் நன்மதிப்பையும் தருகின்றது.

# காலனும் ஏமாந்தான்

– செல்வி பா. வேலுப்பிள்ளை அவர்கள் –

காலம் அறிந்து உயிரைக் கவர்பவன் காலன், யமன், எமன், எமதர்மன் எனவும் சொல்வோம். உடம்பிலிருந்து உயிர் பிரியும் நிலையே மரணம். மரண தேவனைக் கண்டு பயம் கொள்ளாதவர் யாருமில்லை. யமன் எப்படி வருவான்? எப்போ வருவான்? உயிர்களை எப்படிக் கவர்வான்? என்பது நமக்குத் தெரியாது. அவன் இருப்பது யமலோகம்; கரிய நிறமும், கோர வடிவமும், கையில் பாசக் கயிறும் கொண்டு எருமைக் கடாவில் ஏறி வருவானாம். அவனது பாசக்கயிறுக்கு எவரும் தப்பியதில்லை.

எப்போதாயினும் கூற்றுவன் வருவான்
அப்போ தந்தக் கூற்றுவன் தன்னை
போற்றவும் போகான் புகழவும் போகான்
நல்லவர் தீயவரெனப் பார்க்கமாட்டான்.

ஒரு கணமேனும் தரிக்கமாட்டான். அதனால் அவனிடமிருந்து மரண பயமின்றித் தப்பவேண்டுமாயின் இறைவன் தாளைப் பற்றிப்பிடிக்க வேண்டும்.

போன உயிர்கள் மீண்டும் திரும்பிய சம்பவங்கள் உண்டு. கஜேந்திரன் என்ற யானை நீர் குடிப்பதற்காகக் குளத்தில் நீர் குடித்துக்கொண்டிருந்தது. யானையின் பெரிய கால் குளத்தில் உலாவிய முதலையின் கண்ணில் பட்டது. முதலை தனக்கு நல்ல உணவு கிடைத்ததென எண்ணி யானையின் காலைக் கௌவியது. யானை, "ஆதிமூலமே! என ஓலமிட்டலறியது. கூப்பிட்ட குரலுக்கு ஓடி வருபவன் கண்ணன். ஓடோடி வந்தார். சக்கராயுதத்தை வீசினார். முதலையின் பிடியிலிருந்து யானையின் உயிர் தப்பியது. எமனுடைய பாசக்கயிறு யானையை ஒன்றும் செய்யவில்லை.

பெண்களுக்குச் சிறந்த அணிகலம் கற்பு. கற்பொழுக்கம் வலிமை மிக்கது. கற்பிற் சிறந்தவள் சாவித்திரி. சத்தியவானின் மனைவி. விறகு வெட்டக் காட்டுக்குப் புறப்படுகிறான். ஆகாத காலம். சாவித்திரி காட்டிற்குச் செல்ல வேண்டாமெனப் பலமுறை சொல்லியும் கேட்கவில்லை. சாவித்திரி தானும் கூடச் செல்கிறாள். சத்தியவானின் ஆயுட்காலம் முடிந்திருக்க வேண்டும். மரம் வெட்டிய கோடரியுடன் மயங்கி வீழ்கின்றான். கரிய உருவம் ஒன்று பாசக் கயிறை வீசுகிறது. கற்புடைப் பெண்ணல்லவா சாவித்திரி. யமன் தன் கணவனின் உயிரை எடுத்துச் சொல்வதைக் கண்டாள். யமனின் பின்னே சென்று தன் கணவனின் உயிரைத் தருமாறு பலமுறை கெஞ்சி மன்றாடிக் கேட்கிறாள்.

வாழ்வின் முடிவு தினம் நிர்ணயிக்கும் காலம் அறிந்து உயிரைக் கவர்வது காலனாகிய எனது வேலை. உன் கணவனுடைய வாழ்வு இன்றுடன் முடிந்துவிட்டது. என் கடமையிலிருந்து தவறமுடியாது எனக் காலன் கூறவும், சாவித்திரி "என் கணவரில்லாமல் என்னால் வாழமுடியாது,

*நீங்கள் தூய்மையான மனமுடையவர் ஆகிவிட்டால் உலகமே உங்களைப் பின்பற்றும்.*

ஐயா! சுவாமி! மனமிரங்கி அவரின் உயிரைத் திருப்பித் தருவீர். இல்லையேல் என்னுயிரையும் எடுத்துச் செல்லுங்கள் என வாதாடியபடி யமலோகம் வரை பின் செல்கிறாள்.

பெண்ணே! நீ உன் கணவன்மீது கொண்டுள்ள அன்பையும் பக்தியையும், கற்பின் திண்மையையும் மெச்சுகிறேன். எனினும் உன் கணவனின் உயிரைத் தவிர வேறு எதுவாயினும் கேள் தருகிறேன் எனக் கூறவும், "ஐயனே! என் மாமன் மாமியார் மகிழ எனக்குப் பிள்ளைப்பேறு கிடைக்க வரம் அருள வேண்டு"மெனக் கேட்கிறாள். அப்படியே தந்தேன் போவாய் பெண்ணே! எனக் கூறிக்கொண்டு யமலோகம் விரைகிறான். சாவித்திரி விடவில்லை தொடர்ந்து கொண்டே, மீண்டும் ஐயனே! "என் கணவனில்லாமல் எப்படிப் பிள்ளைப் பாக்கியம் கிடைக்கும்".

திகைத்துவிட்டான் யமன். யோசிக்காமல் வரம் கொடுத்துவிட்டேன். எமனால் வாக்குத் தவறமுடியவில்லை. "சாவித்திரி! உன் கற்பின் வலிமையால் என்னையே வென்று விட்டாய். நீயும் நின் கணவனும் நீண்டகாலம் சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ்வாயாக என வாழ்த்தி சத்தியவானின் உயிரைத் திருப்பிக் கொடுத்தான். யமலோகம் செல்லவிடாமல் கணவனை மீட்டுக்கொண்டு மாமன் மாமியிடம் வந்து சேர்ந்தாள்.

கண்ணனும் பலராமனும் சாந்தீப முனிவருடைய மாணவர்கள். சாந்தீப முனிவர்க்குப் பிள்ளைகள் இல்லை. ஒரு பிள்ளை சிறுவனாய் இருக்கும்போதே இறந்து விட்டான். அதனால் இவர்களைப் பிள்ளைபோல் வளர்த்து குருகுலக் கல்வியையும் முறைப்படி பயிற்றினார். குருகுலவாசம் முடிந்தது. குருவிடம் ஆசிபெறச் சென்றபோது குருவும் மனைவியும் முகவாட் டத்துடன் இருப்பதைக் கண்டு "குருவே! தங்கள் கவலை என்ன? சொல்லுங்கள் தீர்த்து வைப்போம்" எனக் கண்ணன் கூறினான். சிஷ்யர்களே! பிள்ளைகள் இல்லாத நாம் இந்நாள்வரை உங்கள் இருவரையும் எங்கள் பிள்ளைகளென நினைத்து வாழ்ந்தோம். இப்போது நீங்கள் எம்மை விட்டுப் பிரிவதால் வருந்துகிறோம்.

குருவே! வருந்தவேண்டாம். இப்போதே எமலோகம் சென்று தங்கள் மகனை மீட்டு வருவோம்" கண்ணன் எமலோகம் செல்கிறான். "தர்ம தேவதையே! என் குருநாதரின் பிள்ளையின் உயிரை மீட்க வந்திருக்கிறேன்". "எடுத்த உயிரைத் தரமுடியாது". எமன் உறுதியாக இருவர்க்குமிடையில் வாக்குவாதம். முடிவில் குருவின் மகனை மீட்டு வந்து குருதட்சணையாகக் கொடுக்கிறான் கண்ணன்.

இறைவன் எழுதிய விதியை மாற்றமுடியாது. எனினும் மதியினால் வெல்லலாம். இறைவனாற்றான் மாற்றமுடியும்.

"இம்மூன்று நிகழ்வுகளாலும் எமன் தன் தூதுவரை நோக்கி, "பஞ்சமா பாதகராயினும், பாவமே தஞ்சமென்று உழல்வாரும், நஞ்சை உண்டவன் நாமம் உரைப்பவராயின் அவர்களை அணுகுவதற்கு அஞ்சவேண்டும் எனப் பணிக்கின்றான்.

அருணகிரிநாதரே முருகனை மெய்யன்போடு வழிபடுங்கள்.

"குமரேசரிரு தாளும், சிலம்பும், தண்டையும், சதங்கையும் சண்முகமும்
தோளும் கடம்பும் என் கண்முன் வந்து தோன்றிடின்
கொடுங்கூற்று என் செயும் என்றும், "சூலம் பிடித்து எமபாசம்
சுழற்றித் தொடர்ந்து வரும் காலன் தனக்கொரு காலுமஞ்சேன்"

*அநீதி செய்வதிலிருந்து ஒருவரைத் தடுப்பதே நாம் அவனுக்குச் செய்யும் உதவியாகும்.*

எனப் பாடியுள்ளார். தன் பக்தனுக்காக காலனைக் காலால் உதைத்து மார்க்கண்டேயனின் உயிரைக் காத்தவர் சிவபெருமான். அவரையும் தினந்தோறும் ஐந்தெழுத்து மந்திரத்தைச் சொல்லி வழிபட்டுவரின் யமனைக் கண்டு அஞ்ச வேண்டியதில்லை.

"துஞ்சலும் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சக நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்த கூற்று
அஞ்சவு தைத்தன அஞ்செழுத்துமே"

## நிம்மதிக்கு வழி அளிப்பான் சந்நிதி வேலன்

நீறணிந்து நிதமும் உன் தலம் வந்து வணங்கிட
மாறாத துயர்கள் மாறிடும்; தீராத நோய்கள் தீர்ந்திடும்!
பேறாக மங்களம் மழலைச் செல்வம் சீர்சிறப்பு தானாகவந்திடும்!!
சந்நிதி வேலன் அற்புத அருள் ஒளியால் அணைத்து இதை அருளும்!!

சந்நிதியான் இருக்க எமன் பயம் வருமா?
சொல்லுவீர் முருகா சுகம்பலம் தருமே
வல்லவன் கந்தன் வாழ்த்துவீர்தினமே!!
நல்லவன் குகனே நினைத்திடு மனமே!!

பக்தர்கள் காவடி பவனியில் வருமே!
வித்தகர் பஜனை விடிவைத் தருமே!!
முக்தர்கள் யோகம் முழுமதி நிலையே!
நித்தமும் நினைப்பின் நிம்மதி அளிப்பான் சந்நிதி வேலன்!!!

*-திருமதி நாகேஸ்வரி கந்தசாமி-*

## ஆன்மிகச் சிந்தனை

அகங்காரத்தை அடியோடு அகற்றியவர்களின் இதயத்தில் மட்டுமே இறைவன் குடியேறுகிறான். அகங்காரம் இல்லாதவர்கள் எல்லையற்ற தெய்வீக ஆனந்தத்தை அனுபவிக்கிறார்கள்; காமத்தாலும்; கோபத்தாலும் அவர்கள் நிலைகுலைவதில்லை; சந்தேகங்கள், பயங்கள், பிரச்சனைகள், தொந்தரவுகள் போன்றவைகளெல்லாம் அவர்களிடமிருந்து மறைந்து விடுகின்றன. தற்பெருமை, பிறரை ஏமாற்றுதல், பொறாமை, விரோதம் போன்றவைகளெல்லாம் அவர்களை விட்டு விலகிவிடுகின்றன. நிரந்தரமான தெய்விக அமைதி அவர்கள் உள்ளத்தில் குடிகொள்கிறது.

*அறிவு என்பது பொக்கிஷம் பயிற்சிதான் அதன் சாவி.*

(தொடர்ச்சி...)

# உமாபதி சிவம் அருளிய திருவருட்பயன்



(விரிவான பொருளுரையும் தெளிவுரையும்)

முனைவர் ஆ. ஆனந்தராசன்

## 40. திருவருளோடு பழகாத உயிர்

இற்றைவரை இயைந்தும் ஏதும் பழக்கமிலா
வெற்றுயிர்க்கு வீடு மிகை.

**பொருள்:**

உயிர் அன்றுதொட்டு இன்று வரையிலும் திருவருளோடுதான் கூடியிருக்கிறது. ஆயினும் அத்திருவருளைத் தெரிந்துகொள்ளாமல் அதனோடு சிறிதேனும் பழகுதல் இல்லாமல் இருக்கிறதே. இப்படிப் பயனின்றி வாழ்கின்ற இந்த உயிருக்கு வீடுபெற என்ன தகுதி இருக்கிறது.

**சொற்பொருள்:**

இற்றைவரை- அநாதியாகிய அன்று தொட்டு இன்று வரையிலும், இயைந்தும்- திருவருளோடு கூடியிருந்தும் (அதனைத் தெரிந்துகொள்ளாமல்) ஏதும் பழக்கம் இலா- அத்திருவருளோடு சிறிதும் பழகுதல் இல்லாத, வெற்றுயிர்க்கு- வீணாக வாழ்வைக் கழிக்கின்ற உயிருக்கு, வீடு- துன்பத்தினின்றும் நீங்குதலாகிய வீடு, மிகை- வேண்டாததேயாகும்.

**விளக்கம்:**

*இடையில் ஏற்பட்ட பழக்கம்:*

இப்போது நாம் கண், காது முதலிய இந்திரியங்களோடு பழகி வருகிறோம். அவற்றின் வாயிலாக உலகப் பொருள்களை அறிந்து அவற்றோடும் பழகி வருகிறோம். இந்திரியங்களோடும் உலகப் பொருள்களோடும் நமக்கு உள்ள இந்தப் பழக்கம் பிறவி வந்த பிற்பாடுதான். ஆகவே, இவற்றின் தொடர்பு நமக்கு என்றுமுள்ள தொடர்பு அன்று, இடையில் ஏற்பட்ட பழக்கம் இது என்பது புலனாகும். ஆயினும், இவற்றோடு கொண்ட பழக்கம் எத்துணை வலிமையானது என்பதை எண்ணிப் பாருங்கள்!

இந்த இந்திரியங்கள் நமக்கு வேறானவை என்ற எண்ணமே நமக்கு இருப்பதில்லை. அவையே நாம் என்று கருதிக் கொண்டு அவற்றோடு ஒன்றுபட்டு வாழ்கிறோம். சுவையான உணவு நாவிற்படும்போது "என் நாக்கு இதை விரும்புகிறது" என்று சொல்வதில்லை. "எனக்குப்

*சுருங்கச் சொல்வதே பேச்சுத் திறனின் உயிர் நாடி.*

பிடித்திருக்கிறது" என்று சொல்லி மகிழ்கிறோம். நாவே நாம் என்று இருப்பதையே இது காட்டுகிறது. இப்படி ஒவ்வொரு இந்திரியத்தோடும் "அது அது நான்" என்று ஒற்றுமைப்பட்டு வாழ்கிறோம்.

வாழ்நாள் முழுதும் இந்த இந்திரியங்களோடு இப்படி வேற்றுமையின்றிப் பழகி வருகிறோம். இவ்வளவு தூரம் நெருக்கமாகப் பழகி நின்றாலும் இந்த ஐம்பொறிகள் முதுமையில் மெல்ல மெல்ல நம்மிடமிருந்து விலகி ஓடப் பார்க்கின்றன. மூத்துத் தளர்ந்த நிலையில் இவை நம்மோடு ஒத்துழைப்பதில்லை. நமக்குத் தொல்லை தருகின்றன. நம்மைக் கைவிட்டு விடுகின்றன. இந்திரியங்களோடு பழகி வந்து நமது பழக்கம் இப்படியாக முடிகிறது.

*இனம் இனத்தோடு சேர வேண்டும்:*

உடம்பும் இந்திரியங்களும் உலகப் பொருள்களும் ஆகிய இவற்றோடு கொள்ளுகிற பழக்கம் உயிருக்கு இயற்கையானதன்று. இங்கே ஓர் உண்மையைத் தெரிந்துகொள்ள வேண்டும். இனம் இனத்தோடு சேரவேண்டும் என்பார்கள். உயிர் சித்து என்ற இனம். உடம்பும் உலகப் பொருள்களும் ஆகிய இவையெல்லாம் அறிவற்ற அசத்து என்ற இனத்தைச் சேர்ந்தவை. எனவே, இவை உயிருக்கு வேற்றினம் என்பது விளங்கும்.

சித்தாகிய உயிர் சித்தாகிய திருவருளோடு பழகுதலே முறை. அதுதான் உயிருக்கு இயற்கை. அதற்கு மாறாக உயிர் தன்னினம் ஆகிய திருவருளோடு பழகாமல், தன்னினம் அல்லாத வேற்றினமாகிய அசத்துப் பொருள்களோடு பழகி வருகிறது.

முன்னே கூறியபடி அசத்துப் பொருள்கள் இடையிலே கைவிட்டு நீங்கிவிடும். அப்படியின்றி, உயிர் எங்கே எப்படிச் சென்றாலும் அங்கே துணையாக நின்று உதவுவது திருவருளேயாகும். அதனால் பெரியோர் திருவருள் ஒன்றையே வேண்டி உருகிக் கண்ணீர் பெருகி நிற்பர். "உனது திருவருள் என்று கிடைக்குமோ என்று இரைதேடும் கொக்குபோலக் கவலையுடன் வாடி நிற்கின்றேன். நாயேனைப் பிரிந்திருக்க வேண்டும் என்று உனக்குத் தினையளவுகூட எண்ணமிருக்காது. நான்தான் உன் திருவடி மலரைப் பிரிந்திருக்கிறேன். உன்னை விட்டால் எனக்கு யார் உறவு? ஓடும், கோவணமுமே உறவு என்று நினைத்து, உள்ளம் கசிந்து, தேடும் பொருளும் சிவன் கழலே என நான் தெளிந்து கொண்டேன். உன் திருவடியன்றி வேறு பற்று எனக்கு இல்லை" என்றெல்லாம் சொல்லி வருந்தி நிற்பர். இவர்கள் நிலை இப்படி இருக்க நாமோ என்றும் தொடர்ந்து நிற்கும் தாயாகிய திருவருளை மறந்து, உலகப் பொருள்களையே பற்றி நின்று அவற்றோடு விடாமல் பழகி வருகிறோம்.

*பன்னாடை போன்றவர்கள் நாம்:*

நாமெல்லாம் இவ்வகையில் பன்னாடை போன்றவர்கள் எனலாம். பன்னாடை என்பது இழை நெருக்கம் இல்லாத துணிவகையாகும். அதற்கு நெய்யரி என்ற மற்றொரு பெயரும் உண்டு. நெய் என்பது தேனைக் குறிக்கும். காட்டில் எடுத்த தேனை வடிகட்டுவதற்குப் பன்னாடையைப் பயன்படுத்துவார்கள். பன்னாடை தன்மேல் வார்த்த தேனின் சாரத்தைக் கீழே ஒழுகவிட்டு, வேண்டாத தூசி கசடு முதலியவற்றைத் தன்னிடம் வைத்துக் கொள்ளும். அந்த நிலையில் நாம் இருக்கிறோம். நிலையற்றனவாய் நம்மிடம் சிலகாலம் இருந்து

*மகிழ்ச்சியோடு கற்பதை நாம் ஒருபோதும் மறப்பதில்லை.*

செல்கின்ற பொருள்களையே நாம் விடாமல் பற்றி நிற்கிறோம். இப்பிறவியில் மட்டுமின்றி எப்பிறவியிலும் நம்மோடு தொடர்ந்து நின்று, தனு கரண புவன போகங்களையெல்லாம் தந்து காத்து வருகின்ற திருவருளை மறந்து விடுகிறோம்.

ஓரொரு சமயத்தில் திருவருளைப் பற்றிய நினைப்பு நமக்கு வருவதுண்டு. ஆன்மீகச் சொற்பொழிவைக் கேட்க நேரும்போது அந்நேரத்தில் மட்டும் திருவருளை நினைக்கிறோம். நமது ஆற்றலையும் மீறி, நாம் தடுக்க முயன்றும் முடியாமல் ஏதேனும் ஒரு துயர நிகழ்ச்சி நடந்து விட்டால் அப்போது திருவருள் நினைப்பு வருகிறது. மற்ற சமயங்களில் அது பற்றிய நினைவே இருப்பது இல்லை. இவ்வாறு ஓரொரு சமயத்தில் திருவருளை நினைக்க நேர்ந்தாலும் அந்த நினைப்பு அழுத்தமாக இருப்பதில்லை என்பதே உண்மை.

பாசி மூடிய குளத்தில் நீர் புலப்படுவதில்லை. அதிலே ஒரு கல்லை விட்டெறிந்தால் கல் விழுந்த அந்த நேரத்தில் மட்டும் பாசி சிறிது விலக நீர் புலப்படும். பிறகு மீண்டும் பாசி வந்து மூடிக்கொள்ளும். பாசி படர்ந்த அந்தக் குளம்போல நாம் இருக்கிறோம். கல்லெறிபட்ட அந்தக் கணத்தில் மட்டும் நீர் புலப்படுவது போலத் திருவருளை நினைக்க வேண்டிய நிகழ்ச்சி ஏற்படுகிற அப்போது மட்டும் திருவருளைச் சற்று நினைக்கிறோம்.

பற்பல பிறவிகளை எடுத்துப் பழகிய நமக்கு உலகப் பழக்கமே மீதூர்ந்து நிற்கிறது. உலகப் பழக்கம் உள்ள வரையில் திருவருளோடு பழகுதல் என்பது இயலாது.

*வெற்றுயிர்:*

இவ்வளவு காலமும் திருவருளோடு கலந்து நின்றும் அதைச் சற்றேனும் உணரமாட்டாத உயிரை "வெற்றுயிர்" என்று குறிப்பிடுகிறார் ஆசிரியர்.

மணிவாசகர் நீத்தல் விண்ணப்பத்தில் தன்னை வெற்றடியேன் (23) என்றும், வெறுந்தமியேன் (25) என்றும் சொல்லிக் கொள்வார். வெறுமை என்பதற்குப் பயனின்மை என்பது பொருளாகும்.

பயனின்மையாவது, இறைவனால் தரப்பெற்ற உடம்பையும் கருவிகளையும் கொண்டு அவனது அருளைப் பெற முடியாமல் பிழைகளையே பெருக்கிக் கொள்ளுதல்; எறும்பு களிடையே அகப்பட்ட புழுவென ஐம்புலன்களுக்கு ஆட்படுதல்.

சுருங்கக் கூறினால், வெறுமையான வாழ்வு என்பது திருவருளை மறந்து உலக வாழ்வில் மயங்கிக் களிப்பது. இவ்வாறு வாழும் உயிரையே இச்செய்யுளில் வெற்றுயிர் என்றார் ஆசிரியர் உமாபதிசிவம்.

(தொடரும்...

**ஆன்மீகச் சிந்தனை**

மனம் பொதுவாக நல்ல நிலைகளையும், கெட்ட நிலைகளையும் அனுபவிக்கும்படி செய்கிறது. ஆனால் அது உங்களை ஆன்மிக சாதனைகளில் ஈடுபடாமல் இருக்கும்படி செய்ய இடம்கொடுக்காதீர்கள். நீங்கள் உங்களுடைய ஆத்ம சாதனைகளைத் தொடர்ந்து செய்துகொண்டே இருந்தால், மனநிலை தானாகவே நல்ல முன்னேற்றம் அடையும். எப்போதும் மனதில் நல்ல சிந்தனைகளையே வளர்த்துக்கொள்ள வேண்டும். உயர்ந்த தெய்வீகமான உரையாடல்களில் ஈடுபடவேண்டும்.

*ஒற்றுமை உள்ளத்தால் உண்டாதல் வேண்டும்.*

# ஆருக்கு ஐயா அக்கறை

– திரு முருகவே பரமநாதன் அவர்கள் –

"ஆய்ந்து ஓய்ந்து பாராதவன் கருமம் தான் சாகக் கடன்" என்பது முதுமொழி. உசாவிக் கட்டாத கல்யாணமும் துழாவிக் காச்சாத கூழும் நேர்சீராய் அமையாது. காய்தல் உவத்தலின்றி ஒரு பொருட்கண் ஆய்தல் அறிவுடையார் கடமை. எனவே முன் யோசனையுடன் எதையும் முன்னெடுத்தலே முறையானது. பொது வாழ்விலுஞ் சரி, தனி நபர் வாழ்விலுஞ் சரி தாபன அமைப்பிலுங் கூட முன்னேற்பாடாக எண்ணித் துணிய வேண்டும். துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு என்றார் ஐயன் வள்ளுவன். வெள் ளம் வரமுன் அணை கட்ட வேண்டும். திட்ட மிட்டுக் கருமம் மேற்கொளல் வெற்றியைத் தரும். மனிதன் சிந்திக்கும் ஆற்றல் வாய்ந் தவன். நேரா நோன்பு சீராகாது. இக்கண் ணோட்டத்தில் நம் எதிர்கால விளைவுகளைச், சாதக பாதகங்களை ஒவ்வொரு கருமங்களி லும் சீர்தூக்கிப் பார்த்தால் நல்ல பயனளிக் கும். வெற்றியும் கிட்டும். இந்த அவதானம் தனிநபருக்கும் சமூகத்துக்கும் பொருந்தும் அன்றோ.

உலக நோக்கிற் சமயங்கள் நெடுங் காலத் தொடர்புடையன. ஊராறோர் தேவ குலம், தேசந்தோறும் தெய்வந்தொழு என்ற பொன்மொழிகள் நம்மை வாழ வைத்தன. வளர்த்தும் விட்டன. மனிதனுக்கு அறிமுகம் செய்யப்பட்ட ஆண்டவன், ஆலயம், வழிபாடு வழிப்படுத்துகை. பொருத்தமான சமய நூல் கள், காலந்தோறும் எம்மை வளர்த்துவிட்டன. இப்படியான சமய நோக்கிற் சமயம் செய்த பங்களிப்பு மேன்மையானது. மிகமிகத் தொன்மையான சைவமே எமது சொந்தச் சமயம். சிறந்ததெனப் பேசப்படும் பெருமை யும் வாய்ந்தது. அதேவேளை மற்றைய சமயங்களைத் தீண்டாமல் அவற்றையும் கணித்துத் தன்னை வழிநடத்தியது, நடத்து கின்றது சைவம். இது நீதியெனப் போற்றவும் பட்டது. எனினும் களப்பிரயர் காளாமுகர், பாசுபதர் அநகர் வைணவர், பௌத்தர், முகமதியர், கிறித்தவர்கள் என்போர் காலத் துக்குக் காலம் எம்மை மெலிவடையவும், நலிவடையவும் செய்தனர். இவற்றுக்கெல் லாம் முகங்கொடுத்து தன்னைப் பேண வேண் டிய காலகட்டங்கள் வந்தபோது எதிர்த்துப் போராடி மாபெரும் வெற்றிகளையும் கண்டது நம் சமயம். இப்படியான கிறீத்தவ அபாயம் நம்மைச் சூழ்ந்தவேளை நாவலர் பெருமான் எதிர்த்துப் போராடி சைவசமய மகோத்தார ணராய் விளங்கினார். ஒரு பகுத்தறிவு வாதியாகவும் நாத்திகராயும் வாழ்ந்த கந்த முருகேசனாரே நாவலன் கோவை பாடி அவ ரைப் பேணினார் என்றால் நாவலர் பெருமை நாவால் நுவலும் தரத்தது அன்று. இன்று அவரின் தேவை வந்து விட்டது. போற்றி முன் செல்வோம். நாவலர் என்ன போடுதடியா. நம் ஊன்று கோல் அவரேதான். அவர் சிவம். சைவம். தமிழ் என வாழ்ந்தவர். அவருக்குப் பல்கலைக்கழகத்தார் இந்து எனச் சாயம் பூசுகின்றனர். இவர்கள் சைவசமயிகளன்று. இன்று சைவத்துக்கோர் அபாயச் சங்கொலி வந்துவிட்டது. காரணம் மனமாற்றம் மத மாற்றமாய் விட்டமை வெளிப்படையே. சமய நம்பிக்கை உறுதியான பல காரணிகளால் பெலவீனம் அடைந்து விட்டது. இளந்தலை முறையினரின் - தளிர்களின் எதிர்காலச் சமய

ஆசை ஒழிந்த இடத்தில் நரக வேதனை இல்லை.

நிலை என்ன என்ற ஏக்கம், விசாரம். பெற்றோர்களின் உள்ளத்தின் நெருப்பாய் முளாசிக் கொண்டிருக்கிறது. சைவத்துக்கும் இவர்களுக்கும் ஒரு சமாந்தர நிலையைக் காணலாம். கவலை, துன்பம், நெருக்கடிகள், சபலங்கள், மனச் சஞ்சலங்கள், தோல்விகள் வரும்போது இவர்கள் யாரிடம் முறையிடுவார்கள்? எப்படிச் சாந்தியடைவார்களென்ற மன அழுத்தம் சிறப்பாக - தூர தேசங்களிலே இவர்களை எந்நேரமும் வருடிக்கொண்டே இருப்பது சகசமே. இதற்கான காரணிகள் கண்டுபிடிக்கப்பட்டு மாற்று வழிகள் மேற்கொள்ளப்பட வேண்டிய காலம் இது. நாம் வாளாதிருத்தல் முறையன்று. ஆதியிலே இருந்த சமய நிலை என்ன? ஒரு இனத்தின் (சிறப்பாகத் தமிழர் சமுதாயத்தின் முழுமையான வாழ்வியலை வழிப்படுத்தி ஒழுங்கும், ஒழுக்கமும் வேலியாக, பழக்கவழக்கமும் நுழைவாயிலாக - நம் குழந்தைகள் சீரும் சிறப்புடனும் வாழ வகுத்து வந்ததுபோல நாமும் முயற்சிகளெடுத்து முன்னேற்றப் பாதையில் நம்மை வழிநடத்த வேண்டுமன்றோ?

சமய அடித்தளம் தனிநபர் நோக்குடையது அன்று. சமுதாயக் கண்ணோட்டம் உடையது. தெய்வ வழிபாடு நிறைந்தது. ஆத்மீக இலக்குடையது. உயிரோடு இணைந்தது. நல்லொழுக்கங்களைக் கட்டி வளர்த்து, உருப்படியான கொள்கைகளைப் பரப்பி, ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்கி, வையத்து வாழ்வாங்கு வாழ வழிவகுத்தது சைவ சமயம். ஒவ்வொரு சமயங்களுக்கும் நாகரிகம், பண்பாடு, கலை, கலாச்சாரம், வழிபாட்டு நெறி, சடங்கு சம்பிரதாயங்கள், பழக்கவழக்கம், நடைமுறைகள் மரபுகள், பாரம்பரியங்கள், ஆலய கட்டுமானங்கள், ஆராதனை வழிபாடு வித்தியாசமானவை. நாம் அநுசரிக்கும் சைவம் தனித்துவமானது. சிவனையே முழுமுதற் கடவுளாக வழிபாடியற்றுவது. இன்று சைவநெறியை இந்து மதம் என்று அழைப்பது நியாயமானதா? மதம் ஒரு ஆணவத்தை வெளிப்படுத்துகிறது. அதனாலேதான் சிவ வணக்கக்காரர் தம் சமயத்தைச் சைவமென்றனர். இ∴து வாழ்க்கை நெறி. எனவே இந்துமதம் எது சைவசமயம் எது என்ற உண்மை யாவருக்கும் புரிந்த நிலைதான். இந்த நிலை தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

வேதங்கள் கூறும் பல தெய்வ வழிபாட்டில் சைவம் எதிலடங்கும். சைவசமயிகளின் வழிபடு தெய்வம் எது. ஒன்றா. பலவா? பெருந் தெய்வ வணக்கம், சிறு தெய்வ வணக்கம் வந்தவாறு எது? இன்று புதிய தெய்வ வழிபாடு ஏன் புகுத்தப்பட்டது. இதனாற் சைவ மார்க்கத்துக்கு ஏற்பட்ட சாதக பாதகங்கள் மாற்றங்கள் எவை? இந்து சமய வழிபாட்டு அமைப்பு எது? யார் சைவ சமயிகள், யார் இந்துக்கள்? அல்லது இரண்டும் ஒன்றா? சைவ தர்மங்கள் தத்துவங்கள் எவை. இந்துமத தர்ம அடிப்படை எது? இந்துசிம் சைவாசிம் என இரு ஆங்கில நூல்களைச் சைவப் பெரியார் சிவபாத சுந்தரனார் எழுதியுள்ளார். பிள்ளைக் கவி சிவராசசிங்கமும் பல கட்டுரைகள் எழுதியுள்ளார். ஆங்கிலத்தில் எழுதப்பட்ட நூல்களைப் படித்து மாணவர்கள் பரீட்சை எழுதிப் பத்திரமும் பெற்றுள்ளனர். இவ்விரு சமய நோக்கையும் ஒப்பீடு செய்து ஆய்வு நூல்களும் வெளிவந்துள்ளன. வேதாந்தம் பேசிய சங்கரர் ஈற்றிற் பஜகோவிந்தம் பாடியதேன். இப்படிப் பல வினாக்கள் எம்மத்தியிலே எழுகின்றன. விநாயகர் பலர் விநாயகர் அவதாரம் பற்றி மாறுபட்ட கருதுகோள்கள் உள்ளன. முருக வழிபாட்டிலும் அவர் உற்பத்திபற்றி அபிப்பிராய பேதமுண்டு. வடநாட்டு ஸ்கந்தனும், தென்னாட்டு முருகனும் இணைந்து

சுப்பிரமணிய வணக்கம் ஆனது என்ற அபிப் பிராயமும் நிலவுகிறது. துர்க்கா ஆலயங் களும் பல. இதனாலேயே எந்த ஆலயத் துக்குப் போவது- எந்தத் தெய்வத்தை வணங்குவது. எல்லாத் தெய்வங்களையும் வழிபடாவிடின் மனம் அமைதி காணுதில் லையே? என்ற மனோவியாகூலம் ஏற்படுவதும் இயல்பே. கோயிலிலே தெய்வவடிவங்கட்குக் குறைவே இல்லை. எப்புறம் கால் வைத்து வணங்குவதென்றே தெரியவில்லை. விப்ரர்கள் சிவனைப் பரிவாரத் தெய்வமாக மாற்றியும் விட்டனர். இதற்குரிய சிவதண்டனை இல்லா மலுமில்லை. சிவநிந்தனை குடியையே அழித்துவிடுமன்றோ?

எமது சமயம் எது - எம் வழிபடு கடவுள் யார் என்ற நிலையில்- தடுமாறும் சைவ சமயிகளின் நிலைப்பாடு எல்லாரையும் தானே சிந்திக்க வைக்கிறது. ஏகப்பட்ட கடவுளரும், ஏகப்பட்ட ஆலயங்களும் ஏகப்பட்ட நூல் களும் இருந்து என்ன பயனடைந்தோம். ஒரு புனித விவிரியம், பரிசுத்த குர்ஆன், தூய தம்மபதம், திரிபிடகம் போன்ற ஒரு கையேடு நமக்கு இல்லையே! என நாம் நினைப்பதிற் தவறில்லையே? புரோகிதரைக் கேட்டாலும் பதில் கிடைக்காத நிலையில் பலர் மதம் மாறினர். தெய்வங்களும் கோயில்களும் வெளி யூர்களிற் பெருகும் அளவுக்கு தெய்வீகம் வலுப்படவில்லை. சமய அறிவு சைபர்தான். கோயில்கள் பெருகியும் சமய அறிவற்றவர் களாய் நாம் வாழலாம். ஆலயங்களும், அந் தணர்களும், சமய தாபனங்களும் ஆவன செய்யாவிடின் கால வெள்ளத்தாற் சமயம் அடியுண்டு போகும் என்பதை இனியேனும் சைவக்காரர்கள் சிந்திப்பார்களாக. சாஸ்தா வழிபாடு, ஆஞ்சநேயர் வழிபாடு பல ஆலயங் களிலே புகுத்தப்பட்டுள்ளன. வருமானமொன்றே அவர்களின் இலக்கு. மாதா கோயில் கிறித் தவ மதத்தோடு தொடர்புடையன. சந்தோஷி மாதா, மஞ்ச மாதா எச்சமயிகளின் வழிபடு தெய்வம்?

பௌத்தர்களைத் தவிர வேறு எந்த மதத்தினரும் சைவ ஆலயங்களுக்குச் செல் வதே இல்லை. ஆனால் சைவசமயிகள் பல தெய்வ வழிபாட்டினர். ஆதலினால் புறச்சமய தெய்வ வழிபாட்டை ஏன் ஏற்றனர். ஆய்வுக் குரியது மட்டுமன்றிச் சைவ ஆலயங்களில் ஆங்கிலப் புத்தாண்டையும் நத்தாரையும் கொண்டாடுமுகமாக ஆலயங்களைத் திறந்து கைவிஷேசம் கொடுப்பர். ஈஸ்ருக்கு அகண்ட நாம பஜனையும் செய்வர். ஆகவே கிறீஸ்தவ ஊடுருவல் சைவத்தைப் பெரிதும் பாதித்துள் ளமை வெள்ளிடைமலையாம்.

இறைவன் திருமேனிகள் வழிபாட் டுக்கு உரியன. மூல மூர்த்தியைப் படம் பிடிப்பதும், விளம்பரத்துக்குப் பயன்படுத்து வதும் தெய்வ நிந்தனைக்குரியதுமாம். கலண்டர்களிலே தெய்வப் படங்களை அடித்து அன்பளிப்புச் செய்வதும், ஆலய விளம்பரங்களிலே பிரசுரிப்பதும் எவ்வளவு தவறான செயல். அத்துடன் கும்பாபிடேக மலர்கள் கூடக் குப்பை வாளியை நிரப்பு வதும் பாபச் செயலாகும்.

இவ்வண்ணம் வர்த்தகர்கள், தொழில் முகவர்கள், புரோகிதர்கள், சோதிடர்கள், தரகர் போன்றவர்கள் பஞ்சாங்கக் கலண்டரில் கடவுட் படங்களைப் பிரசுரியாமல் இயற்கை எழிலைப் படமாக வெளியிடலாமே. வேறு மதத்தினர் இவ் ஈனச் செயலைச் செய்கிறார் களா. இவை எல்லாம் எங்கே போகின்றன. குப்பை சேகரிக்கும் கனரக வாகனங்களிலே சேர்க்கப்பட்டு அழுக்கோடு அழுக்காய்ச் சேர்ந்து எரிக்கப்படும். இ..து நம் சமய வழிபடு தெய் வங்களை மதியாது நிந்தனை செய்வதாகும். இதைக் கண்டு பிற மதத்தினர் நம்மைப் பார்த்து நகை செய்கிறார்கள். இஸ்லாமியரின் மதப்பற்றை முன்மாதிரியாகக் கொள்ள

*நேர் பார்வை நம்புவதற்குரியவை.*

வேண்டும். சேர்ச்சிலே, பள்ளிவாசலிலே, விகாரைகளிலே வழிபடும்போது அமைதி காக்கப்படுகிறது. நம் ஆலயங்களிலே இது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். சைவம் ஒரு கலப்புச் சமயமன்று. தனித்துவம் மிக்க தனிச் சமயம். நம் சமயத்தையும் தெய்வங் களையும் மதிப்போம். முன்மாதிரியாய் வாழ்வோம்.

சிந்திப்போம் - சீர்தூக்கிப் பார்ப்போம் - செயற்படுவோம்.

---

## பற்றே இல்லாத நிலை

இளவரசன் ஒருவன், துறவி ஒருவரைச் சந்தித்தான். "ஐயா! நான் ஆன்மீகப் பாதையில் முன்னேற தாங்கள் வழிகாட்ட வேண்டும்!" என்று கேட்டுக் கொண்டான்.

"முதலில் நீ யார்? எங்கிருந்து வருகிறாய்?" என்று கேட்டார் துறவி. "நான் ஓர் இளவரசன். பெயர் மோகஜித்".

"பற்றுதலை வென்றவன் என்பது இதன் பொருள். நீ பற்றுதலை வென்று விட்டாயா?" என்று கேட்டார். "நான் உட்பட எனது நாட்டினர் அனைவருமே பற்றுதலை வென்றவர்கள்தான்!"

நான் சோதித்துப் பார்க்கிறேன்" என்ற துறவி, இளவரசனை விட்டுவிட்டு, தான் மட்டும் அவனது நாட்டுக்குச் சென்றார்.

கோட்டை வாயிலில் இருந்த பணிப்பெண்ணிடம், "அம்மா! காட்டு வழியில் வரும்போது திருடர்கள் இளவரசனைக் கொன்று விட்டார்கள். இந்த அவலச் செய்தியை உடனே அரண்மனையில் தெரியப்படுத்த வேண்டும்!" என்றார். ஆனால், அவள் "இளவரசர் பிறந்தார் இறந்தார். நான் அன்றாடம் செய்யும் கடமையை விட்டுவிட்டு ஏன் அரண்மனையில் இந்தச் செய்தியைச் சொல்ல வேண்டும்?" என்று தனது பணியைத் தொடர்ந்தாள்.

நேராக அரசவைக்குச் சென்ற துறவி, "அரசே! இளவரசர் கொல்லப்பட்டார்!" என்றார் அதைக்கேட்டு அதிர்ச்சி அடையாத அரசன், "மரத்தில் சிறிது காலம் தங்கியிருந்த பறவை, மரத்தைவிட்டுப் பறந்து சென்றுவிட்டது!" என்றார். அருகில் இருந்த அரசி, "இந்த உலகம் வழிப்போக்கர்கள் தங்கும் சத்திரம் போன்றது. மனிதர்கள் இரவில் அங்கு தங்குவார்கள். விடிந்ததும் தங்களது வழியே சென்று விடுவார்கள். இந்தக் குறுகிய காலத்துக்குள் மகன் என்றும், மகள் என்றும் பாசம் பாராட்டுவது முட்டாள்தனம்!" என்றாள்.

இளவரசனின் மனைவி, "கணவன்- மனைவி என்பவர்கள், பெருக்கெடுத்து ஓடும் ஆற்றில், இணையாக மிதந்து செல்லும் இரு மரக்கட்டைகள் போன்றவர்கள். வெள்ளப் பெருக்கில் அந்தக் கட்டைகள் பிரிந்தே ஆக வேண்டும். அதன் போக்கில் செல்வதுதான் கட்டைகளின் தன்மை!" என்றாள். அவர்களது பேச்சைக் கேட்டு மகிழ்ந்த துறவி பின்பு இளவரசனிடம் வந்து, "நீ நாட்டில் இல்லாதபோது வெளிநாட்டுப் படை உனது நாட்டை கைப்பற்றிக் கொண்டது. அரசனும் அரசியும் உன் மனைவியும் சிறைப்பிடிக்கப்பட்டு அடிமைகளாகி விட்டார்கள். நாட்டு மக்கள் துன்பப்படுகிறார்கள்" என்றார்.

"துறவியாரே! இந்த உலகில் யாவும் நீர்க்குமிழி போன்றன. அவற்றின் வாழ்வு நொடிப்போது மட்டுமே. இவற்றில் ஆர்வம் காட்டினால், நிலையான இறைவனை அடைய முடியாது? இறையருள் பெற துணை செய்யுங்கள்" என வேண்டினான். அவனது பற்றற்ற தன்மையால் மகிழ்ந்த துறவி, "உண்மையிலேயே பற்றுதலை வென்ற நீ ஆன்மீக வழியில் உயர் நிலை அடைவாய்!" என்று அவனுக்குத் தகுந்த வழிமுறைகளைச் சொல்லி அனுப்பினார்.

*நல்ல வாய்ப்பை ஒருபோதும் மறுக்காதீர்கள்.*

# பகவத்கீதையின் உலகம் தழுவிய பரந்த நோக்கு

(தொடர்ச்சி...

– சுவாமி கிருஷ்ணானந்தா –

தமிழில்: திரு பூ. சோதிநாதன் அவர்கள் –

## அத்தியாயம் – 03

## உண்மையின் துறவு மனப்பாண்மை

### 1. பிரதான விடயத்தின் நுழைவாயில்.

பகவத்கீதை முழுவதிலும் மேலோட்டமாக முக்கியமாகத் திகழ்கின்ற பொது அம்சங்களைச் சென்ற இரண்டு அத்தியாயங்களிலும் சுருக்கமாக அவதானித்தோம். இப்பொழுது பகவத்கீதையின் பிரதான விடயத்திற்குள் நுழைய வேண்டியவர்களாக இருக்கின்றோம். பகவத்கீதை என்ற ஆன்மிகநூல் தோன்றிய சூழ்நிலை நிசமான ஒரு மனித சூழ்நிலையே ஆகும். அந்தச் சூழ்நிலை ஒவ்வொரு கட்டத்திலும், ஒவ்வொரு கணத்திலும், ஒவ்வொரு சூழலிலும் எதிர்பார்க்கக்கூடிய பிணக்கு, எதிர்ப்பு, யுத்தம் முதலானவை நிகழ்ந்து கொண்டிருக்கும் யுத்தச் சூழ்நிலையை ஒத்தது என முன்னரே கண்டோம். இந்தப் பிரபஞ்சத்தின் கட்டமைப்பு மிகச் சிக்கலான பல்வேறு அடுக்குகளைக் கொண்ட பிணக்கைத் தன்னகத்தே கொண்டதாகத் தோன்றுகிறது. அந்தப் பிணக்கைத் தீர்த்து வெற்றிகொள்ள வேண்டியவர்களாக நாம் இருக்கின்றோம்.

### 2. கடவுளை எமக்குள்ளே காணல்.

பிணக்கை அவ்வாறு வெற்றிகொள்வதை நாம் வாழ்க்கையில் சாதிக்கும் சாதனை என அழைக்கின்றோம். ஒரு குறித்த சூழ்நிலையில், பிணக்குச் சூழ்நிலை ஒன்றே எதிர் எதிர்ச் சூழ்நிலைகளாகக் காணப்படும். வாழ்க்கையின் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இப்படியான பிணக்கு இல்லை என்றால் எம்மைச் செயலில் தூண்ட வேறு சக்திகள் எவையும் இருக்கா. அவ்வாறு பிணக்கு இல்லாத நிலைமையில் செயல் செய்யவேண்டிய தேவை எதுவும் இருக்காது. அங்கே சாதனை என்ற ஒரு விடயத்துக்கும் இடம் இருக்காது. ஒரு கொள்கை, அதற்கு எதிரான எதிர்க்கொள்கை என்று அழைக்கப்படும் இரண்டு எதிரெதிர நிலைப்பாடுகளுக்கு இடையே ஓர் இணக்கத்தைக் கொண்டுவருவதன் விளைவானதே சாதனை ஆகும். அப்படியான எதிர் எதிரான இரண்டு நிலைப்பாடுகளையும் ஒன்றுபடுத்தவேண்டும்.

எமது வாழ்க்கையில் மேலும் மேலும் உயர்ந்து செல்லும் ஒவ்வொரு கட்டத்திலும் தோன்றும் அந்த இரண்டு நிலைப்பாடுகளையும் இணைத்து ஒன்றுபடுத்திச் சாதிக்கும் பெரிய சாதனை முறையையே பகவத்கீதை எமக்குக் காட்டுகின்றது. அதனைச் சாதித்து அதன் பலனான ஓர் உருவமாக நாம் மாற்றம் அடைவோம். அவ்வாறு நாம் மாறிச் சென்று முடிவான உச்சநிலையில் எல்லாவற்றையும் எம்முள்ளே கொண்டுவரக்கூடிய ஓர் ஆளாகும்

சாதனையைச் செய்து முடிப்போம். அந்த நிலையில் நாம் பிரபஞ்சத்தில் நின்றும் எம்மைப் பிரிக்க முடியாத வகையில் அந்த ஒன்றுபடுத்தல் சாதனையை நிறைவேற்றுவோம். இதனையே கடவுளைச் சாட்சாத்காரமாக எமக்குள்ளே கண்டு உணர்தல் என்றும், கடவுளை அடைதல் என்றும், மற்றும் பல வகைகளிலும் கூறப்படுகின்றது.

### 3. விஷாதமும் ஒரு யோகமே.

எல்லா விடயங்களுக்கும் இடையேயான இறுதிச் சமநிலை என்னும் பிரபஞ்ச ஒன்றுபடுத்தலுக்கு எம்மை அழைத்துச் செல்வதையே பகவத்கீதை தனது நோக்கமாகக் கொண்டிருக்கின்றது. ஆனால் வாழ்க்கையின் குறிக்கோளை நோக்கிச் செல்லும் இந்தச் சாதனையை நாம் படிப்படியாக நிறைவேற்றவேண்டி உள்ளது. ஒவ்வொரு கட்டத்திலும் நாம் எவ்வாறு கவனமாக இருக்கவேண்டும் என்பதற்குத் தேவையான எச்சரிக்கைகளைப் பகவத்கீதை படிப்படியாக விளக்கிச் செல்லுகின்றது. அந்த விளக்கமே பகவத்கீதையின் யோகம் ஆகும்.

நாம் எல்லோருமே பகவத்கீதையின் பல்வேறு அத்தியாயங்களையும் மேலோட்டமாகப் பார்த்திருக்கக் கூடும். பகவத்கீதை எதைப்பற்றியது எனவும் நாம் அறிந்திருக்கக்கூடும். பகவத்கீதையில் எத்தனை அத்தியாயங்கள் உள்ளன. என்பதையும் நாம் அறிந்திருக்கலாம். ஒவ்வொரு அத்தியாயமும் எதைச் சொல்கின்றது என்பதையும் நாம் அறியலாம். வழமையாக முதலாவது அத்தியாயத்தில் உள்ள அர்த்தம் முழுவதையும் அறிய முயற்சிக்காது மேலே சென்று விடுகின்றோம். பகவத்கீதைக்கு வியாக்கியானம் செய்த பெரும்பாலானவர்கள் முதலாவது அத்தியாயத்தை அதன் ஓர் முகவுரை என்ற அளவில்தான் காட்டுகின்றனர்.

பொதுவாக நாம் ஒரு நூலிலுள்ள முகவுரையைத் தவிர்த்துவிட்டு அதன் பிரதான விடயத்துக்குச் செல்வதே வழக்கம். ஆனால் பகவத்கீதையைப் பொறுத்தவரையில் அது தவறாகும். ஒரு நூல் ஆசிரியர் தனது நூலுக்கு வழங்கும் முகவுரை என்ற வகையில் பகவத்கீதையின் முதலாவது அத்தியாயம் அமையவில்லை. வியாசரோ கிருஷ்ண பரமாத்மாவோ முதலாவது அத்தியாயத்தைப் பதிப்பாசிரியர் குறிப்புப்போல அமைக்கவில்லை. முதலாவது அத்தியாயத்தின் இறுதியில் அது ஒரு யோகம் என்றும் அதனை "அர்ச்சுன விஷாதயோகம்" என்றும் குறிப்பிடுவதைப் பார்த்து நாம் ஆச்சரியப்படக்கூடும். உண்மையில் விஷாதம் அல்லது மனச்சஞ்சலத்தை ஒரு யோகம் என்பது ஆச்சரியமானதே. பகவத்கீதையின் ஏனைய அத்தியாயங்கள் ஒவ்வொன்றும் எவ்வாறு யோகம் ஆகுமோ அவ்வாறே முதலாவது அத்தியாயமும் ஒரு யோகமாகும். அந்த முதலாவது அத்தியாயம் கீதையின் பிரிக்கமுடியாத பூரண கோட்பாட்டினது ஒரு முக்கியமான அம்சம் ஆகும். அதுவும் ஒரு யோகமாக இருப்பதனால் அதனைத் தவிர்த்து விலக்கிவிட்டுப் பகவத்கீதையைப் புரிந்துகொள்ள முடியாது.

### 4. முன்னேற ஒரு மாபெரும் தூண்டுதல்.

மகாபாரதம் என்ன இதிகாசத்தின் கதாநாயகனான அருச்சுனன் இருக்கும் சூழ்நிலை பொதுவான மனித சூழ்நிலையில் ஓர் அடையாளம் அல்லது ஒரு குறியீடு ஆகும். அவன் தன்னை ஒட்டுமொத்தமான மனித நிலைமையிலேதான் காண்கிறான். எங்களது நிலைமையும்,

*உன் பணியை முடிந்தவரை சிறப்பாகச் செய்.*

ஒவ்வொரு மனிதனது நிலைமையும் அருச்சுனனது அந்த நிலைமையே அன்றி வேறில்லை. மகாபாரதம் மிகப்பழைய காலத்தில் நடந்த வரலாற்று நிகழ்ச்சியைக் கதையாக மட்டும் எமக்குத் தருகின்ற ஒரு நூலன்று. அது ஒரு தேசத்தினது பண்பாட்டை விளக்குகின்றது. மேலும் அது ஒரு தேசத்தினது மட்டுமன்றி மனித சமுதாயம் முழுவதினதும் பண்பாட்டின் தன்மையையும் விளக்குகின்றது என்றே கூறலாம். பகவத்கீதையின் நோக்கம் மனித சமுதாயம் முழுவதற்கும் அது சென்றடைய வேண்டிய பாதையைக் காட்டுவதாகவே அமைகிறது. படிப்படியாக அந்தப் பாதையைக் காட்டி அதன் மூலம் அடையக்கூடிய இறுதி நிலைக்கு அது எம்மை வழிநடாத்திச் செல்கின்றது.

மகாபாரதம் என்ற இதிகாசத்தின் உள்நோக்கத்தினது சாரமாக அமைவதே பகவத்கீதை ஆகும். பகவத்கீதையிலும் அந்த இதிகாசத்தின் சாயல் இருந்தபோதும் அது ஒப்பீட்டளவில் ஈடு இணை அற்ற ஒன்றாகும். பகவத்கீதையின் வெளித்தோற்றம் அது ஒரு மொழியியல், கலைப்படைப்பு, புனைகதை, பொதுவான கதை என்பதாகும். வீரகாவியமான இதிகாசச் சூழலில் நிகழ்ந்த ஒரு சம்பவமாக இருப்பதனால் அவ்வாறு பகவத்கீதை வெளித்தோற்றத்தில் காணப்படுகிறது. அத்தோற்றமான வீரகாவியப் பண்பு மகாபாரதத்திலும் பகவத்கீதையிலும் முற்றும் செறிந்திருக்கின்றது. பகவத்கீதை கோபாலனது ஓர் ஆன்மிக நூல் அன்று. அல்லது அது தன்னை எல்லாவற்றில் இருந்தும் விடுவித்த துறவி ஒருவரால் செய்த ஆன்மிக நூலும் அன்று. அது மிகப்பெரிய சம்பவத்தினதும், அச்சம்பவத்தின் விளைவினதும் செயலில் முகிழ்த்த ஒரு நிலைமையின் மனநிலையையே குறிக்கின்றது. மகாபாரதத்தின் அத்தியாயங்களை நாம் வாசித்துக்கொண்டு போகும்பொழுது நாம் முன்னேறிச் செல்வதற்கான ஒரு மாபெரும் தூண்டுதலினால் உசுப்பிவிடப்படுகின்றோம்.

(தொடரும்...

# குருபூஜை தினங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஏப்ரல் | 04 | பங்குனி | 22 | திங்கள் | பரமகுருசுவாமி |
| ஏப்ரல் | 06 | பங்குனி | 24 | புதன் | குழந்தைவேற்சுவாமி |
| ஏப்ரல் | 08 | பங்குனி | 26 | வெள்ளி | செல்லப்பாசுவாமி |
| மே | 02 | சித்திரை | 19 | திங்கள் | திருநாவுக்கரசர் |
| மே | 06 | சித்திரை | 23 | வெள்ளி | சிறுத்தொண்டர் |
| மே | 08 | சித்திரை | 25 | ஞாயிறு | மங்கையற்கரசியார் |
| மே | 24 | வைகாசி | 11 | செவ்வாய் | திருஞானசம்பந்தர் |
| | | | | | திருநீலகண்ட யாழ்ப்பாணர் |

# முக்காலத்தையும் உணர்த்தியவர் நயினை முத்துக்குமார சுவாமிகள்

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –

அமுதூறும் மணிபல்லவத்தீவினில் இற்றைக்கு நூற்றிப்பத்தொன்பது (119) வருடங்களுக்கு முன்னர், ஆறுமுகம் பார்வதி தம்பதியினருக்கு ஆறாவது புத்திரனாகப் பிறந்தவரே நயினையம்பதியில் அவதரித்த பேரருளாளர் நயினை முத்துக்குமார சுவாமிகளாவார். 1897ஆம் ஆண்டு பிறந்த இவர், நயினை தில்லையம்பலம் வித்தியாசாலையில் கல்விபயின்று வாக்கு, மனம், நோக்கு, கணம், ஊக்கம், இனம் ஆகிய யாவும் எளிதில் விளங்குமாறு நல்லதோர் "குரு சாம்ராஜ்ஜிய சம்பிரதாயம்" சின்ன வயதிலேயே கிடைக்கப் பெற்றார். நாம் யார் யாரை வணங்குகின்றோமோ, அவரவர்கள் தக்கவேளையில் காப்பாற்றுவதுபோல, இவருக்குப் பிள்ளையாரும், நயினை அம்பாளும் வேளையறிந்து தோள் கொடுத்து, இவரது குடும்ப வறுமையைப் போக்கியருளியதனால், இவர் நடந்த ஒவ்வொரு அடியும், ஈரடியாக அருள்பாலித்தது. இதனால் இவர் எண்ணியது யாவும் பலித்தது.

## மாற்றம்

பக்தி மணம் கமழும் திருத்தலங்களைத் தேவார திருவாசகம் பாடிப்பாடிக் கசிந்துருகியதன் விளைவாக, நினைத்த மாத்திரத்திலே இந்தியா செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. அங்கு தவமுனிவர் ரமண மகரிஷி, ஞானகுருவாம் கணேசானந்த தீட்சானந்தஜி, மற்றும் சற்குரு நாத மகா யோகி ஆகிய மூவரிடமும் சீடனாக இருந்து ஞானவொளியோடு இலங்கை திரும்பினார். திரும்பிய முத்துக்குமார சுவாமிகள் இரட்சிக்கும் கணேச முதல்வன் வழிகாட்டியாக அமைய, கதிர்காமம் சென்று, பின்னர் மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், தீவகம், இணுவில், அளவெட்டி ஆகிய இடங்களுக்கும் சென்று புகழ்பெற்ற புராதன ஆலயங்களில் தவமிருந்து வரம் பெற்றார். திருவண்ணாமலையில் இருந்தபோது ஏற்பட்ட முனிவர்களின் சகவாசத்தினால் உலக வாழ்வின் நிலையாமையை உணர்ந்தவர் என்பதனால், இந்தியா மண்ணின் வரங்கள் இலங்கையிலும் தொனித்தது. கொழும்பிலிருந்த குடும்ப வர்த்தகத்தில் நாட்டமின்றி அதிலிருந்து விலகி, தவவேடம் பூண்டார். நீண்ட சடாமுடி, அடர்ந்த தாடி, மார்பில் துலங்கிய மாலை, மேனியெல்லாம் பூரித்த திருநீறு, நாலுமுழ வேட்டி, அரையில் சால்வை, புலித்தோலின் இருப்பிடம், வாயிலில் தமிழருவி, பார்வையில் பஞ்சாமிர்தம், இதயத்தில் நயினையம்பாளின் அனுக்கிரகம், கையினில் மருத்துவ வாலாயம் வேறு என்ன வேண்டும்? அவரை யோகியாக, ஞானியாக, சித்தராக, ரிஷியாக, முனிவராகக், கவிஞராக, அம்பாள் உபாசகராக, நயினை முத்துவாக, நயினைச் சுவாமிகளாக, ஒரு வைத்தியராக, வாழ்வின் வழிகாட்டியாக, வணங்கும் குருவாக, சமய குரவராக எப்படி வேணுமென்றாலும் வணங்கலாம். சாமியறையிலும் வழிபடலாம். எதிர்காலத்தைச் சொல்லி அவரே வழிநடத்துவார்.

*வருந்துவதைவிட உறுதிகொள்வது நல்லது.*

**சீடர்கள்**

ஆத்மஜோதி நாவலப்பிட்டி முத்தையா, நயினையூர் இராமச்சந்திரா, அதிபர் கந்தையா, அளவையூர் அருணர் கணபதிப்பிள்ளை, சின்னப்பர், நாகமுத்தர், இணுவில் வடிவேற் சுவாமிகள், சின்னத்தம்பிச் சட்டம்பியார், அமிர்தலிங்கம், விஸ்வலிங்கம், ஆறுமுகம், வைத்தியர் நடராஜா, வைத்தியர் அம்பலவாணர், வைத்தியர் காசிப்பிள்ளை, கண்பரியாரி (அளவெட்டி), காசிநாதர் நொத்தாரிசி, சரவண முத்துச் சட்டம்பியார், சிற்றம்பலப்புலவர், பிலவணைப் பொன்னம்பலம், பொன்னுத்துரை உபாத்தியாயர், இராசம்மா (முருகபவன்), பொன்னம்மா (பறுவதம்) யாவருமே நயினைச் சுவாமிகளின் மீளா அடியவர்களாவர். யாழ்ப்பாணத்தை இறைவன்தான் காப்பாற்ற வேண்டும் என அடிக்கடி சொல்லுவார்.

**கும்பழாவளை**

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோவிலுக்கு வருகைதந்து, தும்பிக்கையானை உளமுருகி வழிபட்டபோது சுவாமிகளின் வாயிலிருந்து உதிர்ந்த பாடல் இதுவாகும்.

"அழகேச னிந்திரன் திருமாரப னோடயன்
அவரவர்க ளரசிருப்புன்
அடிபேணு மடியவர்க் கடிபேணினார் பெறும்
ஆக்கத்தி னொன்றெண்ணவே,
உளமீதி னொருபொழுது மறவாமலே நினைந்
துருகி யுள்ளே நினைந்தால்,
ஓங்கார ரூபநீ யன்றிநல் லுறவுயிர்க்
குண்டோ உரைப்பதற்கு,
பழமோதகம் கடலை அவல் எள் சருக்கரை
பருப்புக் கருப்பு மிளநீர்
பலகாரமும் பிரிய போதகக் கன்றே
பயம் தவிர்த்தாள வருவாய்
வளமேவு கும்பழா வளையிலுறை வாசனே
வல்லவாம்பிகை நேசனே
வானாதி பூத சராசரம் தழைக்குமுயர்
மாரியே அருள்வாரியே"

**அற்புதம்**

இணுவில், அளவெட்டி, தீவகம், மன்னார் ஆகிய இடங்களில் தீராத நோயால் அவதிப்பட்ட குழந்தைகள், இளையவர்கள், முதியவர்கள் எனப் பலதரப்பட்டவர்களையும், திருநீறு இட்டு, பார்வை பார்த்துக் குணமாக்கினார்.

திருமணமாகாத, செவ்வாய் தோஷமுள்ள ஆண், பெண் இருபாலார்க்கும் திருமண வாழ்வதனை அரங்கேற்றி வைத்தார்.

ஊனமுற்ற அவயவங்களையுடைய அடியார்களுக்கு அவற்றை வழங்குமாறு செய்து மறுவாழ்வளித்தார்.

*தானம் என்பது பிரதிபலன் கருதாத கொடை.*

கல்வி, செல்வம், வீடு, காணி இல்லாதவர்களுக்கு அவை கிடைக்கும்படியாக வரமீந்து வாழ்வில் ஒளிபெறச் செய்தார்.

வறுமை நிலையுள்ளவர்களின் வேதனைகளையும், தேவைகளையும் தக்கபடி உணர்ந்து ஆவனபுரிந்து மீட்சிபெறச் செய்தார்.

தமிழை அமுதாகக் குழைத்து பக்தியோடு மணங்கமழ கேட்டவர்க்குத் தேனூறப் பருகிட வைத்தார். மேலும் ஆன்மீகப் பாதையைச் செப்பனிட்ட நயினைச் சுவாமிகள் 1930ஆம் ஆண்டளவில் காவியுடை தரித்தவர், 1938ஆம் ஆண்டு ஆனிப் பொங்கலன்று அளவெட்டி அலுக்கை ஞான வைரவப் பெருமானிடத்தின்கண் ஊறிய பக்திப் பெருக்கினால் யமனையும் வெல்லும்படியாக ஒரு பாடலினைப் பாடிக் கொண்டார். அருணர் கணபதிப்பிள்ளை அவர்கள் எழுதி அடியார்க்களித்தார். அருமையான பாடலிதுவாகும்.

“சங்கரன் தருகுமர எண்திசையின் அதிபரும்
சரண் செய்யும் சண்ட கால,
சங்கார கோர மாருத்திர வடுகேச
‘நின்தமரை இடர்யமனும் அணுகான்’
ஐங்கரர்க் கொருதம்பி செஞ்சடா முடிமகுட
அங்கணா பரிதி வதன
ஆலால கண்ட திண்புயவதன அபயகர
அழல் மயானந்த வடிவே,
பொங்கரவினைப் பிடித்தாட்டி யணியாக்கிவன்
புலியுரித் தாடையாக் கொள்
புண்ணியா நின்னடி யிருக்குமெய் யன்பர்தம்
புகழினை உரைக்க எளிதோ
எங்குமுயர் அரன் அன்பர் தங்குமருள் அளவெட்டி
ஓங்கு ஆலமர நீழல் வாழ்
ஒரு சூலகரவாத சிவஞான ஆனந்த
உருத்திர வைரவ தேவனே”

இங்கே தரப்பட்ட இரண்டு பாடல்களும் சம்பந்தப்பட்ட இரு கோவில்களிலும் நடைபெறும் மஹோற்சவ அலங்கார உற்சவங்களின்போது பாடப்படுகின்றன. கண்ட நடையில் மேற்படி பாடல்களைப் பாடும்போது, லயவாத்தியங்களும், நரம்பு வாத்தியங்களும் கேட்போரை மெய்சிலிர்க்க வைக்கும்.

**நயம்**

எல்லாம் வல்ல நயினை அம்பாள் இவர் கருவிலிருக்கும்போதே “தமிழமுதினை” தாயிடம் அருளியதன் பிரகாரம், முத்துக்குமார சுவாமிகளின் திருவாயிலிருந்து தமிழ் எதுகையாய், மோனையாய், வெண்பா, கலித்துறை, விருத்தம், அகவல், அந்தாதி, அறுசீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம், எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம், எண்சீர்க்கழிநெடிலாசிரிய

*துன்ப காலத்தில் மகிழ்ச்சியாய் இருப்பவனே வீரன்.*

விருத்தம், பன்னிரு சீர், பதினாறு சீர் ஆசிரிய விருத்தமென சந்த சாகித்திய, மந்த மாருத மாய் பிரவாகித்தது. ஒவ்வொரு பாடலிலும் ஒவ்வொரு 'சுகம்' இருக்கும் அப்பாடல்களைப் பாடி முடிக்கும்போது நோய் தீர்க்கும் மருந்தும் இருக்கும். பிறவிப் பிணிக்கு இடர்யமனும் அணுகாத வரம் சுவாமிகளால் கோடிடப்படுகிறது. இவரது காலத்தில் பஞ்சமா பாதகச் செயலைச் செய்வோருக்குக் கடும் சீற்றமின்றி பார்வையொன்றினாலே, அவரவர் தவறுக்கு விமோசனம் கிடைத்தது. கொலை, களவு, மது, மாது, போதை என்பவற்றிற்கு அடிமையாகா வண்ணம், நாட்டைப் பாதுகாத்தார் சுவாமிகள். இவருக்கு வாகனமோ வசதிகளோ, மேடைகளோ, பதவிகளோ, பட்டங்களோ, எதிர்பார்ப்புக்களோ, அரசியல் ஈடுபாடோ, அரசியல் பதவிகளோ எதற்குமே தலை நீட்டாதவர். எல்லாவற்றிற்கும் மேலாக ஆன்மீகம் சார்ந்த எவ்வித பலா பலன்களுக்கும் இடங்கொடாதவர். யோகசுவாமிகள், செல்லப்பா சுவாமிகள், கடையிற் சுவாமிகள், பெரிய சந்நியாசியப்பா, வடிவேற் சுவாமிகள், வைத்தீஸ்வரக் குருக்கள் போன்றோர் தத்தம் பெயர்களை அடக்கமாக வைத்திருந்தவர்கள். சமயம் என்பது அடக்கம். விளம்பரமல்ல. முத்துக்குமார சுவாமிகளின் சமயப் பிரவாகம் தற்காலச் சந்ததிக்கு வாலாயமானது. சைவசமயப் பாடத்திட்டங்களில் பிஞ்சு வயதிலேயே இத்தகு அருளாளர்களை உணர வைப்பது மேலான தாகும்.

## சமாதி

சுவாமிகள் 1949 - தை - 26ஆம் திகதி இரவு, சிவலிங்கப்புளியடியில் இறைவனடி எய்திட, அவர் விருப்பப்படி, நயினாதீவு காட்டுக் கந்த சுவாமி கோயிலின் பின்புறமாகச் சமாதி வைக்கப்பட்டது. வேலுப்பிள்ளை பரம்பரையினர் இதனைப் பராமரித்து வருகின்றனர் "நயினை - இணுவில் - அளவெட்டி - தீவகம்" நான்கின் சைவ மகிமைக்கு இவரும் ஒரு பிரதான காரணகர்த்தாவாகத் திகழுகின்றார். சுவாமிகளின் சமாதிக்கு முன்பாக, அருள் ஒளி நிலையம் 1957இல் திறந்து வைக்கப்பட்டு, சமாதியடைந்த தினத்தில் (தைமாத அபரபக்க பூராட நட்சத்திரம்) விசேட அபிஷேக ஆராதனை அன்னதானம் சொற்பொழிவு நடைபெறுகிறது. நாமும் ஒருமுறை தரிசிக்கலாமா?

இத்தகு சித்தர்களை ஆவணப்படுத்துவதில் "சந்நிதியான் ஆச்சிரமம்" முன்னிற்கிறது. நாம் எம்மைப் பிரபல்யப்படுத்துவதிலும், கதிரைகளைக் கைப்பற்றுவதிலும் குறியாக இருப்பதிலிருந்து எப்போது எம்மை விடுவிக்கிறோமோ அப்போதுதான் நாட்டுக்கு விமோசனம். சமயம் மிகமிக எளிமையாக்கப்பட வேண்டியதொன்று. இல்லாவிட்டால், நாகரீகம் என்ற தோறணையில் சம்பளத்திற்குச் சமயம் என்றாகிவிடும்.

எளிமையாக நம் வாழ்வும், வடிவும், வீடும், வசதியும், விட்டுக்கொடுப்பும், விவாகமும், விரயமும், விலாசமும், வேண்டுதலும், வரமும், வளமும் அமைந்துவிட்டால் விதிகூட விலகிப் போகும். இதைத்தானே அருளாளர்கள் அடிக்கடி சொல்லியவண்ணம் காட்சி தருகிறார்கள். உச்சத்தில் இருந்து கொஞ்சம் இறங்கி வந்து வாழ்வோமாக.

*நம்பிக்கையே ஏழையின் உணவு.*

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் தொடர்ச்சி...

### 2015 உற்சவ காலம் தொடக்கம்...

| | | |
|---|---|---|
| செங்கோடன் ஜெசிந்தா | மீசாலை | 15000. 00 |
| செல்வி பா. வேலுப்பிள்ளை | கொழும்பு | 5000. 00 |
| சி. சுப்பிரமணியம் | அல்வாய் | 1000. 00 |
| க. சகுந்தலாதேவி | பருத்தித்துறை | 1000. 00 |
| வ. பாலசிங்கம் G.S. | கரணவாய் மத்தி | 20k அரிசி |
| சி. ஸ்ரீஸ்கந்தராசா | கொக்குவில் | 10000. 00 |
| பா. இராசகுமாரி | நிலாவரை | 2000. 00 |
| கவிதா ஜெயசாகரன் குடும்பம் | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| கி. ஸ்ரீநிவாசன் குடும்பம் | வெள்ளவத்தை | 5000. 00 |
| க. ஆதித்யன் | உடுப்பிட்டி | 4000. 00 |
| ம. ஆனந்தராசா | லண்டன் | 10000. 00 |
| த. பத்மநாதன் | பருத்தித்துறை அரிசி, மரக்கறி, | 1000. 00 |
| து. டினுஷா | அச்சுவேலி | 6000. 00 |
| சி. தனராஜா | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| திரு தம்பிராசா குடும்பம்<br>த. மகாலிங்கம் குடும்பம்<br>க. தெய்வேந்திரம் குடும்பம்<br>க. இராசாத்தி குடும்பம் | கொக்குவில் | 10500. 00 |
| லக்ஷிகா தர்ஜன் | உடுவில் | 5000. 00 |
| S. பத்மநாதன் குடும்பம் | கொக்குவில் | 200. 00 |
| க. சண்முகரட்ணம் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| M. வசந்தகுமார் | பிரான்ஸ் | 5000. 00 |
| Dr கிருஷ்ணபிரதீப் | கம்பளை | 2000. 00 |
| மதனசுந்தரம் ஸ்ரீதரன் | U.K (வல்வெட்டித்துறை) | 25000. 00 |
| கு. பானுஜன் கச்சேரி | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| S. ராஜித் | உடுப்பிட்டி | 10000. 00 |
| வே. சரவணபவானந்தமூர்த்தி குடும்பம் | கோண்டாவில் | 6200. 00 |
| இ. திருஞானசம்பந்தர், சுதாஜினி சுந்தரமூர்த்தி | மலேசியா | 50000. 00 |
| ஜெ. கேதீசன் | வரணி அரிசி, | 1000. 00 |
| திரு பாலசுப்பிரமணியம் குடும்பம் | லண்டன் | 5000. 00 |
| வீ. பத்மசீலன் | கனடா | 10000. 00 |

*தன்னடக்கம் இல்லாதவன் பிறரை அடக்க முடியாது.*

| | | |
|---|---|---|
| திரு சிவசுப்பிரமணியம் குடும்பம் | பத்தமேனி | 5000. 00 |
| த. சுதாகர் | கோண்டாவில் | 5000. 00 |
| திருமதி மனோகரன் | கனடா | 2000. 00 |
| ச. சேயோன் | அளவெட்டி | 2000. 00 |
| சி. ரஞ்சிதமலர் | அளவெட்டி | 1000. 00 |
| லோ. சதீஸ்வரன் | கொழும்பு | 2000. 00 |
| கு. சாந்தகுமார் குடும்பம் | கொழும்பு | 2000. 00 |
| பாலா ரதிகரன் | லண்டன் | 10000. 00 |
| பார்வதிப்பிள்ளை தங்கராஜா | நீர்வேலி | 10000. 00 |
| க. குமாரசாமி | கரவெட்டி மத்தி | 1000. 00 |
| இ. காண்டீபன் | சுண்ணாகம் | 3600. 00 |
| N. கதிர்காமநாதன் | கொழும்பு | 10000. 00 |
| S. சோமகுலசேகரம் | வல்வெட்டித்துறை | 5000. 00 |
| ம. சாருஜன் | கரவெட்டி | 2000. 00 |
| S. தங்கராஜா குடும்பம் | மயிலிட்டி | 30000. 00 |
| நா. துரைசிங்கம் குடும்பம் | அச்சுவேலி | 2000. 00 |
| வல்லிபுரம் ராசம்மா நினைவாக | சுண்ணாகம் | 3000. 00 |
| சொ. செல்லத்துரை | பருத்தித்துறை | 1மூடை அரிசி |
| Dr ஏகாம்பரம் ராஜநாதன் | U.K. (அச்சுவேலி) | 10000. 00 |
| C.H. மயூரன் | ஆனைக்கோட்டை | 2000. 00 |
| K. ரகு நல்லூர் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| செ. சிவபாதசுந்தரம் | யாழ்ப்பாணம் | 3மூடை அரிசி |
| பு. கௌரி | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| நிரோஷன் திஜஷின் க. அரியரத்தினம்மூலம் | வல்வெட்டி | 1மூடை அரிசி |
| சிவா ஸ்ரீபாலமோகன் | கனடா | அரிசி, மரக்கறி |
| சபாபதி தங்கப்பொன்னு | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| ந. வாசவன் | அச்சுவேலி (U.K) | 5000. 00 |
| திருமதி அ. குணநாயகம் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| வ. சண்முகநாதமுதலி மூலம் பரணிதரன் காயித்திரி | லண்டன் | 2000. 00 |
| பாபு வெதுப்பகம் | புன்னாலைக்கட்டுவன் | 4மூடை அரிசி |
| பா. கிருஷ்ணகுமார் | உடுப்பிட்டி | 25000. 00 |
| சுந்தாவின் விழுதுகள் மலர் வெளியீட்டின் நிதி | | 17000. 00 |
| திரு தர்ஷன் | அவுஸ்திரேலியா | 5மூடை அரிசி |
| திரு ஜெபநேசன் குடும்பம் | நியூஷ்லண்ட் | 5000. 00 |
| திரு ரதன் | தம்பாலை | 2000. 00 |
| சி. கானவி | கொழும்பு | 10000. 00 |
| J. சந்திரப்பிரகாஷ் குடும்பம் | பருத்தித்துறை | 6000. 00 |

(தொடரும்...

அடங்கத் தெரியாதவனுக்கு ஆளத் தெரியாது.

# எறிபத்த நாயனார்

– திரு அ. சுப்பிரமணியம் அவர்கள் –

சுந்தரமூர்த்திகள் பாடியுள்ள திருத்தொண்டத் தொகையில் "இலை மலிந்த வேல் நம்பி எறிபத்தர்க் கடியேன்" என்கிறார். இச்சருக்கத்தில் ஆறு நாயன்மார்களின் வரலாறு கூறப்படுகிறது. அவற்றுள் முதலாவது எறிபத்த நாயனாராகும். இங்கு அவருக்கு "வேல் நம்பி" என்றடைமொழி வைக்கிறார். ஆடவரில் சிறந்தவரை "நம்பி" என்பது மரபு. நம்பி என்பதற்கு உதவுபவர் என்ற பொருளும் உண்டு. ஆகவே சிறந்தவராகவும் சைவத்துக்கும் சிவனடியார்களுக்கும் உதவுபவராகவும் திகழ்ந்தவர் எறிபத்தராவர். வேல் என்பது அவரிடமுள்ள "பரசு" எனப் பெயரிய மழுப்படையையும் மாயா ஜாலமிக்க சூரபன்மனது மார்பும் தோளும் துளைத்த முருகப் பெருமானது திருக்கைவேலுமாகலாம்.

எறிபத்தர் கருவூரில் பிறந்தவர். இது கருவூர்ச் சித்தரது அவதார தலமுமாகும். சைவத்துக்கும் சிவனடியார்கட்கும் ஏற்படுமிடையூறுகளை பரசெனும் மழுப்படையெறிந்து போக்கும் வகையால் இறைபக்தி கொண்டவராதலின் எறிபத்தர் என்றழைக்கப்படுபவர். இவரது கதை பாடவந்த சேக்கிழார் பெருமான் அவர்தம் பெருமை சொல்லில் அடங்காது என்றாலும் ஆசையினால் சொல்லத் தொடங்குகிறேன் என்கிறார்.

"மல்லல்நீர் ஞாலம் தன்னுள் மழவிடை யுடையான் அன்பர்க்கு
ஒல்லைவந் துற்ற செய்கை உற்றிடத் துதவும் நீரார்
எல்லையில் புகழின் மிக்க எறிபத்தர் பெருமை எம்மால்
சொல்லலாம் படித்தன் றேனும் ஆசையால் சொல்ல லுற்றாம்"

(திருத்தொண்டர் புராணம்- 551)

கருவூரிலே புகழ்ச்சோழ மகாராசாவின் மாட்சிமைமிக்க ஆட்சியில் சிறந்து விளங்கிய "திருவானிலை" எனும் கோவில் உள்ளது. அவ்வாலயத்தில் சிவகாமியாண்டாரெனும் சிவனடியார் பூத்தொண்டு புரிந்து வந்தார்.

இச்சிவனடியார் பனி குளிர் பாராது நாளும் வைகறையில் நித்திரை விட்டெழுந்து நீராடிச் சிவநாமம் சொல்லியபடி நந்தவனம் புகுந்து இறைவனுக்குச் சார்த்தும் மலர்கள் தன் வாயால் மாசடையக் கூடாதெனும் கருத்தில் தனது வாயை சீலையால் கட்டி நறுமலர்கள் பறித்துக் கூடையை நிரப்பிச் சந்நிதானம் சேர்ந்து மாலையாக்கி இறைவனுக்குச் சூட்டி வழிபடும் வழக்கம் உடையவராயிருந்தார்.

அன்றொருநாள் வழமைபோன்று கூடை நிறைய பூப்பறித்து சிவநாமம் சொல்லியபடி அடியவர் ஆலயம் நோக்கி வீதியில் வந்து கொண்டிருந்தார். அத்தருணம் சோழ மன்னனின் பட்டத்து யானை நீராடி விட்டுவரும்போது மதம் கொண்டு பாகரின் கட்டளைக்கும் அடங்காது மீறி ஓடி வந்தது. மக்கள் அலறி ஓடினர். சிவ சிந்தனையில் மூழ்கி இறைநாமம் உச்சரித்து வந்த சிவனடியாருக்கு யானையின் பிளிறலோ மக்களின் அலறலோ கேட்கவில்லை. மதம் பிடித்து ஓடிவந்த யானை கணப்பொழுதில் சிவகாமி ஆண்டாரின் மலர்க்கூடையைத் தட்டியதுடன்

அமைதியாக இருங்கள், நீங்கள் யாரையும் வசப்படுத்தி விடலாம்.

மட்டும் அல்லாது காலால் மிதித்துச் சேதமாக்கிவிட்டும் ஓடியது. பாகரோ செய்வது அறியாது திகைத்து நின்றனர்.

சிவகாமி ஆண்டார் கோபங்கொண்டு யானையை அடிக்க ஓடியபோது தடுக்கி விழுந்து நிலத்தில் கையறைந்து கதறினார். அடியவரின் கதறல் கேட்டு ஓடிவந்த எறிபத்தர் விபரம் கேட்டு வெகுண்டு மழுவுடன் யானையைத் தேடி ஓடினார்.

மதவெறி பிடித்தோடிய யானையை மறித்து மழுவினால் துதிக்கையை வெட்டி வீழ்த்த அலறிக்கொண்டு இறந்தது. அது கண்டு போரிட வந்த யானைப் பாகர் இருவரையும் கொன்று நின்றார். இதுகேட்ட சோழன் கோபங்கொண்டு பெரும் படையோடு போரிட வந்தான். வந்தவன் மக்களிடம் கொலைகாரன் யார்? எனக் கேட்டறிந்தான். யானையும் பாகரும் இறந்து கிடக்க அடியவர் சினத்துடன் மழு ஏந்திய கையராய்த் தனித்து நிற்கக் கண்ட மன்னன் தக்க நியாயமின்றி நடந்திருக்காதென உணர்ந்து அவரிடமே யாவும் அறிந்து யானையால் சிவகாமி ஆண்டாருக்குத் தீங்கு நேராது போனமை யான் செய்த புண்ணியம். அவ்வாறு ஏதும் நடந்திருந்தால் நான் பெரும் பாவி ஆகியிருப்பேன் என்று கதறினான்.

பின்பு ஒருவாறு தேறியவன் எறிபத்தரை நோக்கி அடியவரே! யானையையும் பாகரையும் கொன்றது மட்டும் போதாது. அவற்றை ஆளும் நானும் பாவியே ஆகையால் என்னையும் தண்டியுங்கள் என்றவன் மழுவினால் கொன்ற பாவம் தங்களை அடைய வேண்டாம் அன்பரே! எனது வாளினாலே என்னைத் தண்டியுங்கள் என்று தனது வாளை எறிபத்தரிடம் நீட்டினான். சிவன்மீதும் சைவத்தின்மேலும் சிவனடியாரிடத்தும் சோழன் வைத்துள்ள அன்பினை உணர்ந்த எறிபத்தர் தான் வாளை வாங்காவிடில் அரசன் தன்னைத்தான் வெட்டிக்கொள்ளக் கூடும் என்றஞ்சி அவ்வாளை வாங்க மன்னன் தன்னைக் கொல்லுமாறு தலைசாய்த்து நின்றான். தூய அருங்குணங்கள் நிறைந்த புகழ்ச்சோழ மன்னன் ஆட்சியில் சிவனடியார்கட்கு எந்த வகையாலும் துன்பம் உண்டாகாதென உணர்ந்து இந்த மன்னனைக் கொல்லுதல் தகாதென முடிவு செய்து தன்னைத் தானே அழிக்கவெண்ணி அரசன் தந்த வாளினால் தன் கழுத்தை அறுக்கலானார். இச்செயல் கண்டு பதறிய மன்னன் தடுக்க வானில் அசரீரி உயரிய குணங்களையுடையவர்களே! உங்களது திருத்தொண்டின் மகிமை உலகோர் அறிந்துகொள்ளச் செய்யவே ஒரு நாடகம் நடத்தப்பட்டது என்றதும் அவனருளால் யானையொடு பாகர்களும் உயிர்பெற்றதோடு சிவகாமியாண்டாரது கூடையும் புதிய மலர்களால் நிரம்பியது. நடந்தவற்றைக் கண்டு திகைத்த புகழ்ச்சோழ மன்னன் எல்லாம் சிவன் அருட்செயல் என்றுணர்ந்து எறிபத்த நாயனாரது பாதங்களில் வீழ்ந்து வணங்கினான். இத்தகைய சிறப்புடைய தொண்டராய எறிபத்தர் அரசனை நோக்கிக் கூறியதாக சேக்கிழார் கூறுகிறார்.

"ஆனசீர்த் தொண்டர் கும்பிட்டு அடியனேன் களிப்ப இந்த
மானவெங் களிற்றில் ஏறி மகிழ்ந்தெழுந் தருளும் என்ன
மேன்மையைப் பணிமேற் கொண்டு வணங்கி வெண்குடையின் நிழல்
யானை மேற்கொண்டு சென்றார் இவுளிமேற் கொண்டு வந்தார்"

(திருத்தொண்டர் புராணம்- 602)

இந்த நிலையில் புகழ்ச்சோழ அரசன் "புகழ்ச்சோழ நாயனார்" என்னும் சீர்வரிசை பெற்று உலகத்தவர் வாழ்த்த விண்ணோர் மலர் மழை பொழியத் தில்லைக் கூத்தனின் பாதக் கமலங்களைத் தொழுது தலையிற் சூடியவராய் ஆலயத்துள் புகுந்து பெருமானுடன்

*கல்வி அறிவினால் மட்டும் கடவுளை அடைய முடியாது.*

இரண்டறக் கலந்து கொண்டார். எறிபத்த நாயனாரும் மண்ணுலகில் சைவத்துக்கும் சிவனடியார்களுக்கும் தீங்கு விளைவிப்போர்களை உடன் சென்று தண்டிக்கும் தன்மையால் இறையருள் கூடிக் கைலையங்கிரியில் சிவகணங்களின் தலைமைக் கணநாதராகும் தன்மைபெற்றுக் கணங்களின் முதல்வர்க்கு முதல்வர் ஆகும் பெரும்பேறு பெற்றுக்கொண்டார். பூத்தொண்டு புரிந்துவந்த சிவபக்தராய சிவகாமி ஆண்டாரும் புதுமலர்க் கூடையுடன் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டார்.

இவ்வித செயற்கரும் செயல்களை உய்த்துணர்ந்த சேக்கிழார் பெருமான் தாம் பாடிய திருத்தொண்டர் புராணம் எனப்படும் பெரிய புராணத்தில்,

"ஆளுடைத் தொண்டர் செய்த ஆண்மையும் தம்மைக்கொல்ல
வாளினைக் கொடுத்து நின்ற வளவனார் பெருமைதானும்
நாளுமற் றவர்க்கு நல்கும் நம்பர்தாம் அளக்கிலன்றி
நீளும்இத் தொண்டின் நீர்மை நினைக்கில் ஆர் அளக்கவல்லார்"

என்கின்றார்கள். (திருத்தொண்டர் புராணம்- 606)

எறிபத்த நாயனாரது குருபூசைத் தினம் மாசிமாத அத்த நட்சத்திரமாகும். இது எமது சந்நிதியான் ஆச்சிரமத்திலும் கொண்டாடப்படுகிறது.

ஓம் சிவாயநமக;

"இலை மலிந்த வேல்நம்பி எறிபத்தர்க் கடியேன்"

## புறாவும் பூவும்

ஒரு பக்தன் அழகான மண்டபம் ஒன்றைக் கட்டினான். அது எண்கோண வடிவில் இருந்தது. அதன் எட்டுப் பக்கச் சுவர்களிலும் நிலைக் கண்ணாடியைப் பதித்திருந்தான். எந்த உருவமும் எந்தத் திசையில் பார்த்தாலும் தெரியும்படி அமைக்கப்பட்டிருந்தது.

மண்டபத்தின் நடுவே அழகான ஒரு மலரைக் கொண்டுவந்து வைத்தான் பக்தன். அழகான மலர், எட்டுப் பக்கங்களிலும் எட்டு மலர்களாகத் தோற்றம் அளித்தது. அவன் கதவை மூடுமுன் அந்த மண்டபத்துக்குள் சிறு வெண்புறா ஒன்று நுழைந்து விட்டது. அது கண்ணாடியில் தனது பிம்பத்தைப் பார்த்தது.

கண்ணாடியில் தெரியும் விம்பத்தையே உண்மை என்று எண்ணி அதைக் நோக்கிப் பாய்ந்து பறந்தது. எட்டுத் திசைகளிலும் அது மாறி மாறிப் பறந்தது. கண்ணாடியில் மோதிற்று. ஆனால், அந்தப் பறவையால் வெளியேற முடியவில்லை.

கடைசியில் புறா சோர்ந்து போய்த் தரையில் விழுந்தது. அதன் அருகே இருந்த அழகான மலரை அது அப்போதுதான் பார்த்தது. அந்த இடத்தில் அதுவே உண்மை என்பதை உணர்ந்து கொண்டது.

வாழ்க்கையில் அந்தப் புறாவைப் போலவே, நாம் மாய நிழல்களைத் தேடி அலைகிறோம். நமக்குள்ளேயே இருக்கும் இறைவனை நாம் உணருவதில்லை. வாழ்க்கையில் தோல்விகளை அடைந்து, மனம் சலித்துப்போய் விழும் வேளையில் நிதர்சனமான உண்மை எது என்பதை உணருகிறோம்.

*மன்னிக்கப்பட வேண்டியவற்றைத் துன்புறுத்தக்கூடாது.*

(தொடர்ச்சி....

# விதுர நீதி

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

## உண்மையை உள்ளபடி சொல்

திருதராஷ்டிரன், "விதுரா! அறிவு தளராதவனே! தூக்கம் இல்லாமல் கவலையினால் எரிக்கப்படும் எனக்கு எதை நீ ஆராய்ந்து அறிகின்றாயோ அதைச் சொல். நம் குடும்பத்திலேயே, தர்மங்களில் சாமர்த்தியசாலியாகவும், தூய்மை உள்ளவனாகவும் நீ இருக்கின்றாய். பாண்டவர்களுக்கும், கௌரவர்களுக்கும் நன்மை தருவதாக எதை நீ நினைக்கிறாயோ அதைச் சொல். பாவத்தையே நினைத்துக் கொண்டிருப்பதால், எங்கும் பாவத்தையே பார்க்கிறேன். அதனால் மனம் கலங்கிய நான் உன்னைக் கேட்கிறேன். தருமனின் விருப்பம் என்ன? என்பதைத் தெளிவாகச் சொல்" என்று கேட்டான்.

விதுரர், "மன்னா! நல்லதோ கெட்டதோ, வெறுப்புக்கு உரியதோ விருப்பத்துக்கு உரியதோ, கேட்கப்படாதபோது ஒருவனுக்கும் சொல்லக்கூடாது. அப்படிச் சொன்னால் அவமானம் வரும். நீங்கள் என்னிடம் கேட்பதனால் சொல்கிறேன். மங்கலத்தைத் தருவதும் தர்மத்தோடு கூடியதுமான வார்த்தையைக் கேளுங்கள்.

சாபத்துடன் கூடியவை, தீய வழிகளால் செய்யப்பட்டவை முதலானவைகளால் கைகூடும் காரியங்களில் மனதைச் செலுத்தக் கூடாது. அதேபோல, மேதாவி ஆனவன்; யுக்தியினால் செய்யப்பட்டவை, உபாயங்களுடன் கூடியவை, பலனைத் தராதவையுமான காரியங்களில் மனதை ஈடுபடுத்தக்கூடாது. நன்றாக நிச்சயம் செய்துகொண்டு செய்யவேண்டும். படபடப்பாய் செய்யக்கூடாது.

செயல்களின் பலனையும், விபரீதத்தின் பலனையும் தன்னுடைய வளர்ச்சியையும் நன்றாக அறிந்து செய்பவனே தீரன். தன் கையில் அரசு (செல்வம்) இருக்கிறது என்பதற்காக அநியாயமான காரியங்களை ஒருபோதும் செய்யக்கூடாது. அழகான வடிவத்தை அழிப்பதைப் போலக் கீழ்த்தனமானதும் அடக்கம் இல்லாமை என்பதும் செல்வத்தை அழித்துவிடும்.

ஆகாரத்தில் விருப்பம் உள்ள மீன், தூண்டில் முள்ளில் உள்ள உணவை நாடிச் செல்கிறது. அதன்பிறகு நேரிடும் விபரீதத்தை அது தெரிந்துகொள்வதில்லை. அதுபோல நன்மையை விரும்புபவன் சாப்பிட முடிவது சாப்பிடத் தகுந்தது, சமிபாடடையக் கூடியது, சமிபாடடைந்தபின் உடலுக்கு நன்மை தருவதுமான உணவைத்தான் சாப்பிடவேண்டும்.

எந்தக் காரியத்திலும் அவசரப்படக்கூடாது. ஒரு மரத்திலிருந்து பழுக்காத காய்களைப் பறித்தால் பழத்திலிருந்து பெறப்படும் பயன் கிடைக்காது. விதைகளும் அழிந்துபோய் விடுகின்றன. ஆனால், அதே காய்கள் பழமாகிப் பக்குவமாக இருக்கும்போது பறித்தால் பழச்சாறும் கிடைக்கும், பழத்தின் விதைகளினால் பலனும் அதிகமாகக் கிடைக்கும்.

பூவை அழிக்காமல் வண்டுகள் தேனை எடுப்பதுபோல, அடுத்தவர்களை அழிக்காமல், அவர்களிடமிருந்து நாம் பெறவேண்டிய செல்வத்தைப் பெறவேண்டும். பூந்தோட்டத்தில்

*வாழ்க்கை மலர் போன்றது. அதில் அன்பு தேன் போன்றது.*

பூக்கள் பூக்கப் பூக்க அவைகளை மாலை கட்டுபவன் பறிப்பதுபோல செல்வம் செழிக்கச் செழிக்க அதை எடுக்க வேண்டும். கரிக்காக மரத்தைக் கொளுத்திக் கரியைச் சேர்ப்பவன்போல, ஒரேயடியாக மூலத்தை அழித்துவிடக் கூடாது.

இதைச் செய்தால் எமக்கு என்ன உண்டாகும்? செய்யாவிட்டால் என்ன நடக்கும்? என்று நன்றாக ஆராய்ந்த பின்பே காரியங்களைச் செய்ய வேண்டும். அப்படி இல்லாவிட்டால் செய்யக்கூடாது. ஏனென்றால் பல காரியங்களில் மனித முயற்சி உபயோகமில்லாமல் போய் விடுகிறது.

பலன் இல்லாததில் பற்றுதல் கொண்டவனையும், பலன் உள்ளதில் பாராமுகமாக இருப்பவனையும், பேடியைப் பெண்கள் விரும்பாததுபோல, மக்கள் இத்தகையவனைத் தங்கள் பாதுகாவலனாக்க விரும்பமாட்டார்கள். எந்த மனிதனின், மகிழ்ச்சியும் கோபமும் பலன் இல்லாமல் இருக்கின்றதோ, அந்த மனிதனையும் மக்கள் பாதுகாவலனாக ஏற்பதில்லை. சிறிய முயற்சியில் பெரிய அளவில் பலனும், கொண்ட காரியங்களை அறிவுள்ள மனிதன் விரைந்து ஆரம்பிக்கிறான். தாமதமாகச் செய்வதில்லை.

### அரசன் (ஆட்சியாளர்) அறிந்துகொள்ள வேண்டியவை

பார்வையாலும், மனத்தாலும், சொல்லாலும், செய்கையாலும் எவன் உலகத்தை நான்குவிதமாக மகிழச் செய்கிறானோ அவனிடம் உலகம் மகிழ்கிறது.

மான் பிடிக்கும் வேடனிடம் மான்கள் பயப்படுவதுபோல, எவனைக் கண்டு எல்லாம் பயப்படுகின்றனவோ அவன் கடல் சூழ்ந்த உலகத்தையே அடைந்தாலும் குறைவைத்தான் அடைவான். அதாவது மக்களால் வெறுத்து ஒதுக்கப்படுவான்.

தர்மமான முறையில் செல்வத்தை அடைந்தால் அது கைவிட்டுப் போகாது. குறைவையும் அடைய மாட்டான்.

உளறும் பைத்தியக்காரனிடமிருந்தும், பிதற்றும் குழந்தையிடம் இருந்தும் எல்லாவற்றிலிருந்தும் பாறைகளில் இருந்து தங்கத்தை எடுப்பதுபோலச் சாரமானதை எடுத்துக்கொள்ள வேண்டும். உஞ்சவிருத்தி செய்பவன் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்ப்பதுபோல, தீரனானவன் மகான்களுடைய நல்ல வார்த்தைகளையும் நல்ல செயல்களையும் அங்கங்கு இருந்து சேர்ப்பவனாக இருக்க வேண்டும். (அறுவடையான வயலில் உதிர்ந்து கிடக்கும் நெல்லைப் பொறுக்கி வாழ்வை நடத்துவது உஞ்ச விருத்தி ஆகும்.)

பால் கறக்க மறுக்கும் பசு, அதிகமான துன்பத்தை அடைகிறது. சுலபமாகக் கறக்கும் பசுவோ, துன்பப்படுவது இல்லை. நெருப்பில் இட்டுக் காய்ச்சப்படாமலே வளைவது எதுவோ, அது நெருப்பில் இட்டுக் காய்ச்சப்படுவதில்லை. தானாகவே வளைந்து இருக்கும் மரத்தை விவரம் தெரிந்தவன் வளைக்க மாட்டான். அதுபோல பலவானுக்குக் கீழ்ப்படிந்தால் துன்பமில்லை. பலவானிடம் இந்திர அம்சம் இருப்பதால் அவனை வணங்குவதில் குற்றமில்லை.

பசுக்களுக்குப் பாதுகாவலனும் தலைவனும் ஆகும்.

மந்திரிகளே அரசர்களுக்கு உறவினர்களாவார்கள்.

கணவனே, பெண்களுக்கு எல்லா வகையிலும் உறவும் பாதுகாப்பும் ஆகும்.

வேதமே, அந்தணர்களுக்கு எல்லாவிதமான உறவும் ஆகும்.

*கொடுக்கும்போது கனிவு இருத்தல் வேண்டும்.*

தர்மமானது, சத்தியத்தால் காப்பாற்றப்படுகிறது.

கல்வியானது, அடிக்கடி படிப்பதால் காப்பாற்றப்படுகிறது.

உருவமானது, சுத்தம் செய்வதால் காப்பாற்றப்படுகிறது.

குலமானது, நல்ல நடத்தையால் காப்பாற்றப்படுகிறது.

குதிரைகளை தேகப் பயிற்சி முதலியவைகளால் காப்பாற்ற வேண்டும்.

பெண்களுக்கு நல்ல ஆடைகளை அளித்துக் காப்பாற்ற வேண்டும்.

அடுத்தவர்களின் செல்வம், வடிவம், பலம், குலம், சந்ததி, சுகம், சௌபாக்கியம், எல்லோராலும் போற்றப்படும் தன்மை முதலியவைகளில் எவன் பொறாமையுடன் இருக்கின்றானோ, அவனுடைய வியாதிக்கு முடிவே கிடையாது.

செய்யக்கூடாத காரியங்களைச் செய்வதிலும், செய்யக்கூடிய காரியங்களை செய்யாமல் விடுவதிலும், நேரமில்லாத நேரத்தில் விபரீதமான ஆலோசனையில் ஈடுபடுவதிலும் பயப்பட வேண்டும். கர்வம் கொண்டவர்களுக்குக் கல்விச் செருக்கு, செல்வச் செருக்கு, குலச் செருக்கு, என்னும் இம்மூன்றும் ஏற்படுகின்றன. கல்வி, செல்வம், குலம்- என்னும் இம்மூன்றும் நல்லவர்களிடம் இருந்தால் அவர்களுக்கு அடக்கத்தை உண்டுபண்ணுகின்றன.

மரம், பழங்கள் இல்லாமல் போனாலும் நிறையப் பூக்களோடு இருந்தால் போற்றப்படுவது போல, அரசன் கொடுக்காதவனாக இருந்தாலும், புன்னகை நிறைந்த முகம் கொண்டவனாக இருந்தால் போற்றப்படுகிறான். பழங்கள் இருந்தாலும் ஏறிப் பறிக்கமுடியாத அளவு மரம் உயரமாக இருப்பதைப்போல, மன்னன், நெருங்கமுடியாதபடி இருந்தாலும் அதிகமாகக் கொடுப்பவனாக இருந்தால் நல்லது. மரத்தில் இருப்பவை காய்களாக இருந்தாலும், பக்குவமான பழங்கள்போலக் காட்சி தருவதைப்போல, அரசன் பலம் குறைந்தவனாக இருந்தாலும் பலம் மிகுந்தவன் போலத் தன்னைக் காட்டிக்கொண்டால் அப்படிப்பட்ட அரசனுக்குக் கேடு எதுவும் வராது.

காற்று, மேகத்தைச் சின்னாபின்னமாக சிதறடிப்பதுபோல, வம்ச பரம்பரையாகக் கிடைத்த அரசாட்சியாக இருந்தாலும் அநியாய வழியில் நடக்கும் அரசன் தனது தவறான செயல்களினால் ஆட்சியை இழக்கிறான். பரம்பரையாகப் பெரியவர்கள் செய்து வந்த தர்மங்களைச் செய்துவரும் மன்னனின் பரிபாலனத்தில் உள்ள பூமி தன தானியங்கள் நிறைந்ததாக உயர்வை அடைகிறது. மன்னனின் செல்வத்தையும் வளர்க்கிறது. தர்மத்தை விட்டு அதர்மத்தைச் செய்யும். அரசனின் பூமி எந்தவிதப் பலனையும் தராது.

தனது பகைவனின் நாட்டை அழிக்க மன்னன் என்ன முயற்சி எடுக்கிறானோ அதே முயற்சியைத் தன் நாட்டையும் பாதுகாக்க எடுக்கவேண்டும்.

பசுக்கள் வாசனையை முகர்ந்து பார்ப்பதினால் பொருளைத் தெரிந்து கொள்கின்றன. அந்தணர்கள் வேதங்களால் தத்துவங்களைத் தெரிந்துகொள்கிறார்கள். அரசர்கள் அடுத்த நாட்டில் நடப்பவைகளை ஒற்றர்களால் தெரிந்து கொள்கிறார்கள். அதாவது ஒற்றர்களின் கண்களால் பார்க்கிறார்கள்.

உயர்ந்த குலத்தில் பிறந்தால் மட்டும் நல்ல ஒழுக்கம் இல்லாதவன் பாராட்டைப் பெறமாட்டான். எந்தக் குலத்தில் பிறந்தாலும் நல்ல ஒழுக்கம் உள்ளவனாக இருந்தால் அந்த மனிதன் போற்றத் தகுந்தவனே. ஒழுக்கம் கெட்டவனுக்கு எத்தனை செல்வமிருந்தாலும் பயனில்லை. இந்த உலகில் அவன் வாழ்வது வீணே.

*ஆசையுள்ள வாழ்வில் இன்பம் இருப்பதில்லை.*

நல்லவர்களால் ஒரு காரியத்திற்காக ஒரே ஒரு முறை வேண்டிக் கொள்ளப்பட்ட போதும் தீயவர்கள் தாங்கள் தீயவர்கள் என்பது அனைவருக்கும் தெரியும் என்பது அறிந்தும், தங்களை நல்லவர்களாகவே எண்ணிக் கொள்கிறார்கள். ஒழுக்கம் உள்ளவன் எல்லாவற்றையும் வெல்வான். மனிதனுக்கு ஒழுக்கம் முக்கியம். அது இல்லாவிட்டால் உயிர், செல்வம், உறவினர் முதலானவைகளால் பயனில்லை. குலச் செருக்கு முதலான செருக்குகளை விடச் செல்வச் செருக்கு மிகவும் பாவமானது. செல்வச் செருக்கால் கொழுத்தவன் தான் தன்னுடைய செயல்களால் தாழ்வை அடைந்தும், அதை அறிவதில்லை.

பணக்காரர்களின் உணவில் மாமிசமும், நடுத்தரமானவர்கள் உணவில் பசுவின் பால், தயிர், நெய் முதலியவைகளும், ஏழைகளின் உணவில் எண்ணெயும் பிரதானமாக அமைகின்றன. ஏழைகள் உணவைச் சுவைத்துச் சாப்பிடுகிறார்கள். பசித்தபின் சாப்பிடுவதால் அது சுவை மிகுந்ததாக இருக்கிறது. செல்வந்தர்களுக்கோ பசி எளிதில் ஏற்படுவதில்லை. உலகத்தில் அனேகமாகப் பணக்காரர்களுக்கு சாப்பிடுவதற்கே சக்தி இருப்பதில்லை. ஏனெனில் உட்கொண்ட உணவு சமிபாடடைவதில்லை. ஆதலால் சக்தி கிடைப்பதில்லை. ஏழைகளுக்கோ காய்ந்துபோன கட்டைகளைத் தின்றால்கூடச் சமிபாடடைகிறது - செரிக்கின்றது.




# படங்கள் தரும் பதிவுகள்



மாசிமாத மலருக்கான வெளியீட்டுரையினையும் மதிப்பீட்டுரையினையும் ஆற்றும் திருமதி புனிதவதி சண்முகலிங்கமும் திருமதி நாச்சியார் செல்வநாயகமும்.





நல்ல சேவை செய்யத் தேவையான ஆற்றலைக் கெட்ட மனிதனிடம் காணமுடியாது.



சிறப்புப்பிரதி பெற்ற அன்பர்களில் சிலர்.




இளமையில் கல்வியைப் புறக்கணித்தவன் எதிர்காலத்தை இழந்தவனாவான்.



சிறப்புப்பிரதி பெற்ற அன்பர்களில் சிலர்.



இறைவனின் அன்புக்கு இணையானது தாயின் அன்பு.



ஞானச்சுடர் வாசகர் போட்டியில் பரிசு பெற்றோர்.



மனிதனின் தனிமையே அவன் அடையும் உன்னதப் பதவிகளுக்கெல்லாம் அடிப்படை.

# இலட்சிய வாழ்வு

– பொ. கந்தையா ஆசிரியர் அவர்கள் –

பண்ணாகம் மெய்கண்டான் பாட சாலை வெள்ளிவிழா மலரில் 1950இல் வெளி வந்தது. (அப்போது வயது 32) எல்லோரும் வாழ்கிறார்கள். விலங்குகளும் பறவைகளும் வாழ்கின்றன. மரஞ் செடிகளும் வாழ்கின்றன. விலங்குகள் இயற்கையை ஒட்டியே வாழ்ந்து வருகின்றன. நம்மை அண்டிச் சீவிக்கும் விலங்குகள்கூட இயற்கையில் இருந்து அதி கம் விலகிவிடவில்லை. மரங்களும் அப் படியே. ஆனால் அரிதான மானிடப்பிறவியைத் தாங்கி வந்த மக்கள் இன்று இயற்கையை விட்டு இன்னல் வாழ்க்கையில் இறங்கித் தவிக்கின்றனர். இறங்கிய வழியையும் கண் டிலர். ஏறும் விதத்தையும் தெரிந்திலர். ஐயோ பரிதாபம். ஆனால் வாழ்வுக்கு வரைவிலக் கணம் சொல்லுவதில் எழுதுவதில் மகா வித்துவான்கள் ஆகவும் காட்சி அளிக்கின் றனர். இயற்கை வாழ்வு வாழும் மனிதனை கிராமத்தில் மட்டுமல்ல தேசத்திலும் கூடக் காண முடியவில்லை. அப்படியானால் சித் திரத்திலே தான் கீறிப் பார்க்க வேண்டும்.

அன்று வாழ்ந்த இயேசு கிறிஸ்துவை சித்திரத்தில் பார்க்கிறோம். இலட்சிய வாழ்வை அங்கு காண்கிறோம். கற்பனை செய்கிறோம். ஆனால் அப்படி வாழமுடியாது என்று முடிவு கட்டி விடுகிறோம். புத்தர் பெருந்துறவைப் படிக்கிறோம். அவரது ஞான ஒளியைப் பார்த் துக் கடவுளின் அற்புதத்தை வியக்கிறோம். அரசிளங்குமாரரான புத்தர் ஞானகுருவான சரித்திரத்தைப் படித்தபின்பும் நமது வாழ்வுப் பாதையில் நாலடி வைக்க நாணுகிறோம். கதாப்பிரசங்கமாகவே புத்தர் சரித்திரத் தைச் சொல்லி விடுவோம். அப்படியே நபிகள் நாயகத்தின் பெருமைகளைப் பேசுவதிலும் நாம் பின் நிற்பதில்லை.

இராமகிருஷ்ண பரமஹம்சரை அவர் சீடர் விவேகானந்த சுவாமிகளைப் பலர் நேரில் கண்டனர். கூடி வாழ்ந்தனர். அவர்களும் மறைந்து விட்டனர். மிக அண்மையில் வாழ்ந்து போன பகவான் ரமணரைப் பார்த்தோம். பகவான் அரவிந்தரைக் கண்டோம். நாம் செய்து கொண்ட மாற்றங்கள் என்ன. இலட் சியப் புருஷர்களைப் பார்ப்பதும் அவர்களோடு பழகுவதும் மறைந்தபின் அவர்களைப் புகழ் வதும் அவர்களுக்குக் கோயில் கட்டுவதும் தான் எமது இலட்சியங்களாய் விட்டன.

கடைசியாக காந்தியடிகளின் வாழ்க் கையை நோக்குவோம். அவர் யோகத்தில் ஆழ்ந்து கிடக்கவில்லை. மோனத்தில் மூழ் கிக் கிடக்கவில்லை. தரித்திர நாராயணர் களுடன் கூடி வாழ்ந்தார். அவர்கள் சுக துக்கங் களைப் பகிர்ந்து கொண்டார். எங்களால் கரிசனங்கள் படும் இன்னல்களைக் கண்டு இரங்கினார். தானும் ஓர் கரிசனாகவே வாழ்ந்து அவர்களை இலட்சிய வாழ்வுக்கு இட்டுச் சென்றார். காந்தி வழி செல்கிறோம் என்று கதர் உடுத்து மற்றவர் கண்ணுக்குக் காட்சி அளிக்கும் நாம் கரிசனங்களுக்குச் செய்தது என்ன. இன்னும் பாடசாலைகள் வழிவிடவில்லை. கோயிற் கதவுகள் திறக்கப்படவில்லை. ஹோட் டல்கள் அவர்கள் பசியைப் போக்கவில்லை. பெரிய பதவிகள் அவர்களைச் சேரவில்லை. வேற்றுமைகள் இருந்தபடி இருக்கின்றன. கரிசனங்களுக்கு இல்லாத உரிமைகளை நாம் அனுபவிக்க மறுக்க வேண்டும். காந்தி யடிகளையாவது இயற்கையோடு இயைந்து

*ஒருமனதுடன் ஒழுங்காகச் செய்வதே செயல்.*

வாழ விட்டோமா. எமது பிற்போக்குச் சக்தியும் சுயநலப் போக்கும் ஒரு கோட்சேயாக உருவெடுத்துக் காலத்துக்கு முன் காந்தியடிகளைக் கடவுளடி சேர்த்தன.

வாழ்வுக்கு முன் சில சொற்களைச் சேர்த்துப் பேசுகிறோம். இலட்சிய வாழ்வு அமரவாழ்வு சுதந்திர வாழ்வு சுபீட்ச வாழ்வு சத்திய வாழ்வு அன்பு வாழ்வு என்றெல்லாம் கூறிவிட்டு மனம் போன போக்கெல்லாம் போகிறோம். இலட்சிய வாழ்வு மனிதனின் கடமை என்பதை மறந்து விடுகிறோம். நமது பிழைகளை ஒப்புக்கொள்வதற்குப் பதிலாக அவற்றை மறுக்க முற்படுகிறோம். பஞ்சமா பாதகங்களை பச்சையாகவே செய்ய கங்கணம் கட்டி நிற்கிறோம். கடைகெட்ட கைலஞ்சத்தையும் சீர்கெட்ட சீதனத்தையும் நாகரிகத்தின் சின்னங்கள் என்று கைக்கொள்கிறோம். பலருடைய உதவியும் பெற்றுக் கட்டிய பொது ஸ்தாபனங்களை நம்மில் பணம் படைத்தோர் சிலர் அபகரித்துக்கொண்டு தாம் ஆட்சி செலுத்தி அனுபவிப்பதோடு நின்று விடாமல் தமது சந்ததிக்கும் உரிமையாக்கி அழியாப் பழியை அநியாயமாகச் சம்பாதிக்கிறார்கள். இவ்வாறு எல்லோரும் நரக லோகத்துக்கு நடைகட்டுகிறார்கள். சுவர்க்க லோகத்தை சிந்திப்பதற்கோ சிலர்தானும் இல்லை. எல்லோரும் பாலைவனத்தில் பரிதவிக்கிறார்கள். பசுந் தரைகளைப் பார்த்து மகிழ மனிதர் எவருமில்லை.

வாழ்க்கையின் இலட்சியங்களை ஒவ்வொன்றாக எழுத இச்சிறு கட்டுரை இடந்தராது. ஆகவே இலட்சிய வாழ்வை வாழ்ந்து எம் கண்முன் நின்ற மகாத்மாவை மனதில் இருத்துவோம். இலட்சிய புருஷர்களின் வாழ்க்கை வரலாறுகளையெல்லாம் பிறர் எழுதி வைத்தனர். அவ்வாறு வாழமுடியாதென்று கூறி அவர்கள் உபதேசங்களை வாய்ப்பாடம் சொல்லும் அளவில் நின்றுவிட்டோம். இது மட்டுமல்ல மதத்தின் பேரால் போர்களையும் தொடுத்தோம். மதம் மனிதனை அணுகுண்டு எல்லைக்கும் கொண்டுவந்து விட்டது. கடவுள் இந்நிலையில் காந்தியடிகளை அனுப்பியதோடு அவர் சரித்திரத்தை அவரே எழுதவும் செய்து ஒரே மதம், ஒரே கடவுள், ஒரே உலகம், ஒரே மக்கள் என்ற சமரச ஞானத்தையும் மக்கள் குலத்துக்கு உணர்த்தினார்.

காந்தியடிகளின் சுயசரித்திரமான சத்திய சோதனைதான் இலட்சிய வாழ்வை நமக்கு அளிக்கக்கூடிய ஒரே ஔடதம். இதனால் நமது உடல் உள நோய்கள் தீரும். சத்திய வேட்கை அன்பாசை ஆகிய பசிகள் ஏற்படும் இவற்றுக்குக் கடவுள் நம்பிக்கையும் தன்னம்பிக்கையும் உணவாகக் கொள்ள வேண்டும். அப்போது இலட்சிய வாழ்வுக்கான விதிகள் நமது மனச்சாட்சியிற் புலனாகும். அதன்வழி செல்வோம். அது தனிவழியன்று. புது வழியும் அன்று. அன்று அரிச்சந்திரன் சென்ற வழி. இன்று காந்தியடிகள் சென்ற வழி. வள்ளுவர் வகுத்த வழியும் இதுவே. இன்னும் எத்தனையோ பெரியோர்கள் சென்று சென்று சிறப்புற்றிருக்கும் வழியுமாகும். ஆதலால் நாம் பயமின்றி அந்த இலட்சிய வழியிலே செல்வோம்.

சத்திய சோதனை ஆகிய சரித்திர கூடத்தில் நமது இளைஞர்கள் வாழ்க்கைப் பரிசோதனை தொடங்க வேண்டும். பெற்றோர்களும் பெரியோர்களும் இலட்சிய வாழ்வைச் சிறுவர்களுக்கு வாழ்ந்து காட்டவேண்டும். இதற்கு ஏற்றபடி கல்வி தொழில் பழக்கம் எல்லாம் கொடுக்கப்படல் வேண்டும். மாணவர்களைப் பரீட்சையில் சித்தியெய்தப் பண்ணுவது பாடசாலையின் இலட்சியமாக இருக்கக் கூடாது. எத்தனை இலட்சியப் புருஷர்களை எத்தனை இலட்சியப் பெண்களை உற்பத்தி செய்திருக்கிறது என்பதில்தான் ஒரு பாடசாலையின் வளர்ச்சியும் உயர்ச்சியும் தங்கியுள்ளன.

*வறுமையிலே நீ நண்பர்களை அறிவாய்.*

காந்தியடிகள் தாயாருக்கு சத்தியம் செய்து கொடுத்து இங்கிலாந்து சென்று தன் வாழ்க்கையைப் பேணியதுபோல நமது இளைஞர்களும் பெற்றோருக்கோ ஆசிரியருக்கோ சத்தியம் செய்து கொடுத்துப் பிற்கால வாழ்வில் அதனைப் பேண வேண்டும். தெய்வத் தன்மை மிக்க இளஞ்சிறுவர்களிடம் இப்படிச் சத்தியம் கேட்பதற்கு பெற்றோரும் ஆசிரியரும் தம்மைத் தகுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இலட்சிய வாழ்வு வாழும் ஆசிரியர்கள்தான் பாடசாலைகளில் அமர்த் தப்பட வேண்டும். மற்றவர்கள் தாமாகவே இந்தப் பொறுப்பில் இருந்து விலகிக்கொள்வது கௌரவம் என்பதோடு சமூகத்துக்கும் தேசத்துக்கும் செய்யும் பெரிய தர்மமும் ஆகும். இலட்சிய வாழ்வுக்கு எடுத்துக் காட்டாக பாடசாலைகளும் ஆசிரியர்களும் அமையும்போதுதான் மக்களிடையே நாளடைவில் இலட்சிய வாழ்வு முளைகொள்ளும்.

இலட்சிய வாழ்வே இயற்கை வாழ்வு.

இன்பமே சூழ்க; எல்லோரும் வாழ்க!

## நற்றமிழால் பாடிதொழுகின்றேன் நம்சிவனை

பிட்டுக்கு மண்சுமந்த பெருமானை மனையாட்டி
கட்டுக்குள் கைகட்டி நின்றானை கணக்கின்றிப்
பிரம்படிகள் பெற்றானை பேசும்திரு வாசகத்தில்
தரம்காத்து வாழ்வானை தமிழ்காத்து ஆள்வானை
இடுகாட்டில் கூத்தாடி இரவெல்லாம் அலைவானை
இடும்பா வனத்தில் இறையாகிக் காப்பானை
முல்லை மலர்போல முத்தமிழைப் பூப்பானைத்
தில்லைப் பெருமன்றில் திருநடனம் செய்வானை
கங்கைத் தலையானைக் கருநீலம் உண்டானை
மங்கையவள் மீனாளின் மனத்தில் நிலைத்தானை
பற்றெல்லாம் விட்டுப் பரதேசி ஆனானை,
கற்றைச் சடையானைக் கைலாய மலையானை
சுடலைப் பொடியானைச் சுடுகாட்டில் கிடப்பானை
கடலை நிகர்த்த கருணை மனத்தானை
காளைக் கொடியானை கயற்கண்ணி அம்மையை
ஆளும் நாயகனை ஆடலிலே வல்லானை
வானை அளந்தானை வண்டமிழைக் காப்பானை
வில்லடியும் கல்லடியும் சொல்லடியும் விருப்புமுடன்
நல்லடியாய்ப் பெற்றானை நச்சரவம் பூண்டானை
நற்றமிழால் பாடித் தொழுகின்றேன் நம்சிவனை.

-காரை எம்.பி. அருளானந்தன்-

*ஆற்றல் தனிமையில் உண்டாவது.*

# ஈழநாட்டில் இந்துமத வளர்ச்சியில் மடங்கள்

(தொடர்ச்சி...

– திரு தம்பு துரைராஜா அவர்கள் –

**திருக்கேதீச்சரத்து மடாலயங்கள்:**

யாத்திரைத் தலமாகவும், தீர்த்த மகிமை நிறைந்த பாடல்பெற்ற திருத்தலமாகவும், மகா சிவராத்திரி தினம் விசேடமாகக் கொண்டாடப்படும் சிவத்தலமாகவும் விளங்கும் மன்னார் திருக்கேதீச்சரத்தில் திருஞான சம்பந்தர் மடம், நகரத்தார் மடம், நாவலர் மடம், அம்மா சத்திரம், திருப்பதி மடம், திருவாசக மடம், மகா சிவராத்திரி மடம், பொன்னாவளி உடையார் மடம், நாதன் சத்திரம், மலை சிவா மடம், கதிர்காமத் தொண்டர் மடம், மகாதுவட்டா மடம், பூநகரி மடம், அடியார் மடம், நீர்ப்பாசன மடம், சிவபூசை மடம், நரசிங்க மடம், கட்டடத் தியானமடம் என்பன இருந்ததாகக் குறிப்புகள் உள்ளன.

ஈழத்தில் வன்னிமையை ஆண்ட வன்னியச் சிற்றரசர்களின் செப்புப்பட்டயமொன்று யாழ்ப்பாணத்தரசன் பரராசசேகரனால் தமிழ் நாட்டிலே சிதம்பரத்தில் அமைக்கப்பட்ட மடத்தைப் பற்றியும் வன்னிப்பகுதிகள் ஆண்ட வன்னிய அரசர்களில் ஒருவராகிய கைலாய வன்னியனால் அமைக்கப்பட்ட மடத்தைப் பற்றிய விவகாரங்களையும் தெளிவுபடுத்துகிறது. வன்னியர் செப்புப் பட்டயத்தையும், கள்ளியர்காட்டுச் செப்பேட்டையும் ஆராய்ந்த கலாநிதி செ. குணசிங்கமும், பேராசிரியர் சி. பத்மநாதனும் மேல்வருமாறு கூறுகின்றனர்.

1. “சிதம்பரத்தில் யாழ்ப்பாணத்து அரசர்களால் அமைக்கப்பட்ட இராசகல் தம்பிரான் மடத்தினதும் வன்னியரசன் கைலாய வன்னியனால் அமைக்கப்பட்ட கைலாய வன்னியர் மடத்துக்கும் அதன் நில புலன்களினதும் சொத்துக்களினதும் இன்றைய நிலையும் தெரியாது. யாழ்ப்பாணத்து நகரிலுள்ள கள்ளியங்காடு என்ற கிராமத்தின் பெயரில் சிதம்பரத்திலுள்ள மடமொன்று இன்று அழிந்த நிலையில் உள” என்பர்.

2. **கள்ளியங்காட்டுச் செப்பேடு தெரிவிப்பதாவது.**

இந்த மடத்துக்கும் அறக்கட்டளைக்கு உதவுபவர்கள் சிவனுக்கென்ற இரண்டாம் சாமத்தில் சிதம்பரத்தில் ஆடவல்லானைத் தரிசித்த புண்ணியத்தைப் பெறுவதுடன், இந்த மடத்திற்குத் தீ வைப்பவர் சிவாலயத்தை எரித்த பாவத்தையுடையவர். இப்படியாக் அறங்களைச் செய்பவர்களைவிட இந்த மடத்தைப் பாதுகாப்பவரும் ஊக்குவிப்பவரும் பத்து மடங்கு பலன்களைப் பெறுவர் என்கிறது கள்ளியங்காட்டுச் செப்பேடு.

**பருத்தித்துறை தெருமூடி மடம்:**

ஆலயச் சூழலைத் தவிர்ந்த மடங்கள் பலவும் ஈழத்துச் சைவ கலாசாரத்தில் இடம்பெற்றுள்ளனவென்பதுவும் பெரிதும் மனங்கொள்ளத்தக்கது. பருத்தித்துறைப் பட்டினத்தின்

*துன்பம் வரும்போது பொறுத்துக்கொள்ளும் வலிமையே தூய்மை நிரம்பியது.*

பிரதான வீதியிலிருந்து கிழக்குப் புறமாகத் தும்பளை வீதியில் அமைந்துள்ள பழைமையான ஒரு பாரம்பரியமே தெருமூடி மடமாகும். இது இடது வலது ஆகிய இருபக்கமும் தரையிலிருந்து 2' உயர்த்தப்பட்டு நீளம் வரை திண்ணைக்கட்டு 20' உயர்வாகக் கூரையமைக்கப்பட்டு இரு மருங்கையும் மூடி வெளியிடப்படாத வகையில் அவ் வீதியால் பயணிப்போர் இளைத்துக் களைத்து வருகையில் அவ்விடத்தில் இருந்து இளைப்பாறிக் கொள்வதற்கு இற்றைக்கு 150 வருடங்களுக்கு முன்னர் கட்டப்பட்டதே இந்தத் தெருமூடி மடம். பருத்தித்துறை நகரில் வடமராட்சிப் பிரதேசத்தில் தெருமூடி மடங்கள் மந்திகை, மாலுசந்தி ஆகிய இடங்களில் இருந்தபோதும் தற்போது பருத்தித்துறை தெருமூடி மடம் மட்டுமே எஞ்சியிருக்கிறது.

சுமையுடன் வருவோர் இவ்விடத்தில் இளைப்பாறி உட்கார்ந்துவிட்டு அயல் ஊர்களுக்கும் அதிலும் குறிப்பாக தும்பளை, மாதனை, நெல்லண்டை, கற்கோவளம், வராத்துப்பளை, வல்லிபுரம் ஆகிய ஊர்களுக்கும் உறவினர்களின் வீடுகளுக்கும் செல்வார்கள்; தங்கிச் செல்வதுமுண்டு. இன்னும் 60, 70 வயது நிரம்பிய முதியோர்கள் இளைப்பாறுவதற்கும் கூடிக் கதைப்பதற்கும் ஊர், உலக விஷயங்களை அலசுவதற்கும், ஒரு நாளைக்கு ஒரு தடவையாயினும் மடத்தில் கூடுவர். நோயினாற் துன்பப்படுகின்ற பலருக்கு இம்மடம் அடைக்கலம் கொடுப்பதோடு பொழுதுபோக்குகின்ற இடமாகவும், காற்று வாங்கும் இடமாகவும் காணப்படுகின்றது.

சமுதாய நோக்கிலான மக்கட் சேவையையே குறிக்கோளாகக் கொண்டு மக்களின் பாவனைக்கெனக் கட்டப்பட்ட பொது மடங்கள் குறித்த செய்தி இன்றைய சூழ்நிலையிலே பெரிதும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியுள்ளது. தத்தமக்கென இருப்பிடம் கட்டும் நோக்குடன் பெரும் ஏமாற்றுப் பேர்வழிகளும் "மடம்" என்று கூறிக்கொண்டு தமது சுகபோகத்திற்கென ஈடுபடுவது சைவத் தமிழ் உலகம் நன்கறிந்த பேருண்மையாகும். பருத்தித்துறை பண்பாட்டுக் குறிக்காட்டி தெருமூடி மடமாகும். யாழ்ப்பாணத்திலே பண்டார மடம், உப்பு மடம், முத்தட்டு மடம், மருதனார் மடம், ஆறுகால் மடம், கந்தர் மடம், நாவலர் மடம், செட்டியார் மடம், சுப்பர் மடம், ஓட்டுமடம், பண்டத்தரிப்பு மடம், சாரையடி மடம், சங்கத்தானை மடம், பனைமுனை மடம், நெல்லியடி மடம், திருநெல்வேலி மடம், மடத்துவாசல் ஆகிய இடங்களில் இத்தகைய தங்குமிடங்கள் இருந்ததற்கான சான்றுகள் இருந்தாலும் பருத்தித்துறை தெருமூடி மடம்போலத் தெருவை மூடி இருமருங்கும் இருந்துள்ளன. என்பது வெளிப்படையான மறுக்கமுடியாத பேருண்மையே.

தெருமூடி மடம் 150 வருடங்கள் பழமை வாய்ந்தவை. திராவிடக் கலைப்பாணியில் அமைந்துள்ளது. வெள்ளைச் சுண்ணாம்புக் கற்களினால் உருவாக்கப்பட்ட தூண்கள் அதன் கபோதங்கள் மற்றும் தளம் ஆகிய சிறந்த கொத்து வேலைப்பாடுகளைக் கொண்டிருக்கின்றன. இங்கு 16 தூண்கள் காணப்படுகின்றன. இவற்றுள்ளே தூண்களில் தமிழ் வரிவடிவில் சாசனங்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

மக்களின் நீர் வேட்கை தண்ணீர்த் தாகம், தண்ணீர் விடாய் தீர தண்ணீர்த் தொட்டிகளும் மடங்களில் தெருவோரங்களிலே அமைக்கப்பட்டன. சில இடங்களில் கிணறுகளும் உள்ளன.

*கோபத்தில் செயற்படுவது புயலில் கப்பலைச் செலுத்துவதற்குச் சமம்.*

மானுடர் மட்டுமன்றி விலங்குகள் கால்நடைகள் நல்ல நீரைக் குடிப்பதற்கும் நீர்த் தொட்டிகள் கட்டினர். ஆநிரைகளும், பசுக்களும் தமது நீர் வேட்கையைத் தீர்த்துக்கொள்ளவும் அதற்குப் பின்னர் ஆடு மாடுகளுக்கு உடம்பில் ஏற்பட்டிருக்கும் நமச்சலை சொறியை கடியை ஆவுரோஞ்சிக் கல்லிலே உரோஞ்சி - சொறிந்து செல்லும் தன்மையையும் மடங் களினருகே காணமுடியும். நீர்த்தொட்டியும் ஆவுரோஞ்சிக் கல்லும் உயர்ந்த நன்நோக்கோடு அமைத்தனர்.

ஆவுரோஞ்சிக்கல் 3' தொடக்கம் 4' வரை உயரமும், 1-12' அகலமுடையதாகவும் அமைக்கப்பட்டது. பொதிச் சுமைகளை இறக்குவதற்கு 5' ஆகிய மேடை (குந்து) அமைத்தனர். சுமையைக் கைத்தாங்கிமூலம் இம்மேடையிலே இறக்கி வைக்கத்தக்க வசதியாகவும் அது அமைந்தது.


**பேராசிரியர் வ. மகேஸ்வரனின் திருமடங்கள் குறித்த விளக்கம்:**

ஞானத் தந்தை ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகள் எனுந் தலைப்பிலே 42ஆவது ஜெயந்தி நினைவு வெளியீடு (28.03.1996) என்ற நூலை ஆழ்கடலான் முருகவே பரமநாதன் எழுதி வெளியிட அந்நூலுக்கு வழங்கிய மதிப்புரையிலே அப்போது முதுநிலை விரிவுரை யாளராயும் தற்போது துறைத் தலைவராயும் பேராசிரியராயும் கலாநிதியுமாய் விளங்குகின்ற வ. மகேஸ்வரன் திருமடங்கள் குறித்துத் தரும் விளக்கம் மனம் கொள்ளற்பாலது. ஆய்வு நோக்கில் இக்கருத்துக்கள் விண்டுரைக்கற்பாலன.

ஆலயச் சூழல்களிலும் பிற இடங்களிலும் திருமடங்கள் அமைத்துச் சமயத் தொண்டும் சமூகத் தொண்டும் ஆற்றும் மரபும் இந்துமதத்துக்குண்டு. ஞானசம்பந்தர் பாண்டி நாட்டிற் தங்கியிருந்த திருமடமும், சித்தவட மடமும், அப்பூதியடிகள் திருமடங்களமைத்ததும் தேவார காலத்துச் சான்றுகள். பின்னர் அகப்புறச் சந்தான குரவர்களது மரபுகளில் மடாலயங்கள் அமைத்ததும் அவை சமய தத்துவத் தொண்டுகள் புரிந்ததும் நாமறிந்ததே. இன்றும் தமிழகத்திற் பல மடங்கள் அமைந்துள்ளன. அவை சமயப்பணியையும், சமூகப் பணியையும் ஒரே நேரத் திற் செய்து வருகின்றன. இத்தகையதொரு பாரம்பரியம் ஈழநாட்டிற்கும் உண்டு. மாவிட்டபுரம் முதல் கதிர்காமம் வரையாக இவ்வாறான மடங்கள் அமைந்துள்ளன. (1996: vi)

(தொடரும்...

**வாழ்த்துகின்றோம்**



பலவித சமூக, சமய அறப்பணிகள் ஆற்றி சமூகத் தோடு ஒன்றிய அறப் பண்பாளன், மணிவிழாக் காணும் திரு E.S.P நாகரெத்தினம் அவர்கள் அகவை 60இல் காலடி வைத்ததையிட்டு நாம் சந்நிதி வேலவனைப் பணிந்து வாழ்த்துகின்றோம்.

-சந்நிதியான் ஆச்சிரமம்-

அறிவுள்ள மனிதன் அதிகம் கேட்கிறான்; குறைவாகப் பேசுகிறான்.

# வம்சங்களும் வரலாறுகளும்

– திரு இராம. ஜெயபாலன் அவர்கள் –

இந்திரலோகத்துப் பட்டத்து யானையைப் பாகமாய்க்
கொண்டமூசிக வாகனனே மூத்த விநாயகனே
ஐந்து முகத்தவனே அன்னை அகிலாண்டேஸ்வரியின்
அருந்தவப்புதல்வனே - மகாபாரதக்கதையை உந்தன்
தந்தத்தையே முறித்து எழுத்தாணியாகக் கொண்டு
வியாசமுனிவர் சொல்ல விரைவாய் எழுதியவரே!
தந்தையையும் தாயையுமே வலம்வந்து ஞானப்பழத்தைப்
பெற்றவரே - ஞானச்சுடரிலும் இந்தக் கவிதையும்
முந்தைய புராண இதிகாசங்கள் போலமைந்து
அடிப்படைகள் விளங்கிக் கொள்ள - கல்லோடைக்
கந்தப் பெருமான் வரலாற்றைப் பாடும் பேற்றை
பயனாய் அவனருளாய்த் தருவாய் ஐயனே!

ஐந்து பூக்கள் ஐந்துநிலங்களைக் குறிக்கும் பறவை
விலங்குகள் அசுரர்கள் தேவர்களைக் குறிக்கும்
சந்திர (ஐந்துநிலம்) வம்சமும் ஒன்றாய் யெல்லோர்க்கும்
பொதுவாய் விளங்கும் சூரிய (ஆகாயம்) வம்சமுமிணைந்து
இந்து சமயத்தின் அறுவகைச் சமயங்களாயும் கிளைவம்ச
மாய்ப்பிராமண வம்சமும் அறுபத்து நான்கு கோத்திரங்களும்
இந்த வகையில் பூமியைத் (சக்தி) தாயாகவும் சூரியனைத்
(சிவன்) தந்தையாகவும் கொண்டு அறுவகைச் சமயத்துள்
சந்நிதி முருகனும் இரண்டறக் கலந்தும் ஒன்றாகியும்
அறுதிரு முருகனாய் அவதரித்த பெருமானே!

இந்து சமயத்தின் அரசுரிமை மூத்த ஆண்வம்சவழி வாரிசுக்
கேயென்ற முதலமைதியுடன் படிக்கை காலம் செல்ல -
எந்தவம்சம் மூத்தவம்ச மென்ற முரண்பாடுகளால்
எல்லா வம்சங்களுமே யிரண்டாய்ப் பிளவுபட்டு
வந்த சகோதரயுத்தங்களால் சூரியவம்சம் காணாமல்
போயும் அழிந்தும் வரலாறாக (இதிகாசங்கள்) மீண்டும்
சந்திர வம்சத்திலிருந்தே தோற்றம்பெற்ற மறுசமயங்
களால் எல்லா வம்சங்களுமே மறை பொருளாக
சந்நிதி முருகனும் புராணமும் (மறையருள்) இதிகாசமும்
(வரலாறு) இனைய ஆண்டியான முதல் கதையிது.

(கட்டுரைத்தொடர் - 18

# சித்தர்களின் ஞானம்

– திரு சிவ மகாலிங்கம் அவர்கள் –

## பதினெண் சித்தர்களில் அழுகணிச் சித்தர்

இச்சித்தரின் பாடல்கள் அழகும், அணிநயமும், இனிமையும் கொண்டவை. அதனால் அழகணிச் சித்தர் என்று அழைக்கப் பெற்றார். இப்பெயர் மருவி அழுகணிச் சித்தர் என்றும் அழுகுணிச் சித்தர் என்றும் அழைக்கப்பட்டார் எனச் சித்தர் பாடல்கள் என்ற நூல் குறிப்பிடுகிறது. இவருடைய பாடல்கள் ஒப்பாரி போலவே அமைந்திருக்கின்றது. அழுகின்ற ஓசையே இப்பாடலின் இசையமைப்பு. அழுகின்ற இசையின் மாதிரியில் பாடியிருப்பதால் இவர் அழுகணிச் சித்தர் என்று அழைக்கப்பட்டார். இதுவே இவர் பெயருக்கு காரணமாக இருக்கலாம் எனச் சாமி சிதம்பரனார் குறிப்பிடுகின்றார்.

யோகத்தையும் ஞானத்தையுமே அழுகணிச் சித்தரின் பாடல்கள் எடுத்துக் கூறுகின்றன. யோகம் மனிதனுடைய மனோநிலையை உயர்த்துகிறது. மனம் உயர்ந்தால் மனிதன் உயர்கின்றான். யோகம் என்பது சித்தவிருத்தியை நிரோதம் பண்ணுவது எனப் பதஞ்சலி முனிவர் தமது யோக சூத்திரத்தில் கூறியுள்ளார். மோட்சத்திற்கு வழிகாட்டும் திசைகாட்டி யோகமே என்பதை "யோகமே மோஷ வேறது" என யோக சூத்திரம் கூறுகிறது. மனத்தை ஒருமைப்படுத்தி, இறைவனுடைய திருஉருவத் தியானத்தில் ஈடுபடச் செய்து எல்லாம் மறந்த சமாதிநிலையை அடைவதே யோகத்தின் இலட்சியமாகும். யோக மார்க்கம் ஆன்மா இறைவனை அடைவதற்கான வழியாக ஞான வாயிலாக உள்ளது என்றே சைவ சித்தாந்தம் கூறுகிறது. யோகம் மனத்தைப் பரிபக்குவப்படுத்துகின்றது. அதனால் அதி சூக்குமமான உணர்ச்சிகள் உண்டாகின்றது. உருவமற்ற அறிவே வடிவான ஆண்டவனை அடைய யோகம் வழிகாட்டுகிறது.

அழுகணிச் சித்தர் பாடல்களுக்கு யோகிகளும் தத்துவ ஞானிகளும்தான் தெளிவாகப் பொருள் காணமுடியும். இவருடைய பாடல்களின் கருத்துக்களை வெறும் இலக்கண இலக்கியப் புலவர்களால் கண்டறிய முடியாது. அனுபூதி ஞானம் பெற்றவர்களால்தான் அறிய முடியும்.

இயமம், நியமம், ஆசனம், பிரணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி ஆகியன அட்டாங்க யோகம் என அழைக்கப்படும். இயமம், நியமம், ஆசனம், பிரணாயாமம் ஆகிய நான்கும் யோகத்தில் சரியை என்றும், பிரத்தியாகாரம், தாரணை ஆகிய இரண்டும் யோகத்தில் கிரியை என்றும், தியானம் யோகத்தில் யோகம் என்றும், சமாதி நிலையாகிய அதியுயர் நிலை யோகத்தில் ஞானம் என்றும் கூறப்படுகிறது. உடம்பின் மூலாதாரத்தில் இருக்கும் குண்டலினி சக்தியை யோக சக்தியாக மாற்றி மேலே கொண்டு சென்றால் பேரானந்தமயமான அமிர்தத்தைச் சுவைக்கும் வாய்ப்பு ஏற்படும். இதனை உச்சியில் பிட்சை எடுத்தல் எனச் சித்த புருஷர்கள் கூறுவார்கள். தியான நிலையில் உணர்வுகள் ஆன்மீக மயமாய் இருக்கும்.

*ஒன்றும் இல்லாதவன் ஏழை அல்ல; அளவுக்கதிகமாய் ஆசைப்படுபவனே ஏழை.*

தியானத்தில் அமர்ந்த பின் கண்கள் இரண்டையும் முற்றாக மூடிவிடாமல் பார்வையை நடு மூக்கில் வைத்திடல் வேண்டும். அப்படி வைத்தால் அது தியானத்திற்கு அனுகூலமாக இருக்கும். உடலுக்கு அழிவு வராது. எவ்வித வாட்டமும் அதற்கு ஏற்படாது. மனம் தறிகெட்டு ஓடுவதும் இல்லை. வெளியுலக உணர்வு எதுவும் ஏற்படாது. நான் என்ற அகங்காரமும் எனது என்ற மமகாரமும் அடங்கி ஒடுங்கி நிற்கும். எவ்வித வேட்கையும் தோன்றாது. தேட்டமும், விருப்பமும், இச்சையும், தேடுதலும் இல்லை. சீவனுக்குள்ளே சிவமணம் பூத்த இந்த நிலையில் ஆன்மா சிவசொரூபமாக மாறிவிடும் என்கிறார் திருமூலர்.

நாட்டம் இரண்டும் நடுமூக்கில் வைத்திடில்
வாட்டமும் இல்லை மனைக்கும் அழிவில்லை
ஓட்டமும் இல்லை உணர்வில்லை தானில்லை
தேட்டமும் இல்லை சிவனவனாமே.

அழுகணிச் சித்தர் சக்தி தெய்வத்தை கண்ணம்மா என்று விளித்துத் தனது பாடல்களைப் பாடியுள்ளார். மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என உடம்பில் ஆறு ஆதாரங்கள் காணப்படுகின்றன. மூலாதாரத்தில் உள்ள இந்த குண்டலினி சக்தி ஆறு ஆதாரங்களின் ஊடாக சிரசை அடைகிறது. முதுகுத்தண்டு வழியாகவே இந்த ஆறு ஆதாரங்களையும் குண்டலினி சக்தி தாண்டிச் செல்கிறது என்பதை அழுகணிச் சித்தரின் பின்வரும் பாடல் விளக்குகிறது.

மூலப் பதியடியோ மூவிரண்டு வீடதிலே
கோலப் பதியடியோ குதர்க்கந்தெரு நடுவே
சாலப் பதிதனிலே தணலாய் வளர்த்த கம்பம்
மேலைப் பதிதனிலே - என் கண்ணம்மா!
விளையாட்டைப் பாரேனோ!.

“எண்சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம்” என்பது நம்மிடம் உள்ள முதுமொழி. நமது உடம்பை எமது கையினால் அளந்து பார்த்தால் எட்டுச்சாண் உயரமே காணப்படும். இந்த உடம்பிற்கு ஒன்பது வாசல்கள் உண்டு. இதனை ஏழிரண்டு வாசல்கள் என்கிறார் அழுகணிச் சித்தர். ஏழும் இரண்டு ஒன்பது என்பதே சித்தரின் கருத்தாகும். கண்- 2, காது- 2, மூக்கு- 2, வாய்- 1, கருவாய் (சிறுநீர் செல்லும் வழி)- 1, எருவாய் (மலம் செல்லும் வழி)- 1 என மொத்தமாக ஒன்பது வாயில்கள் மானிடர்களின் பூத உடலில் காணப்படுகின்றன. மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்பொறிகளின் வாயிலாகவே ஆன்மா அறிவையும் உணர்வையும் பெறுகிறது. இந்த ஐம்பொறிகளையும் பஞ்சாயத்துக்காரர் என்றும் நல்வினை, தீவினையை பட்டணம் இரண்டு எனவும் அழுகணிச் சித்தர் தனது பாடலில் குறிப்பிடுகின்றார்.

எண்சாண் உடம்படியோ ஏழிரண்டு வாயிலடி
பஞ்சாயக்காரர் ஐவர் பட்டணமுந் தானிரண்டு
அஞ்சாமற் பேசுகிறாய் ஆக்கினைக்குத் தான் பயந்து
நெஞ்சார நில்லாமல் என் கண்ணம்மா
நிலை கடந்து வாடுறண்டி.

கொல்லன் உலைபோல என் வயிறு கொதிக்கிறது. நில்லென்று கூறி அதனை நிலைநிறுத்தவும் முடியவில்லை. கொல்லன் உலையின் ஊது குழிபோல் நமது மூச்சானது

*மணிக்கணக்கில் செய்யும் போதனையைவிட, ஒரு கணப்பொழுது உதவி புரிவதே சிறந்தது.*

ஊதிக்கொண்டிருக்கிறது. பிரணாயாமப் பயிற்சியை ஒழுங்காகச் செய்பவர்களிடம் யமன் அணுகவே மாட்டான். அவரைக் கொல்வதற்காக வந்த யமன் அவரைக் கண்டு அச்சமடைந்து பின்வாங்கி ஓடிப்போய் விடுவான். யோகத்திலே வெற்றி பெற்றவர்களுக்கு மரணமில்லை என்கிறார் அழுகணிச் சித்தர்.

கொல்லன் உலைபோல கொதிக்குதடி என் வயிறு
நில்லென்று சொன்னால் நிலை நிறுத்தக் கூடுதில்லை
நில்லென்று சொல்லியல்லோ நிலை நிறுத்த வல்லார்க்கு
கொல்லென்று வந்த நமன் என் கண்ணம்மா
குடியோடிப் போகானோ!

யோகத்தால் உடலை வலுப்படுத்திக் கொள்ளலாம் என்பது அழுகணிச் சித்த புருஷரின் கருத்தாகும். அண்ட சராசரமெல்லாம் வியாபித்திருக்கும் பரம்பொருளை இந்தப் பிண்டமாகிய உடம்பிலும் காணலாம் என்றே திருமூலரும் கூறுகின்றார். உள்ளத்தைக் கோயிலாக்கி வாழ்ந்த தவசீலராகிய திருமூலர் உடம்பையும் இறைவன் வீற்றிருக்கும் திருக்கோயிலாக பேணவேண்டும் என வற்புறுத்துகின்றார். ஆன்மஞானம் கிடைப்பதற்கு முன்பு இந்த உடம்பைத் துச்சமாகக் கருதி உதாசீனம் செய்தேன். ஆனால் இந்த உடம்புக்குள்ளே தோன்றாத் துணையாக இருந்து செயற்படுகின்ற பரம்பொருளைக் கண்டபின்பு அந்த உதாசீனத்தைக் கைவிட்டு இந்த உடம்பை நன்றாகப் பாதுகாக்க ஆரம்பித்தேன் எனத் திருமூலர் கூறுகின்றார்.

உடம்பினை முன்னம் இழுக் கென்றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேனே.

தாய் தனது பிள்ளையைப் பத்து மாதம் கருவிலே சுமந்து பெற்று எடுக்கிறாள். இறைவன் தாயின் கர்ப்பத்திலே வளரும் சிசுவிற்கு உயிரைக் கொடுத்து இப்பூமிக்கு அனுப்பி விடுகின்றான். பிள்ளை வளர்ந்து வருங் காலத்தில் ஒவ்வொரு பருவத்திலும் வெவ்வேறு விதமான மயக்கங்களுக்கு உட்பட்டு தான் எடுத்த அரிய மானிடப் பிறப்பைச் சிதைத்தும் சீரழித்தும் விடுகிறான். இதனைக் கடுவெளிச் சித்தர் தனது பாடலில் பின்வருமாறு தெளிவாக விளக்குகின்றார்.

நந்தவனத்திலோர் ஆண்டி - அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்
கொண்டு வந்தான் ஒரு தோண்டி - மெத்தக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி.

சித்தர்களுடைய பாடல்களில் சாதாரண மக்களுக்கு விளங்க முடியாத பல பரிபாஷைச் சொற்கள் மிகுதியாக உள்ளன. குறியீடுகள், உருவகம், படிமம் ஆகியவற்றாலான சொற்கள் பல உண்டு. அகராதிகள் சொற்களுக்கு கூறும் நேர்பொருள் அமையாமல் சுற்றி வளைத்தும் யூகித்து அறியுமாறும் பொருள் அறியும் முறைகளைச் சித்தர்கள் பின்பற்றிப் பாடியுள்ளனர். சித்தர்களின் பாடல்களில் விடுகதை, புதிர், உள்ளுறை, குறிப்பு முதலியவை ஒன்றோடொன்று

*பிறரைச் சீர்திருத்தும் கடமையைவிட, தன்னைச் சீர்திருத்திக்கொள்வதே முதல் கடமை.*

பின்னிப்பிணைந்து காணப்படும். சொல்லால் வெளிப்படுத்தமுடியாத, சொற்கட்டுக்குள் அடங்காத உணர்ச்சிவெள்ளம் சித்தர் உள்ளத்தில் பெருக்கெடுத்துப் பீறிட்டு எழுந்துள்ளது. இலக்கண இலக்கிய மரபுகளுக்கோ, சாத்திரக் கோட்பாடுகளுக்கோ, தத்துவக் கட்டுக்கோ அவர்கள் உட்பட்டுப் பாடல்களை இயற்றவில்லை.

சித்தர்களுக்குரிய பொதுவான தன்மையை அழுகணிச் சித்தரின் பாடல்களிலும் காண லாம். கர்ப்பப்பையை பையூர் என்றும், உலகியல் வாழ்க்கையைப் பாழூர் என்றும், தெய்வீக நிலையை அடைவதை மெய்யூர் என்றும் தனது பாடலில் குறிப்பிடுகின்றார். மனித உடலில் உயிர் இருந்தால்த்தான் உடல் பெறுமதி உடையதாகிறது. உயிரில்லாத உடலைச் சவம், பிரேதம், பிணம், மையம் என்றுதான் மக்கள் அனைவரும் அழைப்பார்கள். உயிர் போன இந்த உடற்கூட்டைக் காக்கை கொத்தினால் என்ன? கண்டவர் பழித்தால் என்ன? எல்லாமே எதுவித பிரயோசனமும் அற்ற செயல்களாகவே காணப்படுகின்றன. உடலிலே இருந்து இயக்குகின்ற உயிரைத் திருமூலர் கூத்தன் எனக் குறிப்பிடுகின்றார். ஆடவல்லானாகிய ஆனந்தக் கூத்தனின் நடனம்தான் இந்த உலகை இயக்குகிறது. இதேபோலக் கூத்தனாகிய உயிர்தான் உடம்பினை இயக்குகிறது என்ற உண்மையைத் திருமந்திரம் கூறுகிறது.

காக்கை கவரிலென் கண்டார் பழிக்கிலென்
பாற்றுளி பெய்யிலென்? பல்லோர் பழிச்சிலென்
தோற்பையுள் நின்று தொழிலறச் செய்தூட்டுங்
கூத்தன் புறப்பட்டுப் போன இக்கூட்டையே.

இந்த உடம்பு நாற்றம் பிடித்த உடம்பு. உப்பு இருந்த மட்பாண்டம்போல் அழிந்து கரைந்து போகும் தன்மை உடையது. இந்த உடம்பின் இயல்பை மாற்றி அழியாத உடம்புடன் பிறப்பதற்கு உதவும் மருந்து எதுவும் எனக்குக் கிடைக்கவில்லை. பல்வேறு முயற்சிகள் செய்தும் பயன் எதுவும் கிட்டவில்லை. இவ்வுடம்பை மாற்றிப் பிறக்கக்கூடிய மருந்து எனக்கு கிடைக்குமானால் இந்த ஊத்தை உடம்பை விட்டொழித்து விட்டு உன் பாதத்தைச் சரணாகதி யாகப் பற்றிப் பிடிப்பேன் என்று கண்ணம்மாவை முன்னிலைப்படுத்தி அழுகணிச் சித்தர் பாடுகின்றார்.

ஊத்தைச் சடலமடி! என் கண்ணே! உப்பிருந்த பாண்டம்அடி!
மாற்றிப் பிறக்க மருந்தெனக்கு கிட்டுதில்லை
மாற்றிப் பிறக்க மருந்தெனக்கு கிட்டுமென்றால்
ஊத்தைச் சடலம் விட்டு - என் கண்ணம்மா
உன் பாதம் சேரேனோ!.

கர்ப்பப்பையிலிருந்து உலகில் பிறந்து, உலகியல் இன்பங்களில் அழுந்தி வாழும் எனக்கு முத்திநிலை அடைவதற்குரிய வழி தெரியவில்லை என்கிறார். வீடுபேறு அடையும் வழி தெரிந்தால் பிறப்பையும் இறப்பையும் தவிர்க்கலாம். முத்திநிலையைப் பெறலாம் என்பதைப் பின்வரும் பாடலின் ஊடாக அழுகணிச் சித்தர் விளக்குகின்றார்.

பையூரிலே யிருந்து பாழூரிலே பிறந்து
மெய்யூரில் போவதற்கு வேதாந்த வீடறியேன்
மெய்யூரில் போவதற்கு வேதாந்த வீடறிந்தால்
பையூரும் மெய்யூரும் - என் கண்ணம்மா!
பாழாய் முடியாவோ!

*என் மனதில் அமைதி நிறைந்திருப்பதன் காரணம், என் மனச்சாட்சி சாந்தமாயிருப்பதே.*

ஆத்ம ஞானத்திலே தாகம் கொண்டவர்கள் அடிக்கடி அக விசாரணை செய்து கொள்வார்கள். “வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப் பட்டு ஆள்கின்றாய்” என்றும், துணையிலி பிண நெஞ்சே” என்றும் மாணிக்கவாசகர் தனது நெஞ்சுக்கு அறிவுறுத்துவதை திருவாசகப் பாடல்களிலே காணலாம். “கெடுவாய் மனனே கதிகேள் கரவாது இடுவாய்” என்று அருணகிரிநாதரும், “துயரறு சுடரடி தொழுதெழு மனனே” என்று நம்மாழ்வாரும் மனதிற்கு உபதேசம் செய்யும் பாடல்களைப் பாடியுள்ளார்கள். இதேபோல அழுகணிச் சித்தரும் பாடுகின்றார். நான் தீமைகள் செய்வதற்கு அஞ்சாத வஞ்சகன்; என்னைக் கண்டித்துப் புத்தி புகட்டி நல்வழியிலே திருப்பும் துணைவர் யாரும் இல்லாத பாவி நான்; மனமாரப் பொய் சொல்லும் தன்மை உள்ளவன்; அன்பு சிறிதும் இல்லாத கொடியவன்; கஞ்சாப் புகை குடித்து மயங்கிக் கிடக்கும் வெறியன்; இவ்வாறு என்னுடைய ஒழுக்கம் அனைத்தும் கெட்டு நானும் கெடுவதற்கு முன்பு என்னை அஞ்சாதே என்று கூறி ஆட்கொண்டால் ஆகாதோ என்று பாடுகின்றார்.

அஞ்சாத கள்ளனடி ஆரும் அற்ற பாவி அடி;
நெஞ்சாரப் பொய் சொல்லும் நேயம் இல்லா நிட்டூரன்
கஞ்சா வெறியனடி! கை சேதம் ஆகுமுன்னே
அஞ்சாதே என்று சொல்லி - என் கண்ணம்மா!
ஆண்டிருந்தால் ஆகாதோ!

(கை- ஒழுக்கம், நிட்டூரம்- கொடுமை)

“கொடிது கொடிது வறுமை கொடிது” என்பது தமிழ் மூதாட்டி ஔவையின் வாக்காகும். பொருள் இல்லாதவரை எல்லோரும் இகழ்வார்கள். பொருள் உடைய செல்வரை எல்லோரும் சிறப்புச் செய்வார்கள்.

“இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு”

என்றே திருக்குறளும் கூறுகிறது.

நல்வழியைக் கைவிட்டுத் தீநெறியிலே நடப்போர் துறவிவேடம் பூண்டிருந்தாலும் உணவுக்கும் உடைக்கும் திண்டாடுவார்கள். மானந்துறந்து, நல்லவர், கெட்டவர் என்று பாராமல் அற்பர்களிடமும் சென்று யாசிப்பார்கள். பொருள் வேண்டிக் கையேந்தி நிற்பார்கள். பல்லைக் காட்டிப் பரக்கப் பரக்க விழிப்பார்கள். இந்த நிலையை அழுகணிச் சித்தர் தன்மேல் ஏற்றிப் பாடுகின்றார். நான் இந்த அவலமான நிலையில் இருக்கிறேன். என்னுடைய இந்த நிலையைப் போக்கி எனக்கு அருளாகிய பொருளைத் தரவேண்டும் என்று சக்தியை வேண்டுகின்றார்.

புல்லர் இடத்தில் போய் பொருள் தனக்குக் கையேந்தி
பல்லை மிகக் காட்டிப் பரக்க விழிக்கிறண்டி
பல்லை மிகக் காட்டாமல் பரக்க விழிக்காமல்
புல்லரிடம் போகாமல் என் - கண்ணம்மா!
பொருள் எனக்கு தாராயோ.

(தொடரும்...

உண்மை எப்போதும் கற்பனையைவிட அதிசயமானது.

(தொடர்ச்சி...

# கண்டோம் கதிர்காமம்

– திரு அன்னைதாசன் அவர்கள் –

எல்லோரும் கால் கழுவியபின் ஆலயத்தினுள் செல்கிறோம். ஆலயத்தை மிக அழகாக கச்சிதமாக ஓர் இடக்குமுடக்கான தரை அமைப்பினுள் அமைத்திருக்கும் பாங்கு மிக நேர்த்தியானது. பெரிய நிலப்பரப்பு இல்லை. ஏறக்குறைய 200-300 பேர் மட்டும் தங்கக் கூடிய இடப்பரப்புபோல் இருந்தது. ஆனால் அச்சிறு இடத்திற்குள்ளும் மலைநாட்டிற்கே உரிய ஏற்ற இறக்கம் ஒரு பிரகாரத்திலிருந்து மறு பிரகாரத்திற்குச் செல்வதானாலும் சற்று ஏறி இறங்கித்தான் செல்லவேண்டும். மூல மூர்த்திகளோ இராமர் சீதா இலக்குமணன் அனுமன். ஆஞ்சநேயர்க்கு தனி அமர்வு. சிலைகள் பேசுகின்றன. அண்மையில்தான் சிறு விதானம் மண்டபங்கள் அமைத்தார்கள் போலுள்ளது. வர்ணஜாலம் சிலைகளில் மிளிர்கிறது. இந்திய சிற்பிகளின் கைவண்ணம் சிலைகளில். சீதாதேவியின் நளினம் புடவைக் கொசுவத்திலே... புல்லரிக்கின்றது. நீல வண்ணனாக இராமபிரான். குரங்கை மனிதனாக்கிய கோலம் படு ஜோர். அதுமட்டுமல்ல அந்தக் குரங்கு மனிதனின் பணிவு பார்த்தால் ஓர் எஜமானுக்கு அவன் ஊழியன் எப்படி இருக்கவேண்டும் என்பதை வருங்காலக் குஞ்சுகளுக்கு உணர்த்துவதாகவும் பார்க்கலாம். அங்கும் ஓர் காரியாலயக் காணிக்கைக் கவுண்டர் அந்த நேரத்திலும் திறந்தே இருந்தது. அர்ச்சனை, பூதட்டம் என்பன அடியார்களின் நேர்த்தி நிறைவுக்காக ஒழுங்குபண்ணப்பட்டிருந்தது.

அர்ச்சகர் ஐயாவும் ஆயத்தமாகவே இருந்தார். சுற்றுலா மையம் என்பதை அவதானிக்க முடிந்தது. அடியார்கள் ஒழுங்காக நின்று வழிபடக்கூடிய வகையில் உலோகக் குழாய்களால் ஒழுங்காக்கி இருந்தார்கள். எம்மவர்கள் மிகமிகப் பக்திச் சிரத்தையுடன் தங்கள் விருப்புக்களுக்கு ஏற்றவண்ணம் கற்பூரம் தொடக்கம் அர்ச்சனைத் தட்டுக்களைப் பெற்று ஸ்ரீ இராம சீதா லட்சுமணன் அனுமாருக்கு அந்தணச் சிவாச்சாரியாரூடாக அர்ச்சனை பண்ணி ஆராதித்தார்கள். அச்சிறிய சுற்றுப் பிரகாரத்தைச் சுற்றித் தரிசித்தபின் சற்றுத்தள்ளி கீழே சீதையைச் சிறை வைத்த இடத்திற்குச் செல்லக்கூடியதாக நீல மஞ்சள் நிறத்தினாலான கம்பிக் கிறாதிகள் அமைத்து நீரோடைக்குச் செல்லக்கூடியதாக ஓர் அமைப்பைச் செய்திருக்கிறார்கள். அந்த நேரத்திலும் வெண்நுரைகளைத் தள்ளியவாறு சீதாஎலியா ஆறு ஓடிக்கொண்டிருப்பதைப் பார்க்க முடிந்தது. அந்தச் சிறு மண்டபம் முழுக்க முழுக்க சீமெந்துத் தகட்டினால் (பிளாற்) விதானமிடப்பட்டு மெருகூட்டப்பட்டிருந்தது. அதன் அருகிலே பல கிளைகள் விட்ட ஓர் மரம். இலைகள் எல்லாம் உதிர்ந்து இருந்தது. அந்த மரத்தின் கீழ்தான் சீதாபிராட்டி இருந்தார் என்று எம்முடன் வந்தவர்கள் பேசிக்கொண்டார்கள். நாங்கள் அதனையும் பார்த்து தூர இருந்தவாறே தரிசித்தோம். பிரகாரத்தைத் தரிசித்து இறங்கினால் காப்பெற் தெரு அதற்கு எதிர்த்தாற்போல ஒரு தனியார் வீடோ விடுதியோ தெரியவில்லை. ஓர் அழகான கட்டிடம் அதுவும் தெருவை விஸ்தரித்ததால் தெருவோர கல்சுவரே மதில்களாக கட்டி ஒரு சிறு

*தலைவனாக இருக்க விரும்புபவனுக்கு ஊழியனாகவும் இருக்கத் தெரிந்திருக்க வேண்டும்.*

முற்றம் அமைத்து அதில் ஓர் அழகிய பெண் இடுப்பில் சரிந்த குடத்துடன் ஒயிலாக நிற்கிறாள். அச்சரிந்த குடத்தினூடாக நீர்த்தாரை தொடர்ந்து ஓடிக்கொண்டே இருக்கிறது.

இவள்தான் சீதையோ என எண்ணும் வண்ணமாக அழகுப் பதுமையாக ஆக்கி இருக்கிறார்கள். மிகக்குறுகிய நேரமே நாங்கள் நின்றபடியால் மேற்கொண்டு எவரிடமிருந்தும் எந்தத் தகவலையும் பெறமுடியவில்லை. அன்பு வாசகர்களே உண்மையில் அடியேன் இப்படியான ஓர் தொடரை எழுதப் போகின்றேன் என்று கனவிலும் நினைக்கவில்லை. எதிர்பார்த்திருந்தால் ஒரு குறிப்புப் புத்தகத்தைக்கூட எடுத்துச் சென்றிருக்கலாம். ஆக இவை என் மனப்பதிவும் என் சிறு கைபேசியின் காட்சிப் பதிவுகளையும் மட்டும் கொண்டு பதியப்படுகின்றது. இவை இங்கு வந்து தரிசிக்கமுடியாத எம் ஞானச்சுடர் வாசகர்கள் மானசீகமாக மனக் கண்ணால் சஞ்சரிக்க உதவும் என்ற நம்பிக்கையின் ஓர் ஆவணப்படுத்தலே இவை. தலைப்புக்கூட கண்டோம்... எனவே கண்டவற்றை மையமாக வைத்தே இத்தொடர் பயணமாவதை உணர்ந்து கொள்வீர்களாக.

ஒருவாறு விட்டுவிலக மனமின்றி எல்லோரும் எமது பயணத்தை இலங்கையின் மிகப்பெரும் ஆஞ்சநேயர் தலமான றம்பொடையை நோக்கி எமது பயணம் தொடர்கிறது. ஏறக்குறைய 7.00 மணியளவில் அவ்விடத்திற்குச் சென்றோம். நாம் எதுவித தொடர்பாடலுமின்றி வந்தமையினால் அங்கு எவரும் உட்சென்று தரிசிக்கும் வாய்ப்பை இழந்திருந்தோம். மிக மிகப் பிரமாண்டமான ஆலயம் போலுள்ளது. ஏறக்குறைய 1 கிலோ மீற்றர் சுற்றளவிற்கு எதுவித வேறு குடியிருப்புமின்றி மிகமிக மலைநாட்டு அழகு இட அமைப்பு கொண்ட மலைத் தொடர்ப் பகுதியில் பச்சைப் பசேலென தாவரங்களால் மூடப்பட்டு மிகமிக ஜில்லென்ற குளிர் கொண்டு மிகமிக ரம்மியமாகக் காட்சி தந்தது அச்சூழல். அழகான விருந்தினர் விடுதி, கழிப்பறைகள், மைதானம், பாதுகாப்பு ஒழுங்குகள், வர்த்தகக்கூடம், இவை ஆலய மருங்கில் வீதியில் காணப்பட்டன. வண்ணமயமான விளக்கொளியில் நாம் கண்டவை. அங்கே வாசலைப் பார்க்கின்றோம். மிகப் பிரமாண்டமான சுற்றுமதிலுடன் கூடிய கதவினையே காண முடிந்தது. உள்ளே இருக்கும் ஆலய அமைப்பையோ பிரமாண்டமான ஆஞ்சநேயர் சுவாமியையோ தரிசிக்கும் வாய்ப்புக் கிட்டாதது எம் எல்லோருக்கும் மிக மனவருத்தமாக இருந்தது. அங்கு காவல் கடமையில் ஈடுபட்டவர்களுடன் சில உரையாடல்களை மேற்கொள்ளக்கூடியதாக இருந்தது. எம்முடன் வந்தவர்கள் அவர்களுடன் உரையாடினர். எனக்குப் பாஷைப் பிரச்சினையாக இருந்தபடியால் அதில் பங்குகொள்ள முடியவில்லை. ஆனால் இவ்வாலயத்தை ஏறக்குறைய 5-6 ஏக்கர் நிலப்பரப்புள்ள இம்மலைப்பிரதேசத்தினை தம் வசமாக்கி எங்கள் சின்மயா மிஷன் நிறுவனத்தினர் இம் மிகப்பெரும் ஆஞ்சநேயர் சுவாமிக்கு ஆலயத்தை அமைத்து ஓர் பிரதான வழிபாட்டுத் தலமாகவும், சுற்றுலா மையமாகவும் விளங்க வைத்து இதனூடாகத் தமது ஆன்மீகத் தொண்டு, சேவைகளை நடாத்தி வருவதை அறிய முடிந்தது. தற்பொழுது சுவாமி சைதன்யா அவர்கள் மூலமாக எமது யாழ்ப்பாணத்திற்கும் சின்மய மிஷனின் பணி பரவி வருவதை அடியார்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன். இவற்றை எல்லாம் முடித்து அதிகாலை 8.00 மணியுளவில் மீண்டும் சந்நிதியானிடம் வந்து 27.03....

(தொடரும்...

*நற்செயலைச் செய்வதற்கு எந்த நேரமும் ஏற்ற நேரமே.*

உ

# ஞானச்சுடர் 2016 பங்குனிமலர்

# சித்திரைமாத வாராந்த நிகழ்வுகள்

01.04.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

விடயம் :- "வீணை இசை"

வழங்குபவர் :- செல்வி மாணல் பாக்கியநாதன் அவர்கள்

(பக்கவாத்திய சகிதம்)

---

08.04.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "ஆன்மீக விழுமியங்கள்"

வழங்குபவர் :- திருமதி விஜயகுமாரி முருகேசபிள்ளை அவர்கள்

[ஆசிரிய நிலையம் - விரிவுரையாளர், புளியங்குளம்]

---

15.04.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

"இன்னிசை"

(பக்கவாத்திய சகிதம்)

---

22.04.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "கந்தபுராணம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை]

---

29.04.2016 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்

## ஞானச்சுடர் சித்திரைமாத வெளியீடு

220ஆவது மலர்

வெளியீட்டுரை :- திரு க. சத்தியதாஸ் அவர்கள்

மதிப்பீட்டுரை :- திருமதி தவமலர் சுரேந்திரநாதன் அவர்கள்

[இளை. அதிபர்]

பதிவு இல. *QD/160/NEWS/2016*

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

